www.padippakam.com

161

செ.க

ணைத்து.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணடிமை தீர

செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-108.

படிப்பகம்

www.padippakam.com

குமரன் பப்ளிஷர்ஸ்
முதற்பதிப்பு : ஏப்ரல் 1995

(C)

விலை ரூ. 28

| | | |
|---|---|---|
| Title | : | PENNADIMAI THEERA (WOMEN LIBERATION |
| Author | : | Se. GANESALINGAN |
| Size | : | 18 × 12.5 cm |
| Pages | : | 168 (164 + iv) |
| Paper | : | Cream Wove 10.5 Kg. |
| Types | : | 10 Point |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs. 28/- |
| Publishers | : | KUMARAN PUBLISHERS<br>27, IInd Street,<br>Kumaran Colony,<br>Vadapalani, Madras-600 026. |
| Printers | : | Chitra Printo Graphy,<br>Madras-14. |

# பொருளடக்கம்

| | | பக் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | குடும்பமும் பெண்ணும் | 13 |
| 2. | கணவனின் மனைவி | 18 |
| 3. | மதமும் மங்கையும் | 24 |
| 4. | நிலப்பிரபுத்துவத்தின் அடிமை | 30 |
| 5. | முதலாளித்துவம் விடிவல்ல | 35 |
| 6. | பெண்மேல் வன்முறை | 41 |
| 7. | பாலியலான சுரண்டல் | 46 |
| 8. | சீரும் சீதனமும் | 54 |
| 9. | கருத்தியல்களின் ஆதிக்கம் | 60 |
| 10. | பாலுணர்வும் பெண்களும் | 63 |
| 11. | அரசியலில் ஏமாற்று | 68 |
| 12. | விளம்பரத்தில் பெண் கவர்ச்சி | 72 |
| 13. | பெண் 'சாதி' | 76 |
| 14. | குடும்பச் சண்டைகள் | 80 |
| 15. | தகாத பாலுறவும் பிராய்டும் | 84 |
| 16. | ஆண்கள் உற்றுப் பார்த்தல் | 89 |
| 17. | பாலியலும் வர்க்கமும் | 93 |
| 18. | சொற்களும் பழமொழியும் | 99 |
| 19. | திரைப்படத்தில் பெண் | 102 |
| 20. | கலை இலக்கியங்களில் பெண்ணடிமை | 108 |
| 21. | மனித இன மறு உற்பத்தி | 116 |
| 22. | எதற்காகக் கர்ப்பம்? | 122 |
| 23. | அழகு கவர்ச்சி காதல் திருமணம் | 126 |
| 24. | சமூக உற்பத்தியில் பெண்ணின் பங்களிப்பு | 134 |
| 25. | பெண்ணடிமையும் உற்பத்தியும் | 138 |
| 26. | குடும்பத்தின் தோற்றம் வளர்ச்சி எதிர்காலம் | 142 |
| 27. | பெண்ணடிமை தீர | 149 |

www.padippakam.com



அங்கு குடும்ப வேலைகளை சமூக உற்பத்தியாக்க முடியா நிலையும் பெண்களை பூரண விடுதலை அடைய விடாது தடுக்கிறது. பாதிப்பங்கு அரசியலாதிக்கத்தை அவர்களால் பெறமுடியவில்லை. பெண்களும் தம் உயர்வை நிலை நாட்ட முடியாது குடும்பம் என்ற சிறையுள் அங்கும் அடங்கிக் கிடப்பதே விசித்திரமானது; வேதனையாகவும் உள்ளது.

பெண்ணினம் ஆணினத்திலும் தாழ்ந்தவர்கள் என்ற தவறான கருத்தை ஆண்கள் தம் ஆதிக்கத்தால் எல்லோர் சிந்தனையிலும் நிலைநாட்டி விட்டனர். பாட்டாளிகள் தாழ்ந்தவர்கள், கூலி அடிமைகள் என முதலாளிகள் இன்று வரை கூறிவரவில்லையா? அதைப்போலவே பெண்ணினம் பற்றியும் ஆணின வெறியர் பரம்பரையாக புகட்டி வந்தனர். பாட்டாளிகளை அடக்கிஆள அரசு வன்முறை அரசு யந்திரங்களையும் பயன்படுத்தவில்லையா? அதே போலவே பெண்ணினத்தையும் வன்முறையாலும் ஆணாதிக்க அரசு, மதம், குடும்பம், கலை இலக்கியம் போன்ற கருத்தியல்களாலும் ஆணினம் அடக்கி ஆண்டு வந்துள்ளது.

'உலகின் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களிலும் பார்க்க இருபங்கு நேரம் உழைக்கின்றனர். நாள் தோறும் சராசரி 15 மணி நேரத்திற்குக் குறையாது உழைத்துனர்; உலகின் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கின்றனர்; உலகின் பாதி உணவை பெண்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் கிடைப்பதோ உலகின் பத்தில் ஒரு பங்கு வருமானம்; சொத்துடைமையில் நூற்றில் ஒரு பங்கிற்கும் குறைவானது.'

இவ்வாறு உலகப் பெண்கள் நிலை பற்றிய ஐ. நா. சபையின் 1985ம் ஆண்டறிக்கை கூறுகிறது. இத்தகைய சமத்துவ மற்ற அநீதியான சுரண்டலான சமூகம் நீடிக்கும் வேளை ஆணாதிக்க உலகம் ஜனநாயகம், சுதந்திரம்,

www.padippakam.com



நாகரிகம், பண்பாடு, கலாச்சாரத்தில் வளர்ந்து வருகிறோம் என்று கூறுவது எத்தனை ஏமாற்று; பொய்மை.

விலங்கடிமைக் காலகட்டத்தில் உரோமபுரியில் ஒரு பகுதியில் அடிமைகள் உழைக்க மறுபுறத்தில் எஜமானர்கள் ஜனநாயகம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதுபோலவே இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலகம் பௌதிக விஞ்ஞானத்திலும் புற நிலையிலும் வளர்ந்திருக்கலாம். ஆனால் பண்பாடு, கலாச்சாரத்தில் இன்னும் உலகம் வளர்ச்சியடையவில்லை என்பதற்கு பெண்ணினத்தின் இன்றைய நிலையே தக்க எடுத்துக்காட்டாகும்.

பாட்டாளியின் உழைப்பு சுரண்டப்படுவதிலும் மோசமாக பெண்களின் அடிமை உழைப்பு முதலாளிகளாலும் மற்றும் அனைத்து ஆணின வர்க்கங்களாலும் அபகரிக்கப்படுகிறது; பாட்டாளிக் கணவன் கூட பெண் உழைப்பை அத்துமீறிச் சுரண்டும் நிலை இன்றும் நிலவுகிறது. இத்தகைய சமூக அமைப்பை முதலாளித்துவம் தன் வர்க்க நலனுக்காக பலாத்கார அரசு அமைப்பு மூலம் பேணி வருகிறது. பெண்களின் அடிமை உழைப்பு அபகரிக்கப்படும் முறையை நன்கு கிரகிக்கும் வரை பெண்ணடிமையின் அடிப்படைக் காரணங்களை நன்கு புரிந்து கொள்ள முடியாது. பல இடங்களில் இவை விரிக்கப்பட்ட போதும் சிறப்பாக அத்: 21ல்; 'மனித இன மறு உற்பத்தி'யில் கூறப்பட்ட விளக்கத்தை நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும்.

பெண் விடுதலை இயக்கங்க்ள் ஆண்களோடு பெண்களையும் அனைத்திலும் சரிசமமாக நடத்துவதற்கே போராடுகின்றன. ஆயினும் முதலில் பெண்கள் தாம் ஆணினத்திலும் உயர்ந்தவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தம் இன்றைய அடிமை நிலையை பெண்கள் அனைவரும் உணரச் செய்ய வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மூன்று பிரதான அம்சங்களில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க மிக உயர்ந்த நிலையில் உள்ளனர் என்பது என் முடிவான கருத்தாகும். அவையாவன :

1) பெண்களால் மட்டுமே பொருளுற்பத்தியிலும் மனித இன மறு உற்பத்தியிலும் ஈடுபட முடியும். அதாவது மனித இனத்தின் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, வீடு, பிற நுகர் பண்டங்கள் அனைத்தையும் பெண்களால் உற்பத்தி செய்ய முடியும். இவ்வுற்பத்திக்கு வேண்டிய கருவிகளையும் உற்பத்தி செய்ய இயலும். அத்தோடு, மனித இனத்தையும் உற்பத்தி செய்யப் பெண்களால் மட்டுமே முடியும். இது ஆண்களால் இயலாதது. பெண்கள் மனித இன மறு உற்பத்தியில் ஈடுபட மறுப்பின் மனித இனமே அழிந்து போய்விடும். சுருங்கக்கூறின், ஆண்கள் போல கரத்தாலும் மூளையாலும் மட்டுமல்ல உடலால் மனித இனத்தை உற்பத்தி செய்து, மார்பால் பால் கொடுத்து வளர்க்க வல்லவர்கள் பெண்களே.

2) மாதவிலக்கு, கர்ப்பம் ஆகிய துன்பச் சுமைகளுடன் சமையல், வீடுபார்த்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலான வேலைப்பளுக்களைச் சுமந்து, ஓய்வு நாளின்றி நாள் தோறும் 15-18 மணி நேரம் உழைக்கக்கூடிய வலுவும் திறமையும் கொண்டவள் பெண்ணே. (இக்கட்டான சில வேலைகளைச் செய்யும் ஆண்கள் சமூகத்தின் ஒரு சிறு பகுதியினரே. பெண்களிலும் ஒரு பகுதியினரால் இக்கஷ்டமான தொழில்களில் ஈடுபட முடியும்)

3) பெண்களை ஆண்கள் உற்றுப் பார்க்கும் (male-gaze) உளவியல் ரீதியான பாலியல் சார்ந்த பலவீனம் ஆண்களிடம் மட்டுமே உள்ளது. ஆண்களைப் பெண்கள் இவ்வாறு நோக்குவது பரவலாகக் கிடையாது. உளவியல் முறையில் நோக்கும் வேளையும் பெண்ணினமே உயர்ந்த நிலையில் உள்ளது. அத்; 16ல் விபரமாக விளக்கியுள்ளேன்.

www.padippakam.com



ஆண்களே சொத்துடையவர்களாகவும் பெண்கள் அடிமை நிலையிலுள்ள பாட்டாளிகளாகவும் உள்ளனர். ஆண்களுடைய பரம்பரையையும் சொத்துரிமையையும் எடுத்துச் செல்வதற்கான குழந்தைகளைப் பெற்றுத் தருவ தற்காக கணவனுடன் மட்டுமே பாலுறவு கொள்ளும் கட்டுப் பாடு கொண்டவர்களாக இன்று பெண்கள் ஆக்கப் பட்டுள்ள னர். பாட்டாளிகளால் மட்டுமே சமத்துவமான புதிய உலகைப் படைக்க முடியும் என்பதே மார்க்சிய கோட்பாடு.

பெண்கள் விடுதலை பெற முதலாவதாக தம் அடிமை நிலையையும் அதன் அடிப்படைக் காரணங்களையும் அறிந்து கொள்ளவேண்டும். இந்நிலை பல்வேறு கோணங்களாக இந் நூலில் ஆராயப்பட்டுள்ளது. அடுத்ததாக, வரலாற்றுப் பொருள் முதல்வாத ரீதியாக தம் இனத்தின் ஏற்றத்தையும் அதன் வீழ்ச்சியையும் பெண்கள் அறிந்து கொள்ளல் வேண்டும்.

பெண்கள் தம் அடிமை நிலையை உணர்வதோடு, ஆண் கள் தம் ஆதிக்க அடக்குமுறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

பெண்ணே புராதன சமூகத்தில் ஆதிக்கம் பெற்ற வளாக இருந்தாள். எந்த ஆணும் தன் குழந்தை என்று அன்று உரிமை கொண்டாட முடியவில்லை. குழந்தைகள் தாயின் பின்னாலேயே திரிந்தன. உணவுதேடி வளர்க்கும் பொறுப்பு பெண்ணுடையதாகவே இருந்தது. ஆயினும் குழுக்களாக வாழ்ந்ததினால் எவரும் உணவிலேயோ இருப் பிடத்திலேயோ தனி உரிமை பேசவில்லை. பாலுறவில் எவ்வித கட்டுப்பாடும் இருந்ததில்லை. 'சகோதரி மனைவி யாவது அன்றைய தர்மம்' என்று மார்க்ஸ் விவரித்தார். இதை காட்டுமிராண்டிக் காலமென மார்க்கன் பிரித்தார். தனிச்சொத்துரிமையும் குடும்பமும் ஏற்படும்வரை பொறாமை யும் சுயநலமும் இருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



தனிச் சொத்துரிமையைப் பேணுவதற்காகவே தகாத பாலுறவு என்ற சில கட்டுப்பாடுகள் நெருங்கிய இரத்த உறவுகளிடை மட்டும் ஏற்பட்டன. இன்றும் இவை பல்வேறு சமூகங்களில் பல்வேறு முறையாகக் கைகொள்ளப் படுகின்றன. எம் நாடுகளில் பெற்றார் உடன் பிறந்தவர், ஆண் வழி தவிர்த்து அக்கா மகள், அத்தை மகளிடை திருமணம் வழமையிலுள்ளது.

புராதன சமூகங்களிடை நிலவிய பாலுறவு முறைகளை கேலி செய்யும் இன்றைய 'நாகரிகமான' சமூகம் 70 வயதான கிழவன் 16 வயதான பெண்ணை சட்ட முறையாக திருமணம் செய்ய அனுமதிக்கிறது. திருமணம் என்பது பாலுறவுக்கு அனுமதி வழங்குவதாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏங்கெல்ஸ் 'குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்' பற்றிய நூலில் மார்க்கன் என்ற அறிஞர் புராதன சமூகத்து காட்டுமிராண்டி. அநாகரிக, நாகரிக நிலைகளில் நிலவிய சமூக, குடும்ப அமைப்புகள் பற்றி சிறப்பாக ஆராய்ந்துள்ளார். இவற்றை அத்: 26ல் விபரமாக எழுதியுள்ளேன். அக்காலத்தில் கிடைத்த விபரங்களை முன் வைத்தே அவரது ஆய்வு இருந்தது. இன்றைய மானிடவியலாய்வாளர் பால்வேறுபாடு பார்க்காத சமூகக் கால கட்டம் ஒன்று இருந்தது எனக் கற்கால குகை ஓவியங்கள், பிற ஆதாரங்களை முன் வைத்துக் கூறுகின்றனர். பால்வேறுபாடு எவ்வகையிலும் வாய்ப்பானதாக அங்கு கொள்ளப்படவில்லை. தன்னொத்த பாலினத்தவர் மீதே பாலினவிருப்புக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை.

உழைப்பு, உணவு, பாலின்பம், விளையாட்டு இயல்பாக மனித குழுக்களிடை இருந்தன. இக்காலகட்டத்திலிருந்து மார்க்கன் கூறும் காட்டுமிராண்டிக் காலம் முடிந்து அநாகரிக காலம் வரை தாயின் பொறுப்பிலேயே குழந்தைகள் இருந்தன. அநாகரிகக் கால கட்டத்திலே

www.padippakam.com



மனித இனம் பயிர்த் தொழிலில் இறங்கி நிலை பெறத் தொடங்கியது. அத்தோடு, முன் கூறியபடி வேலைப் பிரி வினை பாலினத்தை ஒட்டி அமைந்து தாய் வழிச் சமுதா யத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது. 'தாயுரிமை தூக்கி எறியப்பட்டது உலக வரலாற்றில் பெண்ணினத்தின் தோல்வி' என ஏங்கெல்ஸ் வர்ணித்தார். இவ்வீழ்ச்சி 4000 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு, முதலாளித்துவ சமூக அமைப்புடன் வேகமடைந்து இன்று உலக அரங்கில் தாய் வழிச் சமுதாயம் அருகி மறைந்து வருகிறது. இன்றைய நிலை ஆணாதிக்கத்தின் உச்சக்கட்டமாகும். ஆயினும் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சோஷலிசப் புரட்சிகளும் பெண்களது விடுதலைப் போராட்டங்களும் விஞ்ஞான வளர்ச்சியும் பெண்ணினத்தை மீண்டும் புது உலகிற்கு வழி காட்டி வருகிறது.

மனித வரலாற்றில் விவசாய உற்பத்திக்கு அடுத்து கைத்தொழில் உற்பத்தி ஏற்பட்டது. இவ்விரண்டாவது உற்பத்தி ஏற்படுத்திய வேலைப் பிரிவினை கொணர்ந்த வர்க்க முரண்பாடே முதலாவது வேலைப் பிரிவினையால் ஏற்பட்ட முரண்பாட்டையும் உடைக்க வழிகாட்டியது. முதலாவது முரண்பாடு என்பது என்ன?

வேலைப் பிரிவினை என்பது உற்பத்தி உறவில் ஏற்படும் முரண்பாடு. ஆண், பெண்களிடை ஏற்பட்ட வேலைப் பிரிவினையே சமுதாய வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய வர்க்க முரண்பாடாகும். இதைத் தொட்டு உலகில் தோன்றிய முதலடிமை பெண்ணினமே.

வேலைப் பிரிவினையைத் தொடர்ந்து குடும்பம் என்ற அமைப்பு தனிச் சொத்துடைமையுடனும் ஒரு புருஷ மண முறையுடனும் ஏற்பட்டு பெண்ணடிமைக்கு வித்திட்டது. பாட்டாளிபோல ஒன்றுபட்டுப் போராட முடியாத நிலையில் பெண் தனித்தனி குடும்பம் என்ற சிறையுள் அடைக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டான். ஆண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடும் வேளை பெண்கள் தனி உற்பத்தியில், குடும்பச் சிறையில் ஈடுபட நேர்ந்தது.

குடும்பம் என்ற அமைப்பு ஆணினத்தின் நலனுக்காக ஆண்களால் ஏற்படுத்தப்பட்டதேயல்லாது பெண்ணினத்தின் நலனுக்காக அல்ல. இவ்வமைப்பின் மூலமே பெண்ணினத்தை அடிமையாக, சிறை வைக்க முடிந்ததை இன்று பல கோணங்களில் காண்கிறோம். இந்நிலையை விரிவாக விளக்குவதும் இந்நூலின் முக்கிய கோணங்களில் ஒன்றாகும்.

இன்றைய அரசு ஆளும் வர்க்கச் சுரண்டலுக்கு குடும்பம் என்ற கருத்தியல் சார்ந்த அரசுயந்திரத்தைப் பயன்படுத்துவது பற்றி அல்தூசர் போன்ற மார்க்சிய அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ளனர். மேல் மட்ட அமைப்புச் சார்ந்த கருத்தியல்களில் குடும்பமும் முதன்மை பெறுகிறது. மேலும் மதம், இன்றைய கல்வி முறை சார்ந்த கருத்தியல்களும் குடும்ப அமைப்பை வலியுறுத்துகின்றன.

குடும்ப அமைப்பை உடைப்பதன் மூலமே பெண் விடுதலையைக் காண முடியும் என்பது சமூக அமைப்பை உடைப்பது என்பதல்ல. குடும்ப அமைப்பு ஏற்படாத காலகட்டத்திலும் சமூக அமைப்பு இருக்கச் செய்தது. குடும்ப அமைப்பு என்பது சமூக அமைப்பின் சிறு கூறு, அது பெண்களுக்கு இன்று சிறையாக உள்ளது என்பதைப் பல கோணங்களில் காண்கிறோம்.

குடும்பத் தலைவனான ஆண் மகன் தன் தனிச்சொத்துகளுடன் குடும்பத்தவர்களையும் தன் சொத்தாகக் கருதுகிறான். இவ் யதார்த்த நிலையை அறிந்து தனி நபர்களை ஆட்சி செய்வதிலும் பார்க்க குடும்பங்களின் மூலம் அடக்கி ஆள்வது சுலபம் என்பதை அரசும் அறிந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



சீனப் புரட்சிக் காலத்தில் சீனாவை ஆண்டு கொண்டிருந்த சியாங்கேஷேக் என்பவன் 1932-ல் 'பயோசியா' என்ற குடும்ப அமைப்பு வழி மூலம் பாசிச ஆட்சியை நிறுவி எதிர்ப் புரட்சியை நடத்த சிறந்த வழி ஒன்றைக் கடைப்பிடித்தான். ஒரு குடும்பத்தின் கீழ் பத்துக் குடும்பத்தின் பொறுப்பைத் திணித்தான். பின்னர் இப்பத்துக் குடும்பமும் ஒவ்வொரு பத்துப் பத்துக் குடும்பத்திற்கு பொறுப்பாகப் பணித்தான். இம்முறை மூலம் சமுதாயம் முழுவதையுமே கட்டி வைக்கும் வழியை அமைத்தான். இக்குடும்பப் பொறுப்பு முறை அவனது ஆட்சியை, அடக்கு முறையை எளிதாக்கியது. தலைவர் மாவோ புரட்சியின் மூலமே இத்தொடர் சியான குடும்ப அமைப்பு ஆதிக்கத்தை உடைத்தெறிந்தார்.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் பெண்கள் ஆண்கள் போல எல்லாத்துறைகளிலும் உழைக்கின்றனர். லாரி, டாக்சி, டிராக்டர், விமானம் ஓட்டுதல் முதல் கனரக யந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் ஆண்களோடு சமனாக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். முதலாளித்துவ நாடுகளில் பெண்கள் நள்ளிரவில் தனியே செல்ல முடியாத நிலை இன்றும் உள்ளது.

ஆண்கள் போலவே நள்ளிரவில் வேலை முடித்து வரும் பெண்களையும் இரவில் டாக்சி ஓட்டும் மாதர்களையும் சோஷலிச நாடுகளில் சர்வ சாதாரணமாகக் காணலாம், விபசாரம் என்ற மிகப் பழைய தொழில் முற்றாக ஒழிக்கப் பட்டுவிட்டது. முதலாளித்துவ நாடுகளில் லைசென்சு பெற்ற தொழிலாக இது இன்றும் நடைபெறுகிறது. ஒருபுறம் குடும்பப் பெண்கள், மறுபுறம் விபசார விடுதிகள், முதலாளித்துவத்தின் இம் முரண்பாடு பெண்ணடிமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. தாய்க்குலத்தின் இழிநிலைகள் எங்கள் நாடுகளிலும் மலிந்துள்ளன.

பொருளாதார வாய்ப்புப் பெற்று தம் வேலைகளைக் கூலி உழைப்பாளரைக் கொண்டு செய்விக்கும் பெண்களோடு

படிப்பகம்

www.padippakam.com



உயர் பதவி வாய்ப்புப் பெற்று பெண்ணடிமை நிலை பற்றிக் கவலைப்படாத பெண்களும் இந்நூலின் ஆய்வி லிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பெண்ணினத்தில் 10 சதவீதத்திற்குக் குறைவானவர்கள் இவர்களும் அடிமை நிலையிலேயே உள்ளனர். என்பதை நாம் மறந்து விடப்படாது.

தனித்தனி அத்தியாயங்களாகவே இந்நூலை எழுதி யுள்ளேன். சில கருத்துக்கள் அழுத்தந் தருவதற்காக ஆங் காங்கே திரும்பக் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். புதிய அத்தியாயத்திற்கும் அவை ஒட்டி நிற்பதையும் காண லாம். மார்க்சிய பார்வையில் அனைவரும் புரியக் கூடியதாக எளிமையாகக் கூற முயன்றுள்ளேன். இதனால் சில இடங் களை ஆழமாக ஆராய்வதைத் தவிர்க்க நேரிட்டது.

இந்நூலில் கூறப்பட்ட பல கருத்துகள் சென்ற நூற்றாண்டிலேயே மேல் நாடுகளில் பல அறிஞர்களாலும் இயக்கங்களாலும் முன் வைக்கப்பட்டவை. அவை கூட நம் நாடுகளில் இன்று அறியாதவையாயும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகவும் உள்ளன.

ஐ. நா. சபையால் இளைஞர்களின் ஆண்டு என பிரகடனப்படுத்திய ஆண்டில், அவர்களின் எதிர்கால நலனுக்காக இந்நூலை எழுதி வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறேன். முன்னைய பரம்பரை தம் அடிமை நிலையை உணராதபோதும் புதிய தலைமுறை சார்ந்த நிலையை பெண்கள் இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து விடுதலை பெற்ற புதிய சமூகத்தைக் கட்டி எழுப்ப முன்வர வேண்டும் என விரும்புகிறேன்.

இந்நூலை எழுதியபின் சென்னையிலுள்ள பெண்களின் விடுதலை இயக்கம் சார்ந்த பலரைப் பேட்டி கண்டு அவர் களது கருத்துக்களையும் அறிந்து ஆங்காங்கே திருத்தங்கள் செய்தேன். பெரும்பாலான என் கருத்துகளையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



அவர்களும் ஏற்றுக் கொண்டனர். பேட்டியில் உதவிய மாதர் விடுதலை இயக்கம் சார்ந்த அனைவர்க்கும் என் நன்றி.

கையெழுத்துப் பிரதிகளைப் படித்து திருத்தங்கள் செய்தும் ஆலோசனைகள் வழங்கியும் உதவிய நண்பர்கள் தெய்வசுந்தரம், சிகாமணி, தனராஜ், யோகநாதன் ஆகியோருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

உலகத்தோடு பெண் எவ்வாறு அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளாள் என்ற தம் கருத்தை ஓவியர் மணியம் செல்வன் அட்டையில் அழகுற வரைந்து உதவியுள்ளார். அவருக்கு என் அன்பு. இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய நண்பர் சீதாராமன், அச்சகத் தொழிலாளர்கட்கு என் நன்றி.

இந்நூலைக் கற்பவர், சிறப்பாகப் பெண்கள், பிறரும் படிக்க இந்நூலை வழங்கும்படி வேண்டுகிறேன். இந்நூல் பற்றிய விமர்சனம், கூறப்படாத செய்திகள், கருத்துகளைப் பதிப்பக முகவரிக்கு எழுதி உதவலாம்; அடுத்த பதிப்பிற்கு அவை பயன்படும். நன்றி.

சென்னை
6—7—85

செ. கணேசலிங்கன்

www.padippakam.com

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இந்நூலின் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூல் வெளி வந்ததும் பரவலாகப் படிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டது. பெரும்பாலான கருத்துகளை ஏற்றுக் கொண்ட பெண்களும் எம்மால் இவற்றைக் கடைப்பிடிக்க முடியாது என்ற தமது அவலநிலையை வெளிப்படுத்தினர். அது உண்மையே. அவர்களிடம் விழிப்பு நிலையை ஏற்படுத்துவதே இந்நூலின் ஒரு நோக்கமாகும்.

அடிமை, பண்ணை அடிமை நிலையில் உணவு, உடையையே உழைப்பின் பயனாக உழைப்பவர்கள் எதிர் பார்த்தனர். முதலாளித்துவத்தின் பின்னரே உழைப்புச் சக்தியையும் உபரி அபகரிக்கும் முறைகளையும் உணர்கிறான். அதுபோலவே பெண்களும் அவற்றை உணர்ந்து விடுதலையை நோக்கும் காலம் வந்து கொண்டிருக்கிறது. இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகும்.

பெண் விடுதலை பெற, இன்றைய குடும்ப அமைப்பு உடைந்து விடலாம் என்ற கருத்து கற்ற பல பெண்களிடையேயே கலக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை அறிவேன். அதை முடிவு செய்வது நானல்ல. வரலாறே முடிவுகட்டும். புராதன சமூகத்தில் குடும்ப அமைப்பு இல்லாமலே மனித இனம் வாழ்ந்தது. ஆணும் பெண்ணும் சுதந்திரமாக வாழ்ந்தனர். அந்நிலை மீண்டும் ஏற்படலாம். இதில் வியப்பில்லை.

15—11—89 **செ. கணேசலிங்கன்**

www.padippakam.com

# 1. குடும்பமும் பெண்ணும்

இன்றைய சமூக அமைப்பில் குடும்பம் ஒரு தனிப் பொருளாதாரக் கூறாக அமைகிறது. பெண் அக்குடும்ப அமைப்புக்குள் அடங்கி ஒடுங்கி வாழ நேரிட்டுள்ளது.

பெண் குழந்தையாகக் குடும்பத்தில் பிறந்ததுமே வேண்டாத உருவம் ஒன்று குடும்பத்தில் வந்து விட்டதாகவே குடும்பத்தவர் அனைவரும் கருதிக் கொள்கின்றனர். அன்றே, வேண்டாத பெரிய பொறுப்பு ஒன்று வீட்டுக்குள் புகுந்துவிட்டதாகவும் குடும்பத்தில் எண்ணிக் கொள்ளு கின்றனர். பெற்ற தாயே அவ்வாறு கருதும் கேவல நிலைக் குச் சமூக அமைப்பு இறங்கிவிட்டது.

அவயவக் குறைவு எதுவுமில்லாது ஒரு குழந்தை கிடைத்திருப்பதாக எண்ணி மகிழ்பவர் அரிதே. ஆண் பிள்ளைகளுக்கு அடுத்த படியிலேயே பெற்றோர் பெண்ணை வீட்டில் கவனிக்கின்றனர். ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையுடனே குடும்பத்தில் பெண் வளர்க்கப் படுகிறாள்.

பெண்களின் கல்வியைப் பற்றிக்கூடக் குடும்பத்தவர் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. இந்தியாவில் பெண் ணுக்கு வயது வந்ததும் பெரும்பாலும் கல்வியை நிறுத்தி விடுகின்றனர். பின்னர் அவளின் திருமணம் பற்றியே பேச்சு. வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்திருப்பது பாதுகாப் பற்றது எனக் குடும்பத்தவர் கொள்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



பெரும்பாலான குடும்பங்களில் தம்பி தங்கையரைக் கவனிப்பது, வீட்டைச் சுத்தம் செய்வது, சமையலில் உதவுவது ஆகியன சிறு வயதிலேயே பெண்மேல் சுமத்தப் படுகின்றன; திருமணமாகும் வரை பெற்றாரின் சொற் களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவளாகிறாள்.

பின்னர் அவளுடைய விருப்பு வெறுப்புகளைப்பற்றிக் கவலைப்படாது குடும்பத்திற்கமைவான சாதி, சமயம், சீதனம், தொழில் உள்ள ஒருவனிடம் மதச்சடங்குகளுடன் பெண் ஒப்படைக்கப்படுகிறாள்; மற்றோர் குடும்பத்திற்கு அடிமையாக அனுப்பப்படுகிறாள். பிறந்ததும் தந்தையின் பெயருடன் இணைத்துத் தன் பெயரைக் கூறி வந்த அப் பெண் தற்போது கணவனின் பெயருடன் இணைத்து அல்லது அவனது குடும்பப் பெயருடன் சேர்த்துத் தன் பெயரைக்கூற வேண்டியவளாகிறாள்.

புகுந்த குடும்பத்தில் கணவனுக்கு மட்டுமல்ல, அக் குடும்பத்திற்கே அடங்கி நடந்து உழைக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. பாகம் பிரிக்காத கூட்டுக் குடும்பமாயின் மாமன் மாமியின் சொற்படிக் கேட்டு நடக்கவேண்டும்; மற்றும் வீட்டிலுள்ள பெண்களோடு நாள் பூராவும் உழைக்க நேரிடுகிறது.

குடும்பத்தின் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள், வழமைகள், சடங்கு முறைகள், ஒழுக்க வரம்புகள் அனைத் திற்கும் அவள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். பிறந்து வளர்ந்த வீட்டிற்குத் தலை தீபாவளியின்போது அல்லது முதற் பிரசவத்திற்கே பெரும்பாலான பெண்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பெண்களுக்குரிய தனித்துவம், சுதந்திரம் என எதுவும் கிடையாது.

குடும்பத்தில் பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அருகே நிற்பதற்கோ, அறியாதவர் வரும்போது எதிர் கொண்டு பேசுவதற்கோ பெண்கள் அனுமதிக்கப்

www.padippakam.com



படுவதில்லை. குடும்பத்தில் ஆண்கள் உணவுண்ட பின்னரே பெண்கள் உண்வுண்ண வேண்டும். சடங்கு முறைகளின் போதும் இந்நிலையைக் காணலாம். விருந்தினர்களை ஆண்கள் அழைத்துவர, ஆக்கிய உணவைச் சில வேளை களில் அனைவருக்கும் பகிர்ந்துவிட்டுப் பெண்கள் பட்டினி யாக இருப்பதும் குடும்பங்களில் வழக்கமாகும். உணவை அதிகமாக ஆக்கினாலும் விரயம் செய்வதாகக் குடும்பத்தில் கண்டிப்பார்கள்.

ஆணுக்குத் தரமான உணவும் பெண்ணுக்குக் குறைந்த தரமுள்ள உணவும் கிடைப்பதும் வழக்கம். உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கு அழகு எனப் பட்டினி போட்டு உறுதியற்ற உடற்கட்டுடன் பெண்கள் வாழ்வதைக் காணலாம். சிறு வயதிலேயே ஆண் பிள்ளைக்குத் தனி உணவும் பெண் குழந்தைக்கு வேறு உணவும் தருவதைக் காணலாம். ஆண் குழந்தைகளுக்கு நீண்ட காலத்திற்குத் தாய்ப்பால் கொடுக் கப்படுகிறது.

பெண்கள் நோயுற்ற வேளை குடும்பத்தவர் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. தக்க டாக்டர்களை உடனழைத்து அவர்களின் உணவு, பராமரிப்பில் குடும்ப பத்தவர் கவனம் செலுத்தாததனால் இந்தியாவில் பெண்கள் இளம் வயதிலேயே இறந்து விடுகின்றனர் எனச் சமூகச் சேவை இயக்கங்கள் கூறுகின்றன. ஆண்களிலும், பார்க்கப் பெண்களின் சராசரி சுக வாழ்வுக்காலம் குறைவாகும். பிரசவ மரணங்களும் இங்கு அதிகம்.

குடும்பத்திலுள்ள முதியவர்களைக் கவனிக்கும் பணி பெண்களுக்கே கடமையாகிறது. தமது பிள்ளைகளைக் கவனிப்பதோடு முதியவர் பணிவிடைகளையும் அவர்களே செய்ய நேரிடுகிறது. குடும்பத்திற்காக இரவு பகலாக உழைப்பவளே 'நல்ல குடும்பப் பெண்' என்று போற்றப் படுகிறாள். அடிமைத் தனமே சிறந்த குணாம்சமாகப் பாராட்டப்படுவதைக் குடும்பங்களில் காணலாம்.

www.padippakam.com



இந்த அம்சங்களையே நமது கலை, கலாச்சாரமும் வலியுறுத்தி வந்திருக்கிறது; இவற்றைச் சிறப்பாகப் போற்றுவதையே தன் அடித்தளமாகக் கொண்டிருக்கிறது.

பெண்களே பெண்களை அடுக்கி ஒடுக்குவதைப் பெரும் பாலான கூட்டுக் குடும்பங்களில் காணலாம். மாமி, மருமகள் முரண்பாடு என்பது இந்தியச் சமூக அமைப்பில் பிரபல மானது. நிலப் பிரபுத்துவ நிறுவனத்தின் மதிப்புகளைப் பேணும் பொறுப்பு மாமியுடையதே.

ஒரு காலத்தில் மருமகளாக இருந்து, தான் அனுபவித்த துன்பங்களை மறந்து, மாமி நிலைக்கு வந்ததும் அதே கொடுமைகளைத் தன் மருமகளுக்குச் செய்து, பழிவாங்கும் நடவடிக்கை மிக விசித்திரமானதே. மருமகள்மேல் எவ் வேளையும் குற்றம் காண்பது, மகளுக்கும் மருமகளுக்கும் இடையில் பேதம் காட்டுவது, தன் மகனிடம் மருமகள் ஓய்வாக இருப்பதைக் கண்டு சகியாது வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பது ஆகியவை இந்தியக் குடும்பங்களில் வழக்கமாக நடைபெறுபவை.

இந்நிலைக்குக் கூட்டுக் குடும்ப முறை, மத ஆதிக்கம், கல்வியறிவின்மை, பரந்த நோக்கின்மை, பொருளாதார நிலை, தனிச் சொத்துடைமை அமைப்பால் ஏற்படும் சுயநலம், தவறான பிற கருத்தியல்களின் ஆதிக்கம் ஆகிய வற்றைக் காரணமாகக் கூறலாம். அத்தோடு பிராய்டின் கோட்பாடுகளும் இங்கு நிரூபணமாகின்றன. தாய் எப்பொழுதும் தன் மகனைத் தன் சொந்தமாக வைத் திருக்கவே விரும்புகிறாள். மற்றொரு புதிய பெண் வந்து தன் சொத்துணர்வைப் பங்கு போடுவதைத் தாய் விரும்பு வதில்லை. உளவியல் ரீதியாகப் பிராய்டின் 'இடிபஸ் காம்பிளெக்ஸ்' என்னும் பாலியல் சார்ந்த உள்ளுணர்வும் அடிப்படைக் காரணமாகும்.

திருமணமானதும் பிரிந்து கணவனுடன் தனிக்குடித் தனம் நடத்துவதன் மூலம் குடும்பத்தின் அடிமை நிலை

படிப்பகம்

www.padippakam.com



யிலிருந்து பெண்கள் ஓரளவு விடுதலை பெறலாம். அங்கும் கணவன் தன் ஆதிக்கத்தை—பெண்ணின் அடிமை நிலையை நிலை நாட்டுவதை விட்டுவிட மாட்டான். ஆண் தலையெடுத்த சமூகத்தின் பிரதிநிதியே கணவன்.

குடும்பம் ஒரு வர்க்க நலன் பேணும் சமூக அமைப்பு. நிலப்பிரபுக்களும் பின்னர் முதலாளிகளும் இதே அமைப்பை வலியுறுத்திக் கட்டிக் காத்து வருகின்றனர். இச்சிறு அமைப்பின் ஊடாகவே பெண்ணின் அடிமை உழைப்பையும் ஆணின் உபரி உழைப்பையும் ஆளும் வர்க்கத்தால் எளிதில் கறந்தெடுக்க முடிகிறது. மதக் கோட்பாடுகளும் இதற்குத் துணை புரிகின்றன.

மனைவி, குழந்தைகள், முதியவர்களைக் காப்பாற்றும் கடமை ஆணுக்கு உண்டு. அவன் சமூக முறைகளுக்கு—கட்டுப்பாடுகளுக்கு அடங்கித் தரப்படும் கூலியை ஏற்று உழைக்க வேண்டும். தவறினால் குடும்பமும் பட்டினிகிடக்க நேரும். ஆளும் வர்க்கம் இவ்வாறு அச்சுறுத்துகிறது. வேலையற்ற பட்டாளம் சான்று பகருகிறது. குடும்பத்தைத் தன் சொத்தாக எண்ணும் உழைப்பாளிவும் அடங்கி விடுகிறான். அவனுக்குக் கிடைக்கும் குறைந்த கூலியோடு குடும்பத்தைச் சமாளிக்க, கூலி எதுவுமின்றி அடிமையாகக் குடும்பத்திற்குப் பெண் உழைக்க நேரிடுகிறது. பட்டுப் பூச்சி போலத் தானே குடும்பம் என்ற தன் சிறையைப் பெண் கட்டிக் கொள்கிறாள்.

உணவு, தாய்ப்பால், உழைப்பு, கவனிப்பு ஆகியவற்றிலெல்லாம் பேதம் காட்டிப் பெண் வளர்க்கப்படுகிறாள். இதனால் பலங்குன்றிப் பாலிய விவாகத்துடன் இளமையில் நலங்குன்றிய குழந்தையையும் பெற நேரிடுகிறது. இத் தொடர் வட்டத்தால் இறுதியில் சமூகமே பாதிக்கப்படுகிறது வைத்திய நிலையங்களுக்குச் செல்வதில் பெண்கள் தொகை ஆண்களிலும் குறைவாக இருப்பதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்தியாவில் பெண்கள் சுகமாக வாழும் காலம்

பெ—2

www.padippakam.com



ஆண்களிலும் குறைவாக உள்ளது. பெண்கள் பூவுடனும் பொட்டுடனும் இறந்து போக ஆண்கள் மறுமணம் செய்து கொள்ளுகின்றனர்.

## 2. கணவனின் மனைவி

பெற்றோருக்கு அடுத்ததாகப் பெண் கணவனுக்கு அடிமையாகிறாள். 'கணவனே கண்கண்ட தெய்வம்' 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' போன்ற பழமொழிகள் இன்றும் நிலவுகின்றன.

பெண்ணின் பெற்றோர் மதச்சடங்கு மூலம் தம் மகளை ஆணொருவனுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கின்றனர், அதன் பின்னர் அவள் தனது பெயரைத் திருமதி என்ற தகுதியுடன் கணவன் பெயருடன் இணைத்துக் கொள்ள நேரிடுகிறது. இதுவே வழக்கம்; சட்டம். கணவன், சடங்கு வேளை கட்டிய தாலி பெண்ணின் வாழ்வின் மிக முக்கிய அம்சமாகிறது. கணவன் உயிருடன் இருக்கும்வரை அவளது கழுத்தில் இத்தாலி இருக்க வேண்டும். கணவன் இறந்ததும் 'தாலி அறுத்தவள்' என்ற பட்டப் பெயருடன் விதவை என்ற பயங்கர நிலைக்குப் பெண் தள்ளப்படுகிறாள். 'அறுதலி' என்று கணவன் இயற்கை மரணம் எய்தும்போதும் மனைவி மேல் பழிபோடப்படுகிறது.

'தாலி பெண்ணுக்கு வேலி' 'மூக்கணாங்கயிறு' எனவும் அவளது உறவுகள் அனைத்தும் தாலி மூலம் கட்டுப்படுத்தப் படுகின்றன. கணவனது பாலுறவு ஒழுக்கம் பற்றிக் கேட்பதற்கு அவளுக்கு உரிமையில்லை. திருமணத்திற்குப் பின் வேறு எந்த ஆடவனுடனும் மனைவி உறவு வைப்பது தெரிய

www.padippakam.com



வரின் குடும்ப வாழ்வை இழக்க நேரலாம். 'வேசி' என்ற மிக இழிவான வார்த்தை அவள்மீது சுமத்தப்படுகிறது. 'வேசன்' என கணவனை இழிவு படுத்தும் வார்த்தை தமிழில் மட்டுமல்ல இந்திய மொழிகளிலேயே கிடையாது.

அதிகாலையில் பெண் எழுந்ததும் தாலியையும் கணவன் காலையும் தொட்டு வணங்குவதை இந்தியத் திரைப் படங் களில் காணலாம். அதன்பின் அன்றைய வேலைகள், கடமை கள் யாவும் அவள் முன்னே குவிந்துள்ளன.

வீட்டைப் பெருக்கித் தூய்மையாய் வைத்திருப்பது, காலை, நண்பகல், இரவு சமையல் வேலைகள், குழந்தை களைப் பராமரிப்பது, துணிகளைத் துவைப்பது, விறகு வெட்டுவது முதல் முதியவர்களைக் கவனிப்பது வரை அவளது பொறுப்பாகிறது. இந்தியாவில் சமையலுக்கு மட்டுமல்ல கணவன் நீராடுவதற்கு வேண்டிய தண்ணீரைச் சுமப்பதும் பெண்ணுடைய அன்றாடப் பணியாவதைக் காணலாம். இவை யாவும் சோர்வும் விரக்தியும் தரும் அடிமைத் தொழில்கள்.

மனைவியுடைய வேலைகளில், சமையல்களில் குறை கண்டு பிடிப்பதற்கும் கணவனுக்கு அதிகாரமுண்டு. அது மட்டுமல்ல, அடிப்பதற்கும் உதைப்பதற்கும் உரிமையுண்டு. வலி தாங்காது மனைவி சத்தமிடினும் அயலார் கூறிவிடுவர். சட்ட நடவடிக்கைக்கு எந்தப் பெண்ணும் செல்வதில்லை. ஏனெனில் அவள் 'மனைவி' என்ற அந்தஸ்தை இத்தகைய நடவடிக்கை மூலம் இழக்க நேரிடும். இவ்வாறு அவள் இறக்கும் வரை குடும்பம் என்ற சிறைக் கைதியாக, கணவன் அக்காலம் வரை சிறைக்காவலனாகிறான். வீடு என்ற சிறையை விட்டுப் பெண் விரும்பியபடி, கணவனின் அனுமதி யின்றி எங்கும் சென்றுவிட முடியாது. தேவைக்கேற்ப அவசரமாகச் சென்றால்கூடக் கணவனது சந்தேகங்களுக்குத் தக்க விளக்கமளிக்க வேண்டும். நீதிபதியாக நேரடித் தண்டனை வழங்கும் உரிமை கணவனுக்கு உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



திருமணத்தின் பின் தாலி, குங்குமப் பொட்டு இட, பூச்சூட, விரும்பிய கலர் சேலை கட்ட, நகைகள் அணிய பெண் உரிமை பெறுகிறாள். கணவனும் அவளை ஒரு காட்சிப் பொம்மையாகத் தான் விரும்பியபடி இவற்றை அணிவித்துத் திருப்தியடைகிறான். கணவன் திருப்தியடையும் விதமாகவே அவள் உடை, அலங்காரம் செய்ய வேண்டியவளாகிறாள். கணவன் இறந்த பின்னரும் தன் விருப்பப்படிச் சுதந்திரமாக இவற்றை அணியும் வாய்ப்பையும் 'விதவை' என்ற பட்டப் பெயர் பெற்று இழந்து விடுவதே மிகவும் கொடுமையாகும்.

கணவனுக்காகவே பெண் வாழ்வதாகிறது. அவன் இறந்ததும் அவளது வாழ்வும் முடிந்ததாகிறது. 'உடன் கட்டை' ஏறும் 'வழக்கம்' இன்று தடை செய்யப்பட்ட போதும் சமூகத்தில் அவள் நிலை மரக்கட்டை போலவே ஆகிறது. சிலப்பதிகாரத்தில் பாண்டியன் இறந்ததும் கோப்பெருந்தேவி 'கணவனை இழந்தார்க்குக் காட்டுவது இல்' என்று கூறி இறப்பதாக இளங்கோவடிகள் கூறுகிறார். விதவைத் தாயைக் காலையில் விழிக்கும்போது 'எதிரே வராதே' என்று கூறும் பிள்ளைகளும் உள்ளனர். சாத்திரம் சம்பிரதாயம் என வரும்போது எந்தப் பெண்ணும் விதி விலக்கல்ல.

பாலுறவிலுங் கணவனுக்கு விரும்பிய வேளையெல்லாம் அவனது இச்சையைத் தணிப்பதற்கு அவள் உதவ வேண்டும். பெண் விரும்பாத, நோயுள்ள வேளையிலும் கற்பழிப்பது போலப் பெரும்பாலான கணவர் பலாத்காரமாகத் தம் பாலெழுச்சியைத் தணித்துக் கொள்கின்றனர். அதே வேளை பெண் தன் பாலுறவு விருப்பத்தை மறைமுகமாகத் தன் அலங்கரிப்பு, விசேட உணவு, தணிவான வார்த்தைகள், பணிவிடைகள் மூலம் தெரியப்

படிப்பகம்

www.padippakam.com



ய்டுத்தியபோதும் கணவன் அவளை உதறித் தள்ளி விடுவது பெண்ணின் அடிமை நிலையைக் காட்டி நிற்பதாகும்.

பெண் ஒரு பிள்ளையாவது பெற்றுத் தன் தாய்மையைக் காட்டிக் கொள்ளவேண்டும். தவறின் 'மலடி' என்ற சமூக அந்தஸ்து குறைந்த வார்த்தைக்கு உட்பட நேரிடுகிறது. பல வேளைகளில் கணவன் மலடு நிலையில் இருந்தபோதும் பெண்ணே இப்பட்டத்தைப் பெற நேரிடுகிறது. மனைவி தாய்மையடையாத நிலையில் மற்றொரு பெண்ணைக் கணவன் மணப்பதற்குச் சமூகத்தில் உரிமை பெறுகிறான்; 'பரம்பரை'யைக் காக்க, 'குலத்தைக் காப்பாற்ற' எனச் சமூகத்தில் அனுமதிக்கப்படுகிறது.

பெண்ணின் கற்பு மட்டும் கணவனால் வேண்டப்படுவதற்கு அடிப்படைக் காரணம் ஒன்றும் உண்டு. தனக்குப் பிறக்கும் குழந்தை 'தன் குழந்தை' என்ற உறுதியைக் கணவன் எதிர்பார்க்கிறான். தன் தனிச் சொத்தைக் 'தன் பிள்ளைக்கு' வழங்கவேண்டும் என்ற நினைவே கணவனது நினைவிலி மனத்தில் பதிந்திருப்பதாகும். சொத்துடைமை, குடும்ப அமைப்பு கணவனின் ஆதிக்கத்தில் இருப்பதுவே பெண்ணை அடிமையாக்குவதற்கும் வாய்ப்பளிக்கிறது. பெண்கள் சொத்து எதுவுமற்ற பாட்டாளிகளல்ல; அடிமைகள். உலகில் முதலில் தோன்றிய அடிமைகள்.

எல்லாக் குடும்பங்களிலும் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் முரண்பாடு, சண்டை ஏற்படுகிறது. இது எசமானுக்கும் அடிமைக்குமிடையில், முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையில் ஏற்படும் முரண்பாடு போன்றதே. அத்துமீறிய வேலைப் பளு பெண்கள் மேல் சுமத்தப்படுகிறது அதைத் தாங்க முடியாத நிலையிலே மனைவி உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுகிறாள்; கண்ணீரைச் சிந்துகிறாள். அப்பொழுதும் ஆறுதல் கிடைப்பதில்லை.

www.padippakam.com



குடும்பத்தாரின் திட்டுதலும் கணவனின் வன்முறையுமே பரிசாகக் கிடைக்கின்றன.

மற்றுமோர் விஞ்ஞான உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. உழைப்பு சுரண்டப்படும் இடங்களில் பகைமை உறவே தோன்றுகிறது. முதலாளி தொழிலாளி, வட்டிக்கடைக்காரன் கடனாளி, நிலப்பிரபு குத்தகைக் காரன், வீட்டுக்காரன் வாடகையில் குடியிருப்பவன் இவர் களிடையே என்றும் ஒற்றுமை நிலவுவதில்லை. பகைமையே நிலவுகிறது; ஆகவே சண்டை தவிர்க்க முடியாதது. அங்குத் தனித்துப் போராடும் பெண் தொடர்ந்து தோல்வியடை கிறாள்.

குடும்பத்தில் பெண்ணுடைய உழைப்புக்குக் கூலி கிடைப்பதில்லை. அடிமைகளுக்கு உணவு, உடை, இருப் பிடம் தருவது போலவே பெண்ணுக்கும் கிடைக்கிறது. வீட்டின் வளர்ப்புப் பிராணிகளான ஆடு, மாடு, நாய் போன்றவற்றிற்கு உணவு தருகிறான்; உடைமட்டும் எசமான் தருவதில்லை. பெண்ணுக்கு உடைமட்டும் மேலதிகமாகக் கிடைக்கிறது. மிருகங்கள் போல அவள் குழந்தைகளையும் பெற்று வளர்க்கிறாள்.

சாந்தமான மிருகங்களான ஆடு, மாடு, எருமை போன் றவை எளிதில் அடிமைப் படுத்தப்படுவது மட்டுமல்ல இலகுவில் கொல்லவும் படுகின்றன. நல்ல வேளை, மனித இறைச்சியைச் சாப்பிடுபவரில்லை. ஆயினும் பெண்களது இரத்தம் அத்துமீறிய உழைப்பால் பிழியப்படுகிறது. அதனால் ஆண்களுக்கு முன்பாக இறந்து விடுகின்றனர். கர்ப்பம், மாதவிலக்கு போன்ற வேளைகளிலும் அவர்கள் தமது வேலைகளைச் செய்தே தீர்க்கவேண்டும்.

எதிர்ப்புக் காட்டாது கிடைக்கும் கூலியைப் பெற்று உழைக்கும் தொழிலாளியை முதலாளி 'நல்ல தொழிலாளி'

படிப்பகம்

www.padippakam.com



எனக் கூறுவதுபோல, எதிர்ப்பு இன்றி அடங்கி ஒடுங்கி நாள் பூராவும் உழைக்கும் மனைவியே 'நல்ல மனைவி' என்ற பெயரைப் பெறுகிறாள். 'நல்ல அடிமை'யின் மறு பெயரே 'நல்ல மனைவி.' அவளது உழைப்புச் சக்திமேல் கணவனே ஆதிக்கம் செலுத்துகிறான்.

பாலுறவிலும் தம் ஆதிக்கத்தைக் காட்டி அவற்றில் கிடைக்கும் இன்பத்தையும் மனைவி முழுமையாக அனுப விக்க முடியாது ஆண்கள் அங்கும் நடந்து கொள்கிறார்கள். பெண்களைப் பிள்ளை பெறும் யந்திரமாகவே ஆண்கள் கருதிக் கொள்ளுகின்றனர்.

இன்று நடைபெறும் திட்டமிட்ட குடும்பம், கருத்தடைப் பிரச்சாரத்திலும் பெண்களையே ஆப்ரேசன் செய்யும்படி ஆண்கள் வற்புறுத்துகின்றனர். கர்ப்பச்சிதைவு செய்வதாயி னும் ஆண்களின் அனுமதியுடனேயே செய்ய நேரிடுகிறது. கர்ப்பத்தைக் காப்பதையும், அழிப்பதையும் ஆண்களே தீர்மானிக்கின்றனர். பொருளாதார அபிவிருத்தித் திட்டத் தின் கீழ்க் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமெனப் பெண்களின் கர்ப்பத்தையும் ஆணாதிக்க அரசே திட்டமிடுகிறது.

நாள் பூராவும் வீட்டுக்காக உழைப்பது மட்டுமல்ல, கணவன் தூங்கும் வேளை கால்பிடித்தல், குளிக்கும் வேளை முதுகு தேய்த்தல் மட்டுமல்ல, கணவன் உட்பட குடும்பத்த வருக்கு உணவு பரிமாறல், எச்சில்இலை எடுத்தல், பிளேட்டுகளைக் கழுவுதல் போன்ற வேலைகளையும் மனைவியே செய்ய நேரிடுகிறது. வீட்டில் சமையல்கூடக் கணவனது சுவை, விருப்பத்தை ஒட்டியே நடைபெறுகிறது. சைவ உணவையே உண்ணும் பெண் கணவனுக்காக அசைவ உணவு சமைப்பத்தைச் சாதாரணமாகக் காணலாம். இது மனைவியின் கடமை.

தொழிலாளி தன் உழைப்புச் சக்தியைக் கூலிக்கு விற்க முதலாளியுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறான்.

www.padippakam.com



இருவரதும் சமநிலையில்லை; தவிர்க்க முடியாத நிலையிலேயே தொழிலாளி ஒப்பந்தம் மூலம் சரணடைகிறான். அதுபோலவே பெண்ணும் தவிர்க்க முடியாத சூழலில்—நிலையில் ஒருவனைக் கட்டிக் கொள்ள நேரிடுகிறது. இத்திருமண ஒப்பந்தமும் சமநிலையில் ஏற்பட்டதல்ல. இந்த உண்மையை நாம் மறந்து விடப்படாது.

சுருங்கக் கூறின் கணவனுக்கு அடிமையாக, அவனது பாலுறவு இன்பத்திற்காக, அவனது பரம்பரையையும் சொத்துகளையும் பார்க்கக் குழந்தைகள் பெறுவதற்காக, அவனது சுவைக்குச் சமைப்பதற்காக, அவனது வீட்டைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைப்பதற்காக, பிற சேவைகள் செய்வதற்காகவே மனைவி என்ற நிலையில் பெண் ஒருத்தி தேவைப்படுகிறாள். இந்தப் பெண்ணிடமிருந்து சீதனம், சீர் வேறு எதிர்பார்ப்பது இன்றைய சமூக அமைப்பின் விசித்திர முரண்பாடான நிலையாகும்.

# 3. மதமும் மங்கையும்

மதம் ஒரு கருத்தியலாக (Ideology) பெண் அடிமைத் தனத்தைப் பேணி வருகிறது. பலகோடி வருட மனித இன வரலாற்றில் மதக் கருத்துகள் மூவாயிரம் ஆண்டுகளுக்குள்ளேயே தோன்றியவையாகும்.

வேதங்கள், உபநிடதங்களிலேயே பெண் இரண்டாந்தர மனித இனமாகக் கூறப்பட்டுள்ளது. பொய்மையின் மறு பிறப்பாகவும் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை எழுதியவர்கள் ஆண்களே. மத நூல்களில் கூறப்பட்டபடி பெண்ணைப் பெற்றவர்கள் ஆணுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் சடங்குகளை இன்றும் காண்கிறோம்.

www.padippakam.com



மனிதன் கற்பனையாகத் தெய்வங்களைப் படைக்கும் போது கடவுளையும் ஆணாகவே படைத்தான். பெண் தெய்வங்களை ஆண் தெய்வங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தெய்வங்களாகவே படைத்துள்ளான். சக்தி பெரிதா, சிவம் பெரிதா என்ற விவாதங்களை ஏற்படுத்திய போதும் சிவத்துள்ளேயே சக்தி அடங்குகிறது என்றே முடிப்பதைக் காணலாம். சிவபிரானுக்கு உமாதேவி கட்டுப்பட்டவளாகவே புராண, இதிகாசக் கதைகளும் கூறுகின்றன. வள்ளி, தெய்வயானை என இரு பெண்களைக் குமரன் மணக்க முடிந்தது. இரு ஆண் தெய்வங்களைக் கணவனாக வைத்திருந்த பெண் தெய்வங்களைக் காணமுடியாது.

சிவபெருமான், முருகன், பிரமன், விஷ்ணு, யேசுக் கிறிஸ்து, அல்லா, புத்தர், மகாவீரர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத் தலைவர்கள், மத போதகர்கள் அனைவரும் ஆண்களே. ஆண் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும் ஆண்களாகவே அவர்களால் படைக்க முடிந்தது. இவற்றால் பெண்களின் நினைவிலி மனத்திலும் கருத்தியல் ரீதியாகத் தாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது. அவர்களும் ஆண் தெய்வங்களையே முழுமுதற் கடவுளாக வழிபட நேரிடுகிறது. கணவன் நலனுக்காகவே பெண்கள் தெய்வங்களை வணங்குவது, விரதமிருப்பது வழக்கம். கணவனே பெண்களுக்குத் தெய்வம் என வேத, உபநிடதங்களே கூறுகின்றன. வள்ளுவரும் தெய்வத்தைத் தொழா விடினும் பெண், கணவனைத் தொழுவதன் மூலமே உயர்வு பெறுகிறாள் என்கிறார்.

இன்றும் நமது நாட்டு மக்களிடையே ஆதிக்கம் பெற்றுள்ள புராண, இதிகாசக் கதைகளிலும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைத்துள்ளனர். பஞ்ச பாண்டவர் ஐவரும் துரோபதையைத் தம் மனைவியராக வைத்திருக்க முடிந்தது. அவளுக்கு விரும்பிய ஒரு கணவரை

படிப்பகம்

www.padippakam.com



அல்லது இருவரை மட்டும் தேர்ந்து கொள்ளும் உரிமை கிடையாது. இராமாயணத்தில் தசரதர் மூன்று மனைவியரை இராணியாகவும் அந்தப்புரத்தில் ஆயிரம் பெண்களையும் வைத்திருந்தார். இராமனை ஏகபத்தினி விரதனாகப் போற்றியபோதும், இராவணன் போகப் பொருள்போலச் சீதையைக் கவர்ந்து சென்றான் எனவும் சீதையின் கர்ப்பத்தைச் சந்தேகித்து அவளை இராமனே காட்டில் விட்டான் எனவும் இராமாயணம் கூறுகிறது. தன்னைச் சந்தேகித்துக் காட்டுக்கு அனுப்பித் தண்டித்த கணவனைச் சீதை விரட்டவில்லை. அக்கினியில் நடந்து தன் கற்பை நிலைநாட்டி மீண்டும் இராமனிடம் சேர்ந்ததாகவே வால்மீகி என்ற ஆண் முனிவர் கதை படைத்துள்ளார். இன்று சந்தேகத்தால் பெண் எரிக்கப்படும் நிகழ்ச்சிகளும் உண்டு. அகலிகை இந்திரனை மனத்தால் தீண்டியதற்காகக் கல்லாகச் சபிக்கப்படுகிறாள். மனித நடைமுறையில் இது சாத்தியமற்றது என்பதைத் தெரிந்த போதும் இன்றும் கற்புக்குச் சான்றாக இக்கதை ஆண்களால் போதிக்கப்பட்டு வருகிறது. மற்றொரு ஆடவனை மனத்தால் தீண்டினும் தண்டனை கிடைக்கும்.

புராணங்களில் படைக்கப்பட்ட நாயன்மார் அனைவரும் ஆண்களே. புனிதவதி கூடக் கணவனுக்குக் கீழ்ப்படிந்தவளாகவே படைக்கப்பட்டாள்; பசியுடன் வந்த ஒருவனுக்கு மாம்பழத்தைக் கொடுத்ததைக் கணவனிடம் கூற அஞ்சிக் கடவுளிடம் முறையிட்டாள்.

நளாயினி கணவனை விபச்சார விடுதிக்குச் சுமந்து சென்றாள். 'கற்புக்கரசி' என்று அவளுக்குப் பெயர் சூட்டும் கீழ்த்தரப் பொய்மைக் கதைகள் இன்றும் கூறப்பட்டுப் பெண் இனத்தை இதிகாசக் கதைகள் மூலமும் அடக்கி ஒடுக்குவதைக் காணலாம். அனுசூயா கணவனுக்காகச் சூரியன் எழுவதைத் தடுத்தாளாம். புராணக் கதைகள் கற்பை வலியுறுத்துகின்றன.

www.padippakam.com



சிலப்பதிகாரத்தில் கூடக் கோவலன், மாதவி என்ற நாட்டியக்காரியுடனும் சென்று வாழ்ந்ததில் தவறில்லை. எனவே கூறப்படுகிறது. கோவலன் கற்பனையில் மற்றொரு பெண்ணைப் பாடியதுபோல மாதவி பாடுதற்கு உரிமை யற்றவளாகிறாள். கோவலன் மாதவியை விட்டு வெளியேறு கிறான். கண்ணகிகூடக் கணவனுக்காகக் காத்திருந்த அவனது கற்பை முன்வைத்தே தெய்வமாக்கப்படுகிறாள்.

கண்ணகி, மாரி ஆத்தா, துர்க்கை, தெய்வயானை, காளி முதலிய அனைத்தும் சிறு தெய்வங்களே. முழுமுதற் தெய்வமாகப் பெண் தெய்வங்கள் படைக்கப்படவில்லை. இச்சிறு தெய்வங்களின் உருவங்களையும் ஆண் சிற்பிகள் நிர்வாணமாக, பால் கவர்ச்சிமிக்கதாகப் பெரிய தனங்களு டனே வடித்துள்ளனர். இச்சிற்பிகள் கோவில்களிலும் கவர்ச்சிமிக்க சிலைகளாகப் பெண் தெய்வங்களையும், வழி படும் அல்லது நடனமாடும் பெண்களையும் அம்மண நிலை யிலேயே செதுக்கியுள்ளனர்.

உமை வீரத்திற்கும், சரஸ்வதி கல்விக்கும், லட்சுமி செல்வத்துக்குமாக எனப் பெண் தெய்வங்கள் சிருட்டிக்கப் பட்டபோதும் உமையைச் சிவனின் பாதியாகவும் சரஸ்வதி பிரமனின் அக்குளிலிருந்தும் லக்குமி விஷ்ணுவின் பாதங்களி லிருந்தும் தோன்றியதாகவும் கூறப்படுகிறது.

இஸ்லாமிய மதமும் பெண்களை மிகத் தாழ்ந்தவ ராகவே கணிக்கிறது. ஆண்கள் தம் தகுதிக்கேற்றபடி நான்கு பெண்கள் வரை மணக்க உரிமையளிக்கின்றது. பெண் தன் அவயவங்கள் எதையும் வெளியே காட்டாதபடி உடையுடுக்க வற்புறுத்துகிறது. பெண் அரைமனிதனுக்கு சமப்படுத்தப்படுகிறாள்.

பெண்கள் ஆண்களைக் கவரும் போகப் பொருட்கள், சிற்றின்பத்திற்கு இழுக்க வல்லவர்கள், ஆண்களை மயக்கி அடிமைப்படுத்தி விடுபவர்கள். பெண்ணாசையைத் துறந்து சந்நியாசியாகிய நிலையிலேயே கடவுளை அடைய முடியும்

www.padippakam.com



என்று இந்து மதம் கூறுகின்றது. 'பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு', 'புண்ணாங்குழியிடை தள்ளி என் போதைப் பொருள் பறிப்பவள்', 'கண்ணால் மயக்கி முலையால் வெருட்டுபவள்' என்ற கருத்துகள் அடிக்கடி கூறப்படு கின்றன. இவை தவிர பெரிய யுத்தங்களெல்லாம் பெண்க ளாலேயே ஏற்படுகின்றன; துரோபதையின் சிரிப்பு, சீதை யின் மானாசை, மாதவியின் நாட்டியம் ஆகியவற்றைப் பார் என்றும் இதிகாசங்கள். காவியங்கள் ஆகியவற்றை உதாரணம் காட்டிப் பேசுகின்றனர். 'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்றும் சித்தாந்தம் பேசுவர். தோற்றவர்மேல் குறைகூறுவது போல ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆண்கள் தம் குறைபாடுகளுக்குப் பெண்கள் மேல் பழி போடுகின்றனர். யதார்த்தத்தில் தாய்க்குல ஆதிக்கச் சமூகம் ஏற்படின் யுத்தங்களே நின்றுவிடலாம். வயிற்றில் சுமந்து பெற்று வளர்த்த தாய்க்கே மனித உயிர் களின் மதிப்பு தெரியும்.

மதங்கள் வளர்த்த நடைமுறைகளின்படிப் பொட்டுக் கட்டி பெண்களைக் கோவில்களுக்கு அடிமைப்படுத்தும் முறை அண்மைக்காலம் வரை தமிழகத்தில் நிலவியதை யாவரும் அறிவர். கோவில்களுக்கு அடிமையாக நடனமாடிப் பணிசெய்வதோடு நிலப்பிரபுக்கள், பூசாரிகளது காமக்கிழத்தி களாகவும் இவர்கள் வாழ நேரிடுகிறது. இவர்கள் திருமணம் செய்யமுடியாத சாதியராகி விபச்சாரத்தில் ஈடுபடுவதும் அனைவரும் அறிந்ததே. மதக் கோட்பாடுகள், வழக்கங்கள் இவற்றை அனுமதிக்கின்றன.

பரத்தையைப் புணர்தல் என இலக்கியங்களும் இவற்றை கண்டிக்காது அனுமதிப்பதைக் காணலாம். ஆண்வழிச் சமுதாயத்தில் பாலுறவுக் கட்டுப்பாடு குடும்பப் பெண்களுக்கு மட்டுமே என்பதை உலகத்து விபச்சார விடுதிகளே நிரூபிக் கின்றன.

www.padippakam.com



மதக்கருத்துகளில் மிகவும் கொடுமையானது உடன் கட்டை ஏறும் வழக்கமேயாகும். 1829 வரை இதை நிறுத்தச் சட்டங்கள் ஆக்கப்படவில்லை. சட்டமாக்கப்பட்ட போதும், 'வெளிநாட்டார் எவ்வாறு எங்கள் மதச் சம்பிர தாயங்களில் சீர்திருத்தம் கொண்டுவர முடியும்' என்றும் தேசியக் குரல் எழுப்பப்பட்டது. உடன்கட்டை ஏறுவது ஒழிக்கப்பட்டபோதும் பெண் வேறுமுறைகளில் இன்றும் தண்டிக்கப்படுகிறாள்.

கணவன் இறந்ததும் மனைவி மொட்டையடித்தல், வெள்ளைச் சேலை உடுத்துதல், குங்குமம், மலர், ஆபரணங் களை ஒதுக்குதல், மதச்சடங்குகளின்போது மறைந்து நிற்றல் ஆகிய தண்டனைகள் இன்றும் வழக்கமாக நடை பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. வெளியே புறப்படும் போது விதவை எதிர்ப்படல் அபசகுனம் என்ற கருத்தியல் இந்துக்களின் நினைவிலி மனத்தில் இன்றும் ஆதிக்கம் செலுத்துகிறது.

பெண் தந்தைக்கும், பின் கணவனுக்கும், மூத்த மகனின் பேச்சுக்கும் அடிபணிந்து நடக்கவேண்டும் என்ற உபநிடதக் கருத்துகள் இன்றும் மதப்பிரசாரகர்களால் கூறப்படு கின்றன.

எல்லா மதங்களும் குடும்ப அமைப்பைப் பேணி வலி யுறுத்துகின்றன. அதன் மூலமே நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவச் சுரண்டல் அமைப்புகளை நிலைநிறுத்த முடியும்.

இன்றைய முதலாளித்துவ, ஏகாதிபத்தியச் சமூகங் களிலும் கத்தோலிக்க மதக் கருத்துகள் கருத்தியலாக ஆதிக்கம் செலுத்துகின்றன; இவை பெண் அடிமையை மேலும் நிலை நிறுத்துகின்றன. இம்மதம் குடும்பத்தை வலியுறுத்துகிறது; குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்க்கிறது; விவாகரத்தை மறுக்கிறது. பாலுறவின்பத்தைப் பாவமாகக் கருதுகிறது; குழந்தைகளைப் பெறவே பாலுறவு என வலியுறுத்துகிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் அனைத்தும்

www.padippakam.com



பெண்களையே கட்டுப்படுத்துகின்றன. இஸ்லாமிய மதமும் மிகவும் கொடூர முறையில் பெண்ணடிமையை வலியுறுத்துகிறது. மதங்களின் பிடியிலிருந்து மனித இனம் விடுதலை பெறும் வரை பெண் விடுதலை என்பதும் பகற்கனவே.

# 4. நிலப்பிரபுத்துவத்தின் அடிமை

நிலப்பிரபுத்துவம் என்பது நிலத்தோடு ஒட்டிய உற்பத்தியில் தங்கியிருக்கும் சமூக அமைப்பு; விரிவடையாத, கட்டுப்பாடான உற்பத்தி நிலவும் சமுதாயம்; இச் சமூக அமைப்பில் பெண்ணும் நிலத்தோடும் வீட்டோடும் குடும்பத் தோடும் கட்டிவைக்கப்படுகிறாள்.

தனிச் சொத்துடன் குடும்ப அமைப்பு ஏற்படும்வரை மனித இனம் கணக் குழுக்களாகவே வாழ்ந்து வந்தது. நாடோடியாக மந்தை மேய்த்து வாழ்ந்த மனிதக் கூட்டம் பயிர்த்தொழிலில் ஈடுபடும் காலத்திலேயே நிலையாக வாழத்தொடங்கியது; மனித இன வரலாற்றின் முதலாவ தான வேலைப் பிரிவினையும் அப்பொழுதே ஏற்பட்டது. பெண்ணின் உற்பத்தி தனிக் குடும்ப உற்பத்தியாக ஒதுக்கப்பட்டதிலிருந்து பெண்ணினத்தின் வீழ்ச்சி ஆரம் பித்தது. உலகில் தோன்றிய முதலடிமை பெண் அடிமையே. அதன் பின்னரே அடிமைச் சமூகம் தோன்றியது. அதாவது ரோமாபுரி போன்று விலங்கு அடிமைகளை உற்பத்தி மையமாகக் கொண்ட சமூக அமைப்பு.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியுடன் உபரியாக உற்பத்தி செய்யவும் முடிந்தது; அதையொட்டி வர்க்கச் சமுதாயம் தோன்றியது. தனிச் சொத்துடன் ஒரு

www.padippakam.com



தாரமண முறைகொண்ட குடும்ப அமைப்பு தோன்றியது. உணவு சமைத்தல், வீட்டைப் பார்த்தல், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல் போன்ற பல வேலைகள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டன. அத்தோடு பயிர் உற்பத்தியிலும் கால் நடைகளை வீட்டில் கவனித்தலிலும்கூட அவள் ஈடுபட நேர்ந்தது. இந்நிலையை நடுத்தர விவசாயக் குடும்பங்களில் இன்றும் காணலாம்.

இந்தியாவில் இன்று நிலவும் தனிச்சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குடும்ப அமைப்பும் நிலப்பிரத்துவத்தின் வழித்தோன்றலே.

நிலப்பிரபுத்துவத்தில் நிலமே பிரதான உற்பத்திச் சாதனமாகும். உற்பத்திக் கருவிகள் துரித வளர்ச்சியடையாத நிலையில் மனித உழைப்புச் சக்தி பரவலாகத் தேவைப்பட்டது.

குடும்பம் எத்தனை பெரிதாக அமைகிறதோ அத்தனை அளவிற்கு வாய்ப்பாக வாழலாம் என்ற உணர்வு நிலையே மக்களிடம் நிலவியது. எத்தனை பிள்ளைகள் உள்ளனரோ அத்தனை பலமாகக் குடும்பம் அமையும்; அத்தனை பேரும் பரந்த நிலத்தில் உழைக்க முடியும்; பெற்றாரின் முதுமைக் காலத்தில் பிள்ளைகளின் ஆதரவு என்றும் நிலவும்; இத்தகைய எண்ணங்கள், உணர்வு நிலையே அனைவரிடமும் ஏற்பட்டிருந்தது. வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிப்பதாகும். ஆகவே 'கருச்சிதைவு செய்வது பாவமாகக் கருதப்பட்டது; பிள்ளை பெற முடியாதவள் 'மலடி' என்ற பட்டத்தைப் பெற நேர்ந்தது; சொத்துடைமைப் பரம்பரைக்கு மனைவி பிள்ளையைப் பெற முடியாவிடின் மற்றொரு பெண்ணை மணக்கவும் ஆண் மகன் அதிகாரம் பெற்றான்.

கணவன் மலட்டுத் தனம் பெற்றிருந்தால் மனைவி அவ்வாறு வேறு ஒருவனை மணக்க அனுமதிப்பதில்லை. உற்பத்திக்குத் தலைமை தாங்கிய, குடும்பத் தலைவனான

www.padippakam.com



ஆண் மகன் ஆட்சி நடத்தும் சமூகம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆணுடைய தேவைக்காகவே மனைவி; குடும்பம்.

நிலப்பிரபுத்துவ அமைப்பில் குடும்பத்திற்கு வேண்டியளவு முடிந்தளவு பிள்ளைகளைப் பெற்றுத் தருவது, அவர்களை வளர்த்தெடுப்பதே பெண்களது முக்கிய வேலைப் பிரிவினையாக இருந்தது. பெண் கர்ப்பமடைவது சிறப்பான அம்சமாகக் குடும்பத்தில் கருதப்பட்டது. பசு கர்ப்பமடைவது போன்ற மகிழ்ச்சி. வளர்ப்புப் பிராணிகள் போல இயற்கையின் ஒரு அம்சமாகப் பெண் கருதப்பட்டாள். இயற்கைமேல் ஆண் ஆதிக்கம் செலுத்தும் சமூகம்.

கர்ப்பக்காலத்தில் பெண்ணுக்கு விரும்பிய சுவை உணவுகளை வழங்குவது, சீமந்தம், வளைகாப்புப் போன்ற சடங்குகள் செய்வது வழக்கமாயிருந்தது. கர்ப்பத்தடை முறைகளை அவர்கள் அறியார் என்பது மட்டுமல்ல அநாவசியமாகவும் இருந்தது. முறை தவறிய கர்ப்பங்களும் சமூகத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. பெண்களே இவற்றிற்குப் பழி வாங்கப்பட்டனர். ஆணடிமைச் சமூகத்தில் இது மற்றொரு அநீதி. அடிமைப் பெண்ணுக்குக் கர்ப்பத்தைத் திணித்துவிட்டு அவள் மேலேயே பழியையும் கட்டும் ஆணினத்தின் அதிகார சூரத்தனம்.

காலனி ஆட்சியாளர் நிலப்பிரபுத்துவத்தை உடைக்காது பேணினர். உள் நாட்டவரிடையே மூலதன ஆக்கம் ஏற்படுவதைக் காலனி ஆட்சி கட்டுப்படுத்தியது. அதனால் தேசிய முதலாளிகள் வளர முடியவில்லை. அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளிடையே அரைக் காலனி. அரை நிலவுடமை, நவகாலனித்துவ வளர்ச்சி ஏற்பட்டது. இந்நாடுகளிடையே பொருளாதார ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய நாடுகளே அந்நாட்டவரின் பொருளாதார, சமூக வாழ்வுக்கும் ஆலோசனை கூறிக் கடன் உதவி வழங்கு

www.padippakam.com



பவர்களாக மாறின. உள்நாட்டின் தரகு முதலாளிகள் இவற்றை வரவேற்றனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உலகப் பொருளாதாரச் சுரண்டல் அமைப்பும் சந்தை முறைகளும் மாற்றி அமைக்கப்பட்டன. அமெரிக்காவே காலனி நாடுகளுக்கு ''அரசியல் சுதந்திரம்'' வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

மூன்றாவது உலக நாடுகளைத் தன் நவகாலனியாக்குவதில் முன் நின்றது. உலகவங்கி போன்ற நிதி நிறுவனங்களின் கடன்வழி ஆதிக்கம் உலகெங்கும் வீசப்பட்டது. சர்வதேசக் கம்பெனிகளின் ஆதிக்கம் உலகநாடுகளிடையே ஊடுருவியது. நாடுகளிடையே அரசு முதலாளித்துவம் வலுவடைந்தது. ஏகாதிபத்தியங்களுடைய சார்புடன் உள் நாடுகளிடையே யந்திர உற்பத்தியானது இறக்குமதிக்குப் பதிலீடு உற்பத்தி செய்வதாகவும், ஏகாதிபத்தியச் சந்தைக்காகவும் வளர்ச்சியடைந்தது. கூலி உழைப்பாளர் ஓரளவு பெருகி நகரங்கள் வளர்ச்சியடைந்தன.

மூன்றாவது உலக நாடுகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்த ஒரே வழி சனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே என ஏகாதிபத்தியங்கள் ஆலோசனை கூறி உதவ முன்வந்தன. கட்டாயக் கருத்தடை முறைகள் பரவலான பிரச்சாரத்துடன் புகுத்தப்பட்டுக் கருச்சிதைவும் சட்டப்பூர்வமாக்கப்பட்டது. கருத்தடைச் சாதனங்களின் உற்பத்தி முதலாளித்துவத்திற்கு மற்றொரு இலாபம் தரும் உற்பத்தியானது.

இந்நடவடிக்கைகள் பெண்களின் தொடர்ந்த கர்ப்பம், பிள்ளை வளர்த்தல் போன்ற வேலைப் பளுக்களை ஓரளவு குறைத்துள்ளன என்றே கூறலாம். உயர்தர, நடுத்தர வகுப்பினர் பெண் கல்விக்கும் அனுமதித்தனர். தரகு முதலாளிகள் பெண்களின் உழைப்பை மலிவாக வாங்க



படிப்பகம்

www.padippakam.com



முடியும் எனக் கண்டு கூலி உழைப்புகளிலும் பெண்களை ஈடுபடுத்தினர்.

இவ்வாறான பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்டபோதும் நிலவுடைமைச் சிந்தனைகளே இன்றும் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதனால் பெண்ணடிமைத் தனமும் ஆண் தலையெடுத்த நிலையும் சமூகத்தில் மாற்ற மடையாது அப்படியே உள்ளன. பெண் தானே தீர்மானித்து சுதந்திரமாகக் கருத்தடை, கருச்சிதைவு செய்ய முடியாத நிலையே இன்றும் நிலவுகிறது. கணவனே இவற்றைத் தீர்மானிக்கிறான். கணவனின் உத்தரவின்றிப் பெண் நடவடிக்கை எடுத்தால் அவள் தண்டிக்கப்படுவாள்.

மேலும், குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் பிரச்சாரத்தை ஏற்றுக்கொண்ட கணவன் மனைவியையே கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும்படி வற்புறுத்துகிறான்.

கூலி, ஏழை, விவசாயக் குடும்பத்தில் பெண்கள் அனைவரும் வயல்களில் கூலி வேலைக்குச் செல்கின்றனர். வயல்களில் வேலை கிடையாத நாட்களில் விறகு வெட்டுதல், வசதியான குடும்பங்களில் கூலிவேலை செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். வீட்டுக் கடமைகளும் இவர்கள் பொறுப்பே.

நடுத்தர விவசாயக் குடும்பப் பெண்கள் தம் சொந்த வயலிலும் உழைத்து வீட்டிலும் தமக்கென ஒதுக்கப்பட்ட பரம்பரைப் பணிகளைச் செய்கின்றனர்.

அவ்வாறெல்லாம் இன்றைய அரை நிலப்பிரபுத்துவ, அரைக்காலனி, நவகாலனி நிலையிலும் பெண் அடிமை நிலையில், அடிமையாக உழைத்து, அடங்கி ஒடுங்கி வாழ நேரிடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# 5. முதலாளித்துவம் விடிவல்ல

பண்ட உற்பத்தியை யந்திர உற்பத்தி மூலம் பெருக்குவதே முதலாளித்துவம். உற்பத்திச் சாதனங்கள் சிறுபான்மையினரின் ஆதிக்கத்துள் வர எல்லோரையும் கூலி உழைப்பாளராக்கி, உழைக்கச் செய்வது; அவர்களுக்கே உற்பத்திப் பண்டங்களையும் விற்பது. கிடைக்கும் உபரிகள் மூலம் மூலதனத்தைப் பெருக்கிக்கொண்டே முதலாளித்துவம் மேலும் மேலும் வளர்கிறது.

இச்சமூக அமைப்பு நிலப்பிரபுத்துவத்தைவிட முற்போக்கானது; பெண்களையும் முடிந்தவரை கூலி உழைப்பில் ஈடுபடுத்திவிடுகிறது. அதனால் பெண்களும் சமூக உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் ஓரளவு பொருளாதாரச் சுதந்திரம் பெறுகின்றனர்.

முதலாளித்துவ நாடுகளில் இந்நூற்றாண்டில் சந்தை பிடிக்கும் போட்டியால் நடைபெற்ற இரண்டு உலக யுத்தங்களும் வீடுகளில் அடிமையாகக் கிடந்த பெண்களைக் கூலிச் சந்தைக்கு இழுத்து வந்தன. அதைத் தொடர்ந்து வளர்ந்து வரும் பண்ட உற்பத்தி மூலதனம் மேலும் மேலும் பெண்களைக் கூலிச் சந்தையில் ஈர்த்து வருகிறது.

முதலாளிகள் பல காரணங்களால் பெண்களை முடிந்த வரை வேலைக்கமர்த்த விரும்புகின்றனர்.

ஒன்று, ஆண்களிலும் பார்க்கக் குறைந்த கூலியில் அவர்களது உழைப்பை வாங்கிவிட முடிகிறது.

இரண்டாவது, பெண்கள் தொழிற்சங்கங்களின் கீழ் அணிதிரளாது, வேலை நிறுத்தங்களில் ஈடுபடாது உழைப்பார்கள் என்ற துணிவு.

www.padippakam.com



மூன்றாவது, வீட்டில் அதிக வேலையற்றிருப்பவர்கள் குறைந்த கூலியில் நுகர் பண்டங்களுக்காக வேலை செய்ய முன்வருபவர் என்ற முடிவு.

நாலாவது. தரப்படும் வேலையை எதிர்ப்பு கூறாது ஒழுங்காகச் செய்து கட்டுப்பாட்டுடன் அலுவலக விதிகளுக்குட்பட்டுப் பணியாற்றுவர் என்ற நம்பிக்கை. ஆயினும் தொழிற்சாலையில் கடைசியில் வேலையில் சேர்ந்து முதலில் வெளியே தள்ளப்படுபவர்களும் பெண்களே.

தாதி, விமானப் பணிப்பெண், தட்டச்சு, சுருக்கெழுத்து, தையல், கம்பியூட்டர், குமாஸ்தா, டெலிபோன், டெலெக்ஸ் வேலைகளுக்குப் பெரும்பாலும் பெண்களையே முதலாளித்துவம் விரும்பியபோதும் அவர்களது அழகு, பாற்கவர்ச்சியை பயன்படுத்தும் தொழில்களிலும் உணர்வுப் பூர்வமாக முதலாளிகள் ஈடுபடுத்துகின்றனர். உயர் பதவியிலுள்ளவரது செயலர், வரவேற்பாளர், விற்பனையாளர், பண்டவிற்பனைக்கு 'மாடல்'கள் ஆகிய தொழில்களில் சிறப்பாகப் பெண்களையே பயன்படுத்துகின்றனர்.

பெண்கள் வெளியே சென்று உழைப்பதனால் குடும்பத்திலுள்ள அவர்களது பிற பொறுப்புகள் குறைந்துவிடுகின்றன எனச் சிலர் நினைப்பது தவறு. வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் நிலப்பிரபுத்துவத்தில் பெண்களுக்காக விதிக்கப்பட்ட சமையல், குழந்தை வளர்த்தல். வீட்டைப்பேணல், துணி துவைத்தல் ஆகிய விரக்தியும் சோர்வும் தரும் தொழில்கள் அவர்களுக்கே உரியனவாகும்.

ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவிலும் பெண்கள் சர்ாசரியாக நாள்தோறும் 16 மணி நேரம் உழைப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. வாரத்தில் ஏழு நாளும் உழைக்க நேரிடுகிறது. உற்பத்தியில் ஈடுபடும் ஆண்கள் 8 மணி நேரப்படி 5 நாட்கள் மட்டுமே வாரத்தில் உழைக்கின்றனர்.

www.padippakam.com



முதலாளித்துவ நாடுகளில் பெண்களுக்குச் சமைப்பதற்கு மின்சார, காஸ் அடுப்புகள் இருக்கின்றன. நிலம் பெருக்க 'வக்கூம்' துடைப்பங்கள் உள்ளன, துணி துவைக்க வாஷிங்மெஷின்கள் உள்ளன எனக் கூறுபவர்கள் ஓர் அடிப்படை உண்மையை அறியாது கூறிவிடுகின்றனர். இந்த இயந்திரப் பொருட்கள் பெண்களுக்குச் சும்மா கிடைத்து விடுவதில்லை; அவர்கள் நாள்தோறும் வெளியே சென்று தொழிற்சாலைகளில், கடைகளில். அலுவலகங்களில் கூலி அடிமையாக உழைப்பதினாலேயே இவற்றை வாங்க முடிகிறது.

உதாரணமாக எங்கள் கிராமத்துப் பெண் ஒரு ரூபாவிற்கு வாங்கிப் பயன்படுத்தும் துடைப்பத்திற்கு ரூபாய் இரண்டாயிரம் வரையில் தன் உழைப்பில் சேமித்து அங்குள்ள பெண் 'வக்கூம்' துடைப்பம் வாங்குவது மட்டுமல்ல, அதைப் பயன்படுத்தும் காலத்து மின் செலவு, பழுதடையும் வேளை ஏற்படும் திருத்தச் செலவையும் அவளே உழைக்கவேண்டியுள்ளது. அவ்வாறே பயன் படுத்தும் எலெக்டிக் குக்கர், பிரிட்ஜ், கார் முதலிய யந்திரப் பொருள் வாங்கவும் அவற்றைப் பேணவும் அவளே உழைக்கவேண்டும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

ஆயினும் முதலாளித்துவச் சமூக அமைப்பில் பெண்ணடிமை நிலையிலிருந்து சில துறைகளில் பெண் விடுதலை பெறுகிறாள்.

ஒன்று, நிலப்பிரபுத்துவத்தில் நிலவும் கூட்டுக் குடும்ப உறவுகள் இங்கு உடைகின்றன. அதனால் குடும்பத் தலைமைக்குப் பெரியவர்கள் என்று கூறப்படுபவர்களின் ஆதிக்கத்திலிருந்து அவள் வெளியேற முடிகிறது.

இரண்டாவது, நிலப்பிரபுத்துவத்தில் இரு ஒத்த குடும்பங்கள் மேலும் பலப்படுவதற்காக ஆண், பெண் இருவரது அனுமதியின்றியே நடைபெறும் திருமணம் இங்கு ஒப்பத்த

படிப்பகம்

www.padippakam.com



முறையில் சட்ட முறைப்படி நடைபெறுகிறது. இதனால் விவாகரத்தும் ஓரளவு எளிதாகிறது. விவாகரத்து பெண்களது அந்தஸ்தை முதலாளித்துவ அமைப்பில் அதிகம் பாதிப்பதில்லை. விவாகரத்தின் பின்னர் அல்லது கணவன் இறந்தால் பெண் மீண்டும் திருமணம் செய்து கொள்ள முடிகிறது.

மூன்றாவதாகக் குடும்பத்திலிருந்து தனித்து வாழத் தக்களவு பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெண் பெற்றுக் கொள்கிறாள்.

நாலாவதாகக் குடும்ப அளவைத் திட்டமிட்டுக் கட்டுப் படுத்தவல்ல உரிமையைப் பெரும்பாலும் அவள் பெற்றுக் கொள்கிறாள். பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பெண் விரும்பினால் சட்டப்படிக் கருச்சிதைவு செய்து கொள்ள உரிமை பெற்றுள்ளாள். ஆயினும் கத்தோலிக்க மதம் சார்ந்த குடும்பங்களில் கருத்தியலாகப் பெண் கருத்தடையே செய்ய முடியாது கட்டுப்படுத்தப் பட்டுள்ளாள்.

எவ்வாறாயினும் முதலாளித்துவச் சமூக அமைப்பும் ஆண் ஆதிக்கம் மிக்க சமூக அமைப்பே. நாட்டின் 50 சதவீத மானவர் பெண்களாக இருந்தபோதிலும் 90 சதவீதமான அரசியல் பிரதிநிதிகள், தலைவர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், சிறை அதிகாரிகள், இராணுவத்தினர், பொலீசார், மதத்தலைவர்கள் முதலியோர் ஆண்களாகவே உள்ளனர். இவர்கள் மூலம் பெண்களுக்கு எப்படி நீதி கிடைக்க முடியும்? எல்லாத் துறைகளிலும் 50 சதவீதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும் என இவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்துவார்களா?

முதலாளித்துவ நாடுகளில்கூட இரவு நேரம் கழிந்த வேளைகளில் பெண்கள் தனியே நடமாட முடியாது. பெண்களைக் குறைவாகக் கருதும் ஆண் கூட்டத்தின் ஒரு பகுதியினர் தனிமையில் பெண்களைக் கண்டதும் கற்பழிக்க, பலாத்காரம் செய்ய, கேவலமாகப் பேச,

www.padippakam.com



பொருட்களைப் பதிமுதல் செய்ய முயல்வர். தாம் விடுதலை பெற்றதாகத் தவறாக எண்ணும் பணக்காரப் பெண்கள் நடு இரவில் தெருக்களில் தனியே போகத் துணிவார்களா?

மறுபுறத்தில், பெண்களை அழகுப் பொம்மையாக, கவர்ச்சிப் பெண்ணாகக் காணப் பெரும்பாலான ஆண்கள் விரும்புவதைக் கண்ட பெண்களும் தமது உடை, அழகு சாதனங்களில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். வாய்ப் புள்ள பெண்கள் தமது உடைகளை, பாஷன்களை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனர். ஆண்கள் ஒரே உடையை நீண்ட காலமாக அணிவதைப் பெருமையாகக் கூறும்போது பெண்கள் ஒரே நாளில் பல உடைகளை மாற்றுவதைக் கூறிப் பெருமைப்படுகின்றனர்.

ஆண்களைப் போல உடையணிவது சமத்துவத்தை நாடிப் பெண்கள் வளர்ந்து வருவதையும் கவர்ச்சி உடை வெறியிலிருந்து ஒதுங்குவதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். ஆண்கள் ஒருபோதும் பெண்ணுடை அணிய வரமாட்டார்கள். ஏனெனில் தாம் பெண்களிலும் உயர்ந்தவர் என்ற செருக்கு!

இன்றும் முதலாளித்துவத்தில் வெளிவரும் மாதர் சஞ்சிகை, மகளிர் பகுதிகள் பெண்களுக்குப் பல்வேறு சமையல் முறைகள், குழந்தை வளர்ப்பு, பாஷன் உடைகள், வீட்டிற்கு வேண்டிய பண்டங்கள், ஆபரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், கூந்தல் வளர்த்தல் முதலியவைப்பற்றி எழுதுபவையாகவே உள்ளன.

பெண்கள் தம் அடிமை நிலையிலிருந்து விடுபடும் முறைகள் அதற்குரிய போராட்ட வழிகள் பற்றிக் கூறும் இதழ்கள், சஞ்சிகைகளைக் காண்பது அரிது. ஏனெனில் ஆண்களே இவ்விதழ்களை முதலாளித்துவம் சார்ந்து நின்று நடத்துகின்றனர். கல்வியிலும் மனையியற் கல்வி எனப் பெண்களை மட்டுமே கல்லூரிகள்வரை கற்கச் செய் கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



இன்று பெண் விடுதலைக்காகக் குரல் எழுப்பும் பெண் விடுதலை இயக்கங்களும் சில உரிமைகள், சலுகைகள், சீர்திருத்தங்களே வேண்டி நிற்கின்றன. பெண்களின் பூரண விடுதலைக்காகப் போர் தொடுக்கும் இயக்கங்களை முதலாளித்துவ நாடுகளில் காண முடியவில்லை.

சமூக அமைப்பை முற்றாக மாற்றி அமைக்கும் புரட்சி அரசியலால் மட்டுமே பெண் அடிமைக்கு விடிவு காண முடியும் என்பதைப் பெண்கள் உணர்ந்து அதற்கான போராட்டத்தில் இறங்க வேண்டும். பிரெசியர்களைக் கொடிகளில் கட்டி அமெரிக்காவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தும் பெண்களால் என்றும் முழு விடுதலை பெற்று விட முடியாது. அதனால் இத்தகைய போராட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கருதிவிடக் கூடாது. பெண்களின் விடுதலைப் போராட்டம் ஒரு காலகட்டத்தில் புரட்சிகர அரசியல் போராட்ட வடிவம் எடுக்கவே செய்யும்.

நிலப்பிரபுத்துவம், பெண் கர்ப்பத்தை மகிழ்வோடு ஏற்கும்போது முதலாளித்துவம் கேவலமாகப் பெண்ணைப் பார்க்கிறது. அலுவலங்களில் கர்ப்ப வயிற்றோடு வரும் பெண்களைச் சக ஆண் ஊழியர்கள் கேலி செய்கின்றனர். குழந்தை பெற்ற நடுத்தர வர்க்கப் பெண்கள் வேலைக்குச் செல்லும் வேளையில் குழந்தைக்குத் கிடைக்கக்கூடிய இயற்கையான சத்துணவும் தாயின் அரவணைப்பும்கிட்டாது போகிறது. தாயும் மார்பில் தேங்கிப் பழுதடையும் பாலால் துன்பமடைகிறாள். முதலாளித்துவம் இவை பற்றிக் கவலைப்படுவதில்லை.

குறிப்பிட்ட கூலியைக் கொண்டு வாழ நேர்வதாலும் துகர் பண்ட ஆதிக்கத்தாலும் முதலாளித்துவச் சமூகத்தில் பெண்கள் தாமே குடும்ப அளவைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர்.

www.padippakam.com



இந்நிலையால் மேல் நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி குன்றி வருவதையிட்டுச் சமூக விஞ்ஞானிகள் கண்டு கவலைப்படுகின்றனர்.

முதலாளித்துவ நாடுகளில் பெண்கள் தம் நுகர்பண்ட வாழ்க்கைத் தரத்தை, குழந்தையைப் பெற்று வளர்ப்பதிலும் பார்க்க முதன்மைப்படுத்துகின்றனர். அமெரிக்காவில் ஆண்டுதோறும் 15 இலட்சம் கர்ப்பச் சிதைவுகள் நடைபெறுகின்றன. பெரும்பாலானவை முதற்கர்ப்பமாகும். பொருளை முதன்மைப்படுத்தும் வாழ்க்கையையே அங்கு வாழ்கின்றனர். குழந்தை வேண்டுமாயின் நுகர்பண்டம் தரும் திருப்திகளை, வசதிகளை இழக்க நேரிடும். குழந்தைக்காகத் தாம் பயன்படுத்தும் காரை இழக்க அவர்கள் தயாரில்லை. காரா? குழந்தையா? காரே முதன்மை பெறுகிறது.

நிலப்பிரபுத்துவச் சமூகத்தில் குழந்தைகள் தரும் உணர்வுப் பூர்வ மகிழ்ச்சியில், தம் பிற துன்பங்களை மறந்து, பெண்கள் தற்காலிகச் சந்தோசமடைகின்றனர். குழந்தையின் சிரிப்பில் மெய்மறந்து கொஞ்சி மகிழ்கின்றனர். குழந்தை, தம் வேலைச் சுமையுடன் அழுது தொல்லை தரும் போது அடித்து மேலும் அழச் செய்கின்றனர். இன்றைய சமூக விசித்திரங்களில் இதுவுமொன்று.

# 6. பெண்மேல் வன்முறை

அடிமைத்தனத்தை நிலை நாட்டுவதற்கு இரண்டு வழிகள் கைக்கொள்ளப்படுகின்றன. ஒன்று வன்முறை, மற்றது கருத்தியல்கள். [கருத்தியல்கள் பற்றி அத்தியாயம் 9இல் பார்க்க.]

www.padippakam.com



பிறந்த நாள்தொட்டே பெற்றார், மூத்தவர், ஆசிரியர், பின்னர் கணவனும் பெண்கள் மேல் வன்முறையைப் பிர யோகிக்கின்றனர். எடுத்ததும் பெண்களைக் கையால் அடிப்பது சாதாரணம். அடுத்ததாகக் கையில் கிடைக்கும் செருப்பு, துடைப்பம், தும்புத்தடி, அகப்பை, பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மயிரைப் பிடித்து இழுப்பது, காலால் உதைப்பது, பிடரியில், கன்னத்தில் அறைவதும் வழக்கம். இத்தகைய வன்செயல்களின் போது பெண்கள் இறந்து விடுவதும் உண்டு. இத்தகைய கொலைகள் பெரும் பாலும் மறைக்கப்பட்டு, இயற்கை மரணமாக்கிச் சட்டத்தின் பிடியிலிருந்து பெரும்பாலோர் எளிதாகத் தப்பிக் கொள் கின்றனர். கிராமத்துப் பெரிய மனுஷர், பொலீசாரும் இவற்றுக்குரிய பரிசுகளுடன் இச்சம்பவங்களை அமுக்கி விடு கின்றனர்.

ஸ்டோவ் வெடித்த மரணங்கள், மண்ணெண்ணெய் ஊற்றி எரிந்த தற்கொலை மரணங்கள் எனக் கூறப்படுபவை களில் பெரும்பாலானவை இத்தகைய மூடு மந்திரங்களே.

1982-84 காலக் கட்டத்தில் வட இந்திய ஆறு மாநிலங் களில் 1004 பெண்கள் சீதனக் கொடுமையால் எரியூட்டியும் பிறவிதமாகவும் கொல்லப்பட்டனர் எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதே வேளை நாகலாந்து, திரிபுரா, மிசோரம், அருணாசலப் பிரதேசம் ஆகிய பழங்குடியினர் எனக் கூறப்படுபவர் வாழும் மாநிலங்களில் ஒரு பெண்ணும் சீதனக் கொடுமையால் கொல்லப்பட்டது கிடையாது. எது நாகரிகம்? எது பண்பாடு? இந்தியத் தென்மாநிலங்களில் சீதனக் கொடுமைகள் இருந்தபோதும் வட மாநிலங்கள் போன்றளவு கொலைகள் நடைபெறுவதில்லை. கேரளம், இலங்கை போன்ற கல்வி மிக்க இடங்களில் சீதன வழக்கம் நிலவியபோதும் பெண்ணைக் கொலை செய்யும் நிகழ்ச்சி கள் கிடையா. கல்வியறிவும் பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடுதலும் அவர்களை அடிமை நிலையிலிருந்து ஓரளவு

www.padippakam.com



விடுதலையடையச் செய்கிறது என்பதற்கு இப்புள்ளி விபரங்களும் ஓரளவு எடுத்துக்காட்டே.

படித்து, வெளியே உழைக்கும் பெண்ணிடமும் சீதனம் வலியுறுத்திப் பெறுவது மற்றொரு கொடுமையான விசித்திரப் போக்காகும். இதனால் பெண்களின் கல்வியைப் பலர் தடுக்கின்றனர்; வயது வந்ததும் கட்டிக் கொடுக்க முயல்கின்றனர். அதிகம் படித்தால் அதற்கும் மேலான பட்டத்துடன் மாப்பிள்ளை தேடவேண்டும் எனக்கூறியும் கல்வியைத் தடுக்கின்றனர்.

திருமணத்தில் உயர்ந்த இடம் பார்ப்பதும் சீதனப் பிரச்சனையை வலுவாக்கிப் பெற்றார்க்கும் பெருந்துன்பமாகிறது.

ஆணின் வன்முறையை எதிர்த்துப் பெண் கை உயர்த்தினால் படுகாயம் ஏற்படும் நிலைவரை அல்லது மரண நிலை ஏற்படும் வரை பெண் தண்டிக்கப்படலாம். ஆண்களை எதிர்த்துப் பெண்கள் கை உயர்த்த முடியாது என்பதே இன்றைய சமூக நீதி.

நிலப்பிரபுத்துவ அமைப்பில் மனைவி, கணவனைத் தவிர வேறு எவருடனாவது பாலுறவு கொள்வது கண்டு பிடிக்கப்பட்டால் பெரும்பாலும் பெண் கொலை செய்யப்படுகிறாள். இந்நிலையில் மட்டும் பெரும்பாலும் ஆண் சட்டத்தின் பிடியில் அகப்பட நேரிடுகிறது. இதற்குச் சிறைத் தண்டனையே கிடைக்கிறது. தம்தம் குடும்பம் பற்றிய ஏற்றம் தாழ்வு பற்றிக் கணவன் மனைவியின் விவாதத்தின்போது, சீதனப் பிரச்சனை முற்றும் வேளைகளில் பெண்ணை எரித்தல், கொலை செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்தியச் சிறைச்சாலைகளில் மனைவியைக் கொன்றவர்கள் கணிசமான தொகையினர் உள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

மனைவி மற்றொரு காதலனுடன் பாலுறவு கொள்வதற்குக் கணவன் கொலை செய்வது சரியான முடிவு என

www.padippakam.com



இன்றும் கிராமங்களில் பெண்கொலை நீதிப்படுத்தப் படுகிறது. கணவன் தன் மனைவியை வேறொருவனுடன் பாலுறவு கொள்ள அனுமதிப்பது விபச்சாரமாகக் கொள்ளப் படுவதில்லை. இது ஒன்றே பெண்ணடிமை நிலைக்கு எளிதான எடுத்துக்காட்டு.

பாலியலான வன்முறைக்கும் பெண்கள் இன்றைய ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பில் பெரும்பாலும் ஆட்படு கின்றனர். சமூக வாழ்வில் இவ்வன்முறையைப் பெண்கள் எதிர்க்க வேண்டியவராக உள்ளனர். தவறினால் அவர் களது முழுவாழ்வுமே பாதிக்கப்படலாம். பாலியல் பலாத் காரத்தைப் பெண் எதிர்த்தபோதும் அவளே சமூகத்தின் பழிக்கும் உட்படுகிறாள்.

கற்பழிக்கும் வன்முறையைப் பிரயோகித்துவிட்டுப் பெண் மேலேயே பழியைப் போடுவது, மற்றோர் ஆண் ஆதிக்க நீதியாகும். அவளின் அழகும் கவர்ச்சியுமே என்னைப் பாலுறவிற்குத் தூண்டின, அதற்குரிய தண்ட னையே கற்பழிப்பு என ஆணாதிக்க மேலாண்மையை நிறுவுகின்றனர். பெண்கள் தம் விருப்பத்தை வெளியே காட்ட மாட்டார்கள். ஆண்கள் தம் பலாத்காரம் மூலமே பாலுறவு இன்பத்தை அவர்கட்கும் வழங்கவேண்டும் என்ற ஆதிக்க உணர்வும் ஆண்களிடம் கருத்தியலாக உள்ளது.

பாலுறவு, வன்முறைக்கு எதிராகச் சட்டங்கள் இருந்த போதும் பெண்கள் அதன் துணையை நாடுவதில்லை. சட்டத்திடம் சென்று அவர்கள் தம் எதிகால வாழ்க்கை யையும் சமூக அந்தஸ்தையும் இழக்க நேரிடுகிறது. இதையும் ஆண்கள் அறிந்து வாய்ப்புள்ள வேளையில் பலாத்காரத்தில் இறங்குகின்றனர்.

கற்பழிப்பிலிருந்து தப்புவதற்கு எதிர்ப்பு காட்டாதே எனப் போலீசார் கூறுவர்: எதிர்ப்புக் காட்டாவிடின் நீ சோரம் போனாய் என நீதிபதி நீதி வழங்குவார்.

www.padippakam.com



இனக் கலவரங்கள், உள்நாட்டு யுத்தங்கள் நடைபெறும் வேளையில் பெண்கள் மேல் பாலுறவு, வன்முறை பரவலாக நடப்பதைக் காண்கிறோம்.

மேலாதிக்கம் கொண்ட இனத்தவரும் சட்டத்தைத் தம் கையில் கொண்ட பொலிசார், இராணுவத்தினரும் தம் பலாத்கார ஆட்சியைப் பெண்கள்மேல் காட்டுகின்றனர்; வஞ்சம் தீர்ப்பதாகக் கணவன், பெற்றோர் முன்னிலையிலேயே வன்முறையில் ஈடுபடுகின்றனர். இக்காலக் கட்டத்தில் தாம் விடுதலை பெற்றதாகக் கூறும் மேல் வகுப்புப் பெண்கள்கூடத் தப்பிவிட முடிவதில்லை.

ஆண், பெண் சமத்துவமற்ற சமூக அமைப்பையே இவை தெளிவாகக் காட்டுகின்றன.

கற்பழித்தல் என்ற வார்த்தை 'ரேப்' (Rape) என ஆங்கிலத்தில் பயன்படுத்தப் படுவதிலும் பார்க்க மிகவும் கொடியதாகத் தமிழரால் உணரப்படுகிறது. ஆங்கிலத்தில் 'ரேப்' என்பது பெண்மேல் பாலியலாகக் காட்டப்படும் வன்முறையையே குறிக்கிறது.

தமிழ் மொழியிலும் பெண்மேல் காட்டப்படும் பாலியலான பலாத்காரமாகவே கொள்ளப்பட வேண்டும். நிலப்பிரபுத்துவக் காலத்துப் பெண்ணடிமைச் சிந்தனை, 'கற்பழிப்பு' என்பதைப் பெண்ணின் வாழ்க்கையை அழிப்பதாகக் கருதக் கூடியதாக அர்த்தப்படுத்தப் படுகிறது. கணவன் பலவித வன்முறைகளை மனைவிமேல் பிரயோகிக்கிறான்.

மனைவி நோயுற்ற வேளை, பாலுறவை விரும்பாத வேளையும் பலாத்காரமாகப் பாலுறவு கொள்கிறான் என்பதிலும் பார்க்கத் தன் பாலெழுச்சியைத் தணித்துக் கொள்கிறான் என்றே கூறவேண்டும். ஏனெனில் ஒரு பெண்ணின் அனுமதி, விருப்பு இன்றிப் பாலுறவு கொள்வதென்பது முழுமையான இன்பம் தருவது எனக் கூற முடியாது. ஒருதலைக் காம வெறியின் அடக்கமே அதுவா

www.padippakam.com



கும். இதே போலவேதான் கற்பழிப்பு என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். கையால் அடிப்பது, காலால் உதைப்பது போன்ற மற்றொரு வகையான பலாத்காரமே கற்பழிப்பு ஆகும். இதற்காகப் பெண்மேல் பழியைப் போட்டுப் பெண் தற்கொலை செய்யவேண்டும் என இந்தியச் சினிமாவில் வற்புறுத்துவது பேடித்தனம் மட்டுமல்ல, பெண்ணினத்தை அடிமையிலும் கேவலமாக மதிக்கும் அற்பத்தனமாகும்.

தன் இரத்தத்திலும் சதையிலுமிருந்து பெற்றெடுத்த மகனே வளர்ந்த பின்னர் ஆணுலகத்துடன் சேர்ந்து பெண்களை அடிமைப்படுத்த ஒன்று சேர்வது மட்டுமல்ல, பெற்ற தாயையே அடிப்பதையும் காண்கிறோம். தாயைத் திருத்தத் தனயன் அடிப்பதையும் நீதிப்படுத்தும் சமூக அமைப்பில் பெண்ணுக்கு நீதி எப்படிக் கிடைக்க முடியும்?

உழைக்கும் பணத்தைக் குடித்துவிட்டு, வீடுவந்து அதிகாரம் பேசி மனைவியை அடித்து, உதைக்கும் சம்பவங்கள் நாள்தோறும் பலகுடும்பங்களில் நடைபெறுகின்றன. இவ்வாறு பிள்ளைகளோடும், குடும்பத்தோடும் கட்டுண்டு இன்னலுறும் பெண்கள் ஏராளம். தாய்க் குலத்தின் நிலை இதுவே. இவர்களின் விடுதலையோடுதான் சமூகமும் விடுதலை பெற முடியும்.

# 7. பாலியலான சுரண்டல்

தம் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பெண்ணினம் வாழ்வதாகவும் ஆண் தலையெடுத்த சமூக அமைப்பில் பெரும்பாலான ஆண்கள் இன்றும் எண்ணிக் கொள்கின்றனர்.

www.padippakam.com



பாலுணர்வு உளவியல் சார்ந்தது என்பது உண்மையே; பெண்கள் அதற்கு விதி விலக்கல்ல. ஆயினும் ஆண்களது நினைவிலி மனத்தில் பெண்கள் தம்மிலும் தாழ்ந்தவர் என்ற எண்ணம் கருத்தியலாகப் பதிந்துள்ளது. அதனாலேயே பெண்களை உற்றுப்பார்த்தல், கேலி பேசுதல், தனித்த இடங்களில் சேட்டையிடல், வாய்ப்பான இடங்களில் பலாத்காரமாகவே இழுத்தல், கற்பழித்தல் போன்ற சம்பவங் கள் நிகழ்கின்றன.

புராதனச் சமூகத்தில், பாலுறவு கொள்ள விரும்பும் ஆணைப் பெண்ணே தேர்ந்தெடுத்தாள். குறிப்பிட்ட ஒரே ஆணுடன்தான் பாலுறவு கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு அவளுக்கு இருக்கவில்லை. பிள்ளை களை அவளாகவே வளர்த்தாள். பிள்ளைகள், தாயின் பின்னே செல்லும் குட்டிகள் போலச் சென்றனர். பிற உயிரினங்களிடையே இந் நிலையை நாம் நாள்தோறும் காண்கிறோம்.

இடம் பெயராத உற்பத்தி, வேலைப் பிரிவினை பெண்ணின் ஆதிக்கத்தைச் சிறிதுசிறிதாகக் குறைத்து, வர்க்கச் சமுதாயம் அவளை அடிமை நிலைக்குக் கொண்டு வந்தது. தனிச்சொத்துடமை அமைப்பு பெண்ணின் பாலியல் சுதந்திரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தியது. ஆணின் ஆதிக்கத்தில் சொத்து தன் மகனுக்கே என்ற ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பு என்பது நிலையானது.

ஒருதார மணமுறை என்பதிலும் பார்க்கப் பெண்களைப் பொறுத்தவரை 'ஒரே கணவன் மணமுறை' என்று கூறுவதே சரியாகும். ஏனெனில் எந்தக் கணவனும் 'ஏக பத்தினி விரதன்' என்று கூறிவிட முடியாது. சட்ட ரீதியற்ற முறையில் 'சின்ன வீடு' வைத்திருப்பதைச் சமூகத்தால் தடை செய்ய முடியவில்லை; இரண்டாவது, மூன்றாவது தாரத் திருமணம் செய்கிறான்; விதவையால் செய்ய முடியாது. பெண். விபச்சார விடுதிகளே நாடுகளில் உள்ளன. சமூகம்

www.padippakam.com



இவற்றை அனுமதிக்கிறது. ஆனால் குடும்பப் பெண் ஒரு நாள் தானும் தவற முடியாது. தவறினால் தண்டனை தாங்க முடியாதது. அவளது வாழ்வே முடிந்து விடுகிறது. இன்றைய பாலியல் சார்ந்த சமூக உறவுகள் அத்தனை பலம் வாய்ந்தவை.

நிலப்பிரபுத்துவம் விபச்சாரத்தை அனுமதித்தது. 'தேவடியாள்' என்றோர் தனிச் சமூக அமைப்பையே ஏற்படுத்தி வைத்தது. தேவதாசிகளே பின்னர் தேவடியாள் எனப் பெயர் பெற்றனர். இராஜராஜன் காலத்தில் தேவ தாசி முறை நிறுவப்பட்டது.

இன்று 'தேவடியா மவனே' என்று திட்டுவது மிகவும் கீழ்த்தரமாகக் கருதப்படுகிறது. 'விபச்சாரி மவனே' என்பதே அதன் அர்த்தம். தந்தையை அறியாது பிறந்தவன் தாய் விபச்சாரி என்று முடிகிறது. அவ்வாறு அழைக்கப் பட்டவன் கொதிப்படைகிறான். பெண் ஒருவனையே தன் வாழ்நாளில் திருமணம் செய்து, கணவன் தவிர்த்த எவருடனும் பாலுறவு கொள்ளாது வாழ வேண்டும் என்பதைச் சமூகம் எத்தனைக் கட்டுப்பாட்டுடன் எதிர்பார்க்கிறது என்பதை இப்படிச் சொல்லிலிருந்தே காணலாம்.

சோசலிச நாடுகள் தவிர்த்த நாடுகள் அனைத்திலும் சட்டப்பூர்வமாகவும் சட்டரீதியற்றும் விபச்சாரம் ஒரு தொழிலாக நடைபெறுகிறது. பெண்ணின் உணர்வுகள் விற்பனைப் பண்டமாகின்றன.

விபச்சாரம் என்ற ஒரே தொழிலில்தான் பெண் தன் உழைப்புக் கூலியை நேரடியாக விலை பேசிப் பெறமுடிகிறது என்று கூறுவர்.

ஆயினும் இங்கும் தரகனும் முதலாளிகளும் நுழைந்து பெண்கள் உழைப்பைச் சுரண்டுகின்றனர். மேல்நாடுகளி லும் மூன்றாம் உலக நாடுகளிலும் விபசாரத்தைத் தொழி

www.padippakam.com



லாக நடத்துவோர் பெண்களுக்குக் கூலியே தருகின்றனர். பல இடங்களில் பெண்கள் சிறைக் கைதிகள் போல ஓட்டல் களில், வீடுகளில் வைக்கப்பட்டுக் கட்டாய நிலையில் அவர் களது உடல்கள் பலாத்கார முறையில் ஆண்களுக்கு விற்கப் படுகின்றன.

ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் நாகரீகமான விபச்சார ரத்துடன் இன்று இணைக்கப்பட்டிருப்பதை அனைவரும் அறிவர். பெண்களின் உடலும் உணர்வுகளும் முதலாளித் துவத்தின் விற்பனைப் பொருளாகின்றன.

ஓட்டல்களில் நடைபெறும் 'காபரே' 'ஸ்ரிப்சிஸ்' நடனங் கள் கலைவடிவ நடனங்களல்ல பெண்களை அரை முழு நிர்வாணத்தில் ஆடச்செய்து ஆண்கள் தம் பாலெழுச்சி இன்பத்தைப் பெறுவதற்காகவும் முதலாளிகள் இலாப முழைப்பதற்கரகவும் நடத்தப் படுபவையாகும்.

தரகர், ஓட்டல் அறை வாடகை போக, பெண்களுக்குச் சிறுதொகையே விபச்சாரத்தில் கிடைக்கிறது. இன்றைய 'மசாஜ் கிளி'னிக்குகள் முதலாளித்துவத்தால் சிருட்டிக்கப் பட்ட புதிய வகைப் பாலியல் சுரண்டலாகும். இங்கு ஆண்களுக்கு மட்டுமே சிகிச்சைகள் நடைபெறுகின்றன, பெண்களால்.

பெண்கள் கூலி உழைப்புக்குச் செல்லும் இடங்களிலும் உழைப்புச் சுரண்டல் மட்டுமல்ல, முதலாளிகளால் பாலியம் சார்ந்த சுரண்டலும் நடைபெறுகிறது.

விபச்சாரத்தில் பெண்ணுடைய உடலும் உணர்வுகளும் பாதிக்கப்படுகின்றன. ஆண் தன் முழு பலாத்காரத்தையும் பெண்மேல் பிரயோகிக்கிறான். பெண் இன்ப உணர்வு எதுவுமின்றி வேதனையோடு இக்கொடுமையைப் பொறுத்து நடிக்க நேரிடுகிறது. ஒரே நாளில் பலருடைய பலாத்காரத் திற்கு அவள் இரையாகவும் நேரிடுகிறது. பெண் தன்

பெ—4

www.padippakam.com



உடலை விற்கும் தொழில் என்றே 'விபச்சாரம்' கூறப்படு கிறது.

தாம் மட்டும் உரிமை பெற்றவர்களாக ஆணினத்தவர் பாலுறவில் அயோக்கியர்களாக இருக்கும்வரை பெண்கள் எப்படிக் கற்புக்கரசிகளாக வாழமுடியும் என்பதை ஆணினம் எண்ணிப் பார்ப்பதில்லை. இச்சூழலில் தம் மனைவியர் மட்டும் 'கற்புக்கரசி' என எண்ணும் ஆண்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் ஏமாளிகளே.

கல்வாரிமலையில் விபச்சாரி என்று கூறப்பட்டவள்மேல் பாவம் செய்யாதவர் முன்வந்து, அவள்மேல் கல்லெறியும்படி யேசுகிறிஸ்து வேண்டியபோது எந்தஆணும் முன்வரவில்லை. உலக யதார்த்தத்தை அறிந்த யேசு, பிறர் மனைவியை நேசிக்காதே, அயலவன் மனைவிமேல் ஆசைப்படாதே என அதன் பின்னர்தான் 6வது 9வது என் இரு கட்டளைகள் பிறப்பித்தார் போலும்.

எங்கள் நாட்டிலும் கண்ணகி, சீதை, நளாயினி, அருந்ததி ஆகிய கற்பனைப் பெண்களையே கற்புக்கு உதாரணமாகக் கூறுகின்றனர். தம் மனைவியரையல்ல. என்றோ ஒரு நாளாவது தம் மனைவியைச் சந்தேகப்பட்டு 'வேசி' எனத் திட்டி, அல்லது அடித்து, உதைக்காத ஆண் களைக் காண்பது அரிது. இத்தகைய சூழலில் பெண் ணினம் அடிமையாக வீடுகளில் அடைபட்டு வாழ நேரிடு கிறது.

சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட போதும் 'விபச்சாரி' என்பவள் ஓரளவு விடுதலை பெற்றவளே. அவள் ஒரு கிளர்ச்சிக்காரி; இன்றைய அநீதியான, அடிமையான சமூக அமைப்பை எதிர்ப்பவள்.

பாலுறவுக் கட்டுப்பாடுகள் முதலாளித்துவ நாடுகளில் மட்டும் மீறப்படுகின்றன என நம் நாட்டு ஒழுக்கச் சீலர் களான ஆணினத்தவர் உறுதியாகக் கூறிவிடமுடியாது. அங்குத் திருமணத்தின் முன்னர்ப் பாலுறவு, சோரம்

www.padippakam.com



போதல் ஆகியவற்றில் பெண் துணிவோடு, பிறர் அறியும் நிலையிலும் ஈடுபடுகிறாள். கற்பை இறுகப் பிரச்சாரம் செய்து விபச்சார விடுதிகளுக்குச் சென்றுவரும் ஆண்களோ கூட்டுக் குடும்பங்களில் வாழ்ந்து, பெண் விரும்பியும் விரும்பாமலும் இங்குப் பாலுறவுக் கட்டுப்பாடுகளை மீறு கின்றனர். இவை பெரும்பாலும் வெளியே வருவதில்லை. அடிமைப்பெண் எப்படிக் கூறுவாள்? ஏன் கூற வேண்டும்? இவற்றைப் புள்ளி விபரங்கள் பெற்றுநிருபிக்கவும் முடியாது. உறவினரிடையே தான் பெரும்பாலும் சோரம் போதல், கற்பழிப்பு ஆகியன நிகழ்கின்றன.

இத்தகைய சூழலாலேயே பெண்களை வயது வந்ததும் வீட்டில் வைத்திருப்பது 'ஆபத்து' எனக் கட்டிக் கொடுக் கின்றனர். இளம் வயதிலேயே கர்ப்பமடைந்து, தாயாகி பெண்கள் துன்பமடைகின்றனர். பெண்கள் 18 வயதின் பின்னரேயே திருமணம் செய்ய வேண்டும் எனச் சட்டமிருந்த போதும் இந்தியாவில் பெண்கள் சராசரியாக 15 வயதில் கட்டிக் கொடுக்கப்படுகின்றனர். இது எதைக் காட்டுகிறது? வயது வராநிலையிலே கணிசமான பாலிய வயதுப் பெண்கள் கட்டிவைக்கப்படுகிறார்கள்.

விலங்கடிமைக் காலத்தில் பெண்கள் தனியாக அடைக் கப்பட்டிருந்தனர். அன்று உடலுழைப்பே பிரதான உற்பத்திச் சக்தியாயிருந்தது. திடகாத்திரமான அடிமை களை உற்பத்தி செய்யும் தொழிலையும் எசமான்கள் கவனித்துக் கொண்டனர். காளை மாடுகளைத் தேடுவது போல கட்டுடலான ஆண் அடிமைகளைத் தேர்ந்து உடலுறவுக்கு அனுமதித்தனர். அடிமைகளின் பாலுறவு இவ்வாறு எசமான்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. இரத்த உறவு முறைகள் இங்குப் பார்க்கப்படவில்லை. கட்டி வைக்கப்படும் மிருக நிலையிலேயே பெண்களையும் வைத்திருந்தனர்.

மன்னராட்சிக் காலத்தில் ஓர் இராணியைப் பட்டத் தரசியாக்கிக் கொண்டு மன்னர்கள் பல பெண்களை

www.padippakam.com



அந்தப்புரத்தில் தம் பாலுறவுத் தேவைகளுக்காக வைத்திருந்தனர்.

இராணியின் பிள்ளைகளே ஆட்சியுரிமை பெற்றனர். இராணியின் ஆட்சி என்பது கதைகளே. கணவனான மன்னன், மகனான இளவரசன் மூலமே மறைமுகமாக இராணிகளால் ஓரளவு ஆதிக்கம் செலுத்த முடிந்தது. ஆண் மகவு பெறாத இராணிகள் ஒதுக்கி வைக்கப்பட்டு மற்றொரு பெண்ணைப் பட்டத்தரசியாக்குவது வழக்கமாயிருந்தது.

அரசையும் சொத்துக்களையும் குடும்பத்துக்குள்ளேயே வைத்திருப்பதற்காக மகளை, சகோதரியரை மன்னர்கள் திருமணம் செய்த வரலாறுகள் உண்டு. ஆண்களே சட்டங்களை வழக்கங்களை ஏற்படுத்தினர். மற்றொரு நாட்டின் மன்னன் மகளைப் பெண் எடுப்பதன் மூலமும் நாடுகள் இணைக்கப்பட்டன.

இது வாய்ப்பான முறையாக இருந்தது. இரு நாடுகள் ஒன்றாக இணைவதன் மூலம் போரைத் தவிர்த்து நாடுகள் பலம் பெற முடிந்தது. ஒரு நாடு கைப்பற்றப்படும்போது அந்நாட்டு அரசி, இளவரசி கைப்பற்றிய மன்னனின் மனைவி அல்லது அந்தப்புரத்து அடிமை ஆக்கப்பட்டனர்.

நிலப்பிரபுக்கள் தமது அந்தஸ்துக்கு ஈடான நிலப்பிரபுத்துவக் குடும்பங்களில் பெண் எடுப்பதன் மூலம் தம் நிலங்களையும் குடும்பங்களையும் பலப்படுத்திக் கொண்டனர். குடும்பத்துள் நடைபெறும் தகாத பாலுறவு முறைகள் (Incest) இத்தகு திருமண முறையால் தவிர்க்கப் பட்டன. இம்முறை வாய்ப்பாகவும் இருந்தது; வழக்கமானது. இன்றும் நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலவும் திருமண முறை, சாதி, சீதனமுறை ஆகியன, திருமணம் மூலம் பாதிக்கப்படும் ஆண்பெண்ணின் விருப்பத்தைப் பற்றிக் கவலைப்படாது, இரு குடும்பங்கள் இணைவதால் ஏற்படக்கூடிய சொத்தின் பலமே முக்கியமாகக் கருதப் படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



நிலம் துண்டாடப்பட்ட இன்றைய அமைப்பிலும் தற்காப்பு நிலையே திருமணத்தில் பேணப்படுகிறது. தம் குடும்பத்துத் தனிச் சொத்தைக் காப்பாற்றிக் கொள்ள மாமன் மகள், மைத்துனியைத் திருமணம் செய்வதற்கு முதன்மை தரப்பட்டது. அடுத்ததாகவே தமது நிலைக்குச் சமமான இடத்தில் சீதனத்துடன் பெண் எடுப்பது. ஆக்கிர மிப்பின் மூலம் குடும்பச் செல்வாக்கை மேலும் வலுவாக்கு வதாகும். இங்கு இரு குடும்பமும் தனித்தனியே திருமணம் மூலம் பலம் பெறும் போட்டியும் நடைபெறுகிறது. அதுவே சீதனப் பேரம்.

உயர்மட்டக் குடியினரது நடை முறைகள் கீழ் மட்டத்தி லும் நடைமுறையாகின்றன; வழக்கமாகின்றன; சட்டங் களாகின்றன. இந்நிலை சீதன, சீர் வழக்கத்தை நடை முறையாக்கி இன்றைய சமூக அமைப்பின் சாபக்கேடாக்கி விட்டது. பெண்ணினமே இதற்கும் பலியாகிறது.

நிலப்பிரத்துவச் சமூக அமைப்பில் திருமணத்தின் போது சாதி பார்ப்பதும் முதன்மைப்படுத்தப்படுகிறது. அரை நிலவுடைமையிலும் கலப்புத் திருமணங்கள் மிகக் குறைவு. அதே சாதிக்குள்ளேயே மீண்டும் மீண்டும் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஒரே சாதிக்குள்ளும் பல குடிப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு சாதியும் தமக் குள்ளே பாலுறவை வைத்துக் கொள்வது தமது பழங்குடி மரபைப் பேணுவதாகும். சொத்தையும் தம் குலம், குடிக்குள்ளேயே காப்பாற்றிக் கொள்ளவும் இத்திரு மணங்கள் உதவுகின்றன. நிலத்தை விற்கும்போதும் வாங்குபவரின் சாதியை அறிந்து கொள்வதையும் இன்றும் காணலாம்.

சில சாதியினர் மட்டுமே வேறு குலங்களில் பெண் மட்டும் கொள்ளுகின்றனர். இதுவும் பழங்குடி மரபே. பெண்ணைக் கடத்தித் திருமணம் செய்வதும் ஒருகாலத்தில் மரபாயிருந்தது. இன்றும் ஆங்காங்கே இம்முறையின்

படிப்பகம்

www.padippakam.com



மிச்ச சொச்சங்களைக் காணலாம். ஒரு காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய பெண்ணின் நிலை பின் தாழ்ந்து விட்டதையே இவை காட்டுகின்றன.

# 8. சீரும் சீதனமும்

நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பு பெண்களின் திருமணத்தின்போது சீர் வழங்கும் முறையைக் கொண்டு வந்தது. சொத்துடைமை ஆண் வழியாக இருந்தபோது பெண்ணை மற்றொரு குடும்பத்திற்கு மணமகளாக அனுப்பும் வேளை நிலப்பிரபுக்கள் தமது அந்தஸ்தை நிலைநாட்ட சீர் வழங்கினர்; பரிசுகள் தந்தனர்.

இன்று இவ்வழக்கம், கட்டாய சீதனம் பெண்ணுடன் வழங்கப்படுவதை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சாதியினரிடமும் சீதனம் அல்லது சீர் வழங்குவது வெவ்வேறு வடிவமாக உள்ளது. இன்று இந்தியாவில் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டதால் திருமண காலப் பரிசாக மறைமுகமாகச் சீதனம் வற்புறுத்தப்படுகிறது.

சொத்துடைய குட்டி முதலாளித்துவ வர்க்கத்தவரிடையே இவ் வழக்கம் பெரிய சுமையாக வளர்ந்துள்ளது; பெண் குழந்தை குடும்பத்தில் பிறந்ததும் குழந்தைமேல் வெறுப்பேற்படும் அளவிற்குச் சீதனத்தொல்லை நிலை பெற்றுவிட்டது. ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி என்ற பழமொழியும் வழங்கப்படுகிறது.

நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பு மிகவும் பிற்போக்கான சமூக அமைப்பாகும். மூட நம்பிக்கைகள் நிறைந்த சமுதாயம் இது. மதச் சடங்குகள், வழக்கங்களை இறுகப்

www.padippakam.com



பிடிப்பது. திருமணம் என்பது இச்சமூக அமைப்பில் ஆண், பெண் இருவரை ஒன்றிணைப்பதாக இல்லாது இரு குடும்பங்கள் ஒன்றிணைந்து பலப்படுவதையே முதன்மையாகக் கொள்கிறது. அதனாலேயே திருமணத்தின்போது சாதி, சமயம், அந்தஸ்து, வயது, சாதகப் பொருத்தம், அழகு போன்ற பல விஷயங்கள் ஆராயப்படுகின்றன. உயரத்திலும் ஆணிலும் பெண் குட்டையாக இருக்க வேண்டும். இவை அனைத்தும் ஒன்றியபின் 'பெண் பார்க்கப்படுகிறது. திருமணப் பெண் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று 'ஆண் பார்க்கும்' வழக்கம் இந்தியாவில் கிடையாது. (சினிமாப் படங்களில் மட்டும் பெண்ணின் விருப்பம் கேட்கப்படுகிறது).

பெண் திருப்தியாக இருந்தால் மட்டும் இறுதியாகச் சீதனம் பேசப்படுகிறது. பண்ட வாணிபத்தில் தரகர் இருப்பதுபோல இவ்வேலையைக் கலியாணத் தரகர் ஒருவர் கமிஷனுக்காகச் செய்வார். அல்லது குடும்பப் பெரியவர்கள் வாணிபம் போலப் பேசி முடிப்பர்.

பெண் பார்ப்பது, சீதனம் ஆகிய இரண்டிலும் பெரும்பாலான திருமணப் பேச்சு வார்த்தைகள் முறிந்து விடுகின்றன. திருமணச் சந்தையில் பெண்கள் மிகவும் இழிவாக மதிக்கப்படுகின்றனர். வீட்டிலுள்ள வேண்டாத பொருட்களை அகற்றப் பேரம் பேசிப் பணம் கொடுத்து அகற்றுவது போலப் பெண்கள் நடத்தப்படுகின்றனர்.

'பெண் பார்க்க வரும்' ஒவ்வொரு ஆண் மகனையும் தன் கணவனாக எண்ணிக்கொள்ளும் பெண், அத்தகைய பலரை நெஞ்சிலிருந்து எடுத்து வீசிய பின் ஒருவன் வந்து சடங்கு முடித்துத் தாலி கட்டி, அடிமை மாடாகத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். அங்கும் அவள் சீதனம், அவளது அடிமை வேலையைக் கொண்டே அவள் மதிக்கப்படுகிறாள். சீதனத்தில் பின்னர் தகராறு ஏற்பட்டு, அடி உதை பட்டு, எரிபட்டுச் சாகும் நிலை இன்றும் நீடிக்கவே செய்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



சீதனமில்லாத பெண்கள் இரண்டாந்தாரமாக, மூன்றாம் தாரமாக வயது முதிர்ந்தவரைத் திருமணம் செய்ய நேரிடுகிறது. ஆணுக்கு எத்தனை தடவையும் திருமணம் செய்ய உரிமையுண்டு.

பெண் மட்டும் ஒரு திருமணத்தின் பின் 'விதவை'யாகி விடுகிறாள். அவளது சமூக வாழ்வு, பாலுறவு வாழ்வு அத்துடன் முற்றுப் பெறுகிறது; மற்றவர்க்கு அபசகுனமாகிறாள். இவ்வழக்கங்களை எதிர்ப்பவள் சமூகத்தின் நச்சரிப்புக்கு ஆளாகிறாள்.

எத்தனை நெருக்கடிகளுக்குள்ளும் பெண் திருமணம் செய்து ஒரு பிள்ளையாவது பெறவேண்டும். அல்லது மலடி என்ற அவச் சொல்லுக்கு ஆளாக நேரும். திருமணம் ஒன்றே பெண்ணுக்குப் பாலுறவிற்கும் வாய்ப்பளிக்கிறது. திருமணம் என்பது பாலுறவிற்கு அனுமதி வழங்கும் சடங்கு முறை. அங்கும் ஆணின் தேவையைப் பூர்த்தி செய்யும் கடமையாகிறது. அதுவும் பெரும்பாலும் பெண்களுக்கு இன்பம் தராது தொல்லையும் கணவனின் பலாத்காரமுமாகி விடுகிறது. ஒரு பிள்ளை பெற்ற பின் பெண், வயது முதிர்ந்தவளாகக் கருதப்படுகிறாள்.

இன்று உழைக்கும் பெண்களும் சீதனப் பிடியிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருக்கின்றனர். எத்தனை படித்த பெண்ணாயினும் உழைக்கும் பெண்ணாயினும் சீதனம் வலியுறுத்தப்படுகிறது.

குட்டி முதலாளித்துவ வர்க்கம் தன் போலி அந்தஸ்து, போலிக் கௌரவங்களில் மிதந்து கொண்டிருப்பதே பெண்களின் வாழ்வைப் பாதிக்கிறது. உயர்ந்த அந்தஸ்து, உத்தியோகம் உள்ள மாப்பிள்ளையைத் தேடும் போதே சீதனப் பிரச்சினையில் மாட்டிக் கொள்கின்றனர். வானத்தைப் பார்ப்பதை விட்டு நிலத்தைப் பார்த்து உழைக்கும் ஆண் மகனைத் தேடினால் அத்தனை சிரமம் ஏற்படாது.

படிப்பகம்

www.padippakam.com



போலி வர்க்கச் சுபாவம் அவர்களை விட்டுவிடுவதில்லை. அதனால் குடும்பத்தவர் மட்டுமல்ல, பெண்ணினத்தவரும் துன்பமடைகின்றனர்.

சீதனம் மட்டுமல்ல; சடங்குகள், சம்பிரதாயங்களும் வீண் செலவையும் விரயத்தையும் பெண் பகுதியினருக்கு ஏற்படுத்துகின்றன. அர்த்தமற்ற சடங்குகளும்பெண்ணடிமையைச் சுட்டிக் காட்டுகின்றன. மணமகளைத் தாரைவார்த்துக் கொடுத்தல், அம்மி மிதித்து (அகலிகையை நினைவூட்டி) அருந்ததி காட்டல் அடிமை நிலையை நிலை நிறுத்துவதாகும். ஆடம்பரமான திருமணம், அன்பளிப்புகள், தலைத் தீபாவளி, முதற் பிரசவம் போன்ற செலவுகளும் பெண் வீட்டார் தலையிலேயே சுமத்தப்படுகின்றன. இவற்றில் முழுத் திருப்தி ஏற்படுத்துவது சிரமம். இதனால் குடும்பப் பகை, சச்சரவு, சண்டைகள் ஏற்படுகின்றன; யாவற்றிலும் பாதிக்கப்படுபவள் பெண்ணே.

பாட்டாளி வர்க்கத்திடம் இத்தகைய சீதனப் பிரச்சனைகள் கிடையாது. உழைப்பைத் தவிர அவர்களிடம் கொடுக்கவும் வாங்கவும் எதுவும் கிடையாது. பெண் வயது வந்ததுமே திருமணம் செய்து கொள்கிறாள். திருமணச் சடங்குகள் மிக எளிமையாக உள்ளன. அவர்களிடம் செலவழிக்கப் பணம் ஏது? வட்டிக்குப் பணம் தரவும் எவருமில்லை. ஆணும் பெண்ணும் வெளியே சென்று உழைக்கின்றனர்.

வழக்கமே இங்குத் திருமணச் சட்டம். சீதன, திருமணப் பிரச்சினைகள், நீதிமன்றத்திற்குச் செல்லும் வழக்கங்கள் அவர்களிடம் கிடையாது.

வெளியேயும் வீட்டிலும் பெண்கள் கடுமையாக உழைக்கின்றனர். வேலை செய்யும் இடங்களிலே குழந்தையை மர நிழலில் கிடத்திவிட்டு வயலிலும், கட்டிட வேலைத் தளத்திலும் உழைக்கும் பெண்களைப் பார்க்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



கிராமப்புறங்களிலும் பார்க்க நகர்ப்புறங்களில் பாட்டாளிப் பெண்கள் துணிச்சலுள்ளவராக உள்ளனர். கணவன் அத்துமீறிக் கொடுமைப்படுத்தினால் மற்றொரு காதலனுடன் சென்று துணிவோடு குடும்பம் நடத்துவதைக் காணலாம். விதவைத் திருமணங்கள் இங்குச் சாதாரணமாக நடைபெறுவதைக் காணலாம். பாலுறவுக் கட்டுப்பாடுகள் சொத்துடைய வர்க்கத்தவரிடையே இருப்பது போன்று இறுக்கமான கட்டுப்பாடுகள் இங்கு இருக்காது.

கணவனோடு குடும்பம் நடத்தும் பெண்களிற் சிலர் கணவனுடைய கட்டுப்பாடுகளை மீறி, அவன் அறியத் தக்கதாகவே வேறு ஆண்களுடன் பாலுறவு வைத்துக் கொள்வதையும் ஆங்காங்கே காணலாம். குடும்பத்தை உடைக்க விரும்பாத கணவன் கண்டும் காணாததுபோல நடந்து கொள்கிறான். துணிச்சலான இப்பெண்களே தாய்வழிச் சமுதாயத்தின் இன்றைய மிச்ச சொச்சங்கள் எனவும் கூறலாம். பாலியல் பிறழ்வு என உளவியலார் கூறலாம். ஆண்கள் இரண்டு மூன்று மனைவியரை வைத்திருப்பது பெரிது படுத்தப் படுவதில்லை. அது தந்தை வழிச் சமுதாயத்தின் மிச்ச சொச்சம். விபச்சார விடுதிகளும் இதற்குச் சான்று பகருகின்றன.

ஒரு தார மணமுறை இன்று சட்டமாக்கப்பட்ட போதும் எந்தப் பெண்ணும் கணவனின் மற்ற மனைவியர் பற்றிச் சட்ட ரீதியாக முறைப்பாடு செய்ய பொலிசுக்கோ, நீதி மன்றத்துக்கோ செல்லமாட்டாள். அவ்வாறு செல்ல நேரின் மனைவி என்ற தன் உரிமையை அவள் இழக்க நேரிடும்.

கணவன், தன் மனைவிக்குக் கள்ளக்காதலர் உள்ளனர் என்று ஒரு போதும் நீதிமன்றத்தில் முறையீடு செய்வதில்லை. இந்த விஷயத்தில் மட்டும் பெண் உயர்ந்த உரிமை பெறுகிறாள். ஆனால் பெண்களிடம் பொருளாதாரப் பலமும் சமூகத்தைஎதிர்க்கும் துணிச்சலும் நிலப்பிரபுத் துவத்தில் குறைவாகவே உள்ளது. சமூக உற்பத்தியில்

www.padippakam.com



அவர்கள் ஈடுபட முடியாது. தனி உற்பத்தி, குடும்ப உற்பத்தியில் ஒதுக்கப்படுவதே மூதற்காரணம்.

இன்று நலிந்துள்ள சில குலங்களில் பெண் வீட்டாருக்குப் பணம், சீர்கொடுத்துப் பெண் கொள்ளும் வழக்கம் உள்ளது. இக்குடிகளில் பெண்கள் பிறப்பின் மகிழ்ச்சியடைவர். இவ்வாறு பெண் கொள்ளல் குறைவது தாய் வழிச் சமுதாயம் சிறிது சிறிதாக ஆண் ஆதிக்க சமூகத்திற்கு மாறும் நிலையாகும்.

பெண் குழந்தை என்றதும் குடும்பப் பளு, சீர், சீதனம் வேண்டும் என அஞ்சிச் சிசுக் கொலைகள் பல சமூகங்களில் மூடுமந்திரமாக நடைபெறுவதுண்டு. பிறக்கும் வேளை இயற்கை மரணம் எனப் பெயர் சூட்டுவதும் உள்ளது. இது தவிர, தற்போது விஞ்ஞான முறையில் கர்ப்பக்காலத்திலேயே குழந்தையை ஆணா, பெண்ணா, என அறியும் வாய்ப்பும் உள்ளது. இந்நிலையைப் பயன்படுத்தி வசதி உள்ளவர்கள் பெண் குழந்தையாயின் கருச்சிதைவு செய்யவும் முடிகிறது. இது பரவலாகும் வேளை சமூகத்தில் பெண்களின் குடித்தொகை குறைய நேரலாம். அதனால் பெண்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்லாம். பெண் வீட்டாருக்குச் சீர்கொடுத்துப் பெண் கொள்ளும் நிலையும் ஏற்படலாம்!

பிராமணச் சமூகத்தவரிடை சீதனம், சீர் கொடுப்பது 'வரதட்சணை' எனக் கூறப்படுகிறது. தெய்வத்திற்குப் பக்தர்கள் தட்சணை வழங்குவதுபோல மாப்பிள்ளையான 'வரனு'க்குப் பெண் வீட்டார் 'தட்சணை'யாகப் பணம், சொத்து வழங்க நேரிடுகிறது. 'வரதட்சணை'க் கொடுமை பிராமணச் சமூகத்தவரிடை மிகவும் கொடுமையாக இன்னும் நில்வுகிறதாகக் கூறுவர்.

www.padippakam.com

# 9. கருத்தியல்களின் ஆதிக்கம்

அடிமை நிலையைப் பேணக் கருத்தியல்கள் வன்முறைக்கு அடுத்து இரண்டாவதாகப் பயன்படுத்தப்படுகிறது. கருத்தியல்கள் வன்முறையற்றவை; வெறும் கருத்துக்களாலானவை; விஞ்ஞானப் பூர்வமற்றவை; அறிவுப் பூர்வமற்று மக்கள் நம்புபவை; அனாதியானவை. சமூகமே பொய்மைக் கதைகளையும் கருத்துக்களையும் யதார்த்தமாகக் கொண்டு வாழ்வதாகும். பெண்கள் தரம் குறைந்தவர், ஆண்களுக்கு அடங்கி ஒடுங்கி வாழவேண்டும் என்ற கருத்து சமூகத்தில் இயல்பாக நிலை பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

பழைய புராண இதிகாசக் கதைகள், மதக் கருத்துக்கள், பரம்பரை பரம்பரையான நடைமுறைகள் சமூகத்திலுள்ள அனைவரது நினைவிலி மனத்திலும் பெண், ஆண்களிலும் தகுதி குறைந்தவள் என்ற எண்ணமாகப் பதிந்துள்ளது.

பெண்கள் மெல்லியர்; அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்படைகளைக் கொண்டவர்கள் எனப் புலவர்கள் பாடி வைத்தனர்.

'இல்லாள்' என வீட்டிற்காக ஒதுக்கினர். 'இல்லான்' என்ற சொல் பொருளில்லாதவனைக் குறிக்கிறது. ('இல்லானை இல்லாளும் வேண்டாள்')

பிறப்பினாலல்ல, பிறந்து குழந்தை நினைவாற்றல் பெற்றதும் 'நீ ஒரு பெண்' எனச் சமூகத்தால் கற்பிக்கப்படுகிறாள்.

சமூகத்தாலும் குடும்பத்தாலும் மிகவும் கண்டிப்பாகப் பெண் வளர்க்கப்படுகிறாள். ஆண் பிள்ளைகளுக்கும்

www.padippakam.com



பெண் பிள்ளைகளுக்கும் சிறு வயதிலிருந்தே வீட்டு வேலைகள் வெவ்வேறு ரகமாகப் பிரிக்கப்படுகின்றன. மளிகைக் கடை, சந்தை, எட்ட உள்ள உறவினர் வீடுகளுக்கு அலுவலாகச் செல்லும் வேலைகள் ஆண் பிள்ளைகளுக்கும் வீடு பெருக்கல், பாத்திரம் கழுவுதல், தண்ணீர் சுமத்தல், சமையலுக்கு உதவுதல், சிறு பிள்ளைகளைப் பார்த்தல் போன்றவை பெண் பிள்ளைகளுக்குரியவை எனவும் வேலைப் பிரிவினை சிறு வயதிலேயே ஏற்படுத்தப்பட்டு விடுகிறது.

சடங்கு முறைகள் ஆண்களாலேயே செய்யப்பட வேண்டும். 'கொள்ளி வைக்க ஆண் பிள்ளை வேண்டும்' என்பர். விதவைகளுக்குச் சடங்குகளில் பங்கு பற்றும் உரிமையே கிடையாது என்பது மட்டுமல்ல, விதவையின் முகத்தில் விழிப்பதே அபசகுனம் என்ற கருத்துகளும் அனைவரது நினைவிலும் மனத்திலும் விதைக்கப்பட்டுள்ளன.

சிறு வயதிலேயே 'நீ ஒரு பெண்' எனக் கற்பிக்கப்பட்ட சிறுமி நகைகள், கூந்தல், உடை ஆகிய பெண்ணுக்குரிய தாகக் கருதப்படும் சின்னங்களைத் தானாகவே ஏற்றுக் கொள்கிறாள். முதலாவது மாதவிலக்கு ஏற்பட்டதும் அவள் தீண்டத் தகாதவளாகக் கற்பிக்கப்பட்டு, அவளது கட்டுப் பாடுகள் மேலும் இறுக்கப்படுகின்றன.

பெண்கள் வெளியே செல்லும் வேளை ஆண் துணையுடன் செல்ல வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். திருமணமான, வயதான குடும்பப் பெண்களே 'ஆண் துணை' என சிறுவர்களைத் தம்முடன் அழைத்துச் செல்வதைக் காணலாம்.

மாதவிலக்கு, பிள்ளைப்பேறு காலங்களில் வீடுகளிலேயே தீண்டப்படாதவராகப் பெண்கள் சிறைப்படுத்தப்படுவதோடு வெளியே செல்ல நேரிடினும் கோவில்கள் வழிபாட்டிடங்களில் அவர்கள் வணங்குவதும் தடுக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



கணவன் பெயரைக் கூறமறுத்தல், கணவன் சாப்பிடு முன் உணவு உண்ணாமல் இருத்தல், கணவனுடன் மட்டுமே வெளியே செல்லுதல் ஆகிய நிலவுடைமை சார்ந்த அடிமை முறைகள் இன்னும் பெருமையாகப் பேசப்பட்டு வருவது கருத்தியல்களின் ஆதிக்கத்தைக் காட்டுகிறது. கணவன் சாப்பிட்டு விட்ட மிச்சத்தை எச்சில் இலையில் மனைவி உண்பதும் சிறப்பாகத் திரைப்படங்களில் காட்டப்படு கின்றன. கருத்தியலின் ஆதிக்கத்தினாலேயே பெண்கள் அவ்வாறு எச்சில் இலையில் உண்பதைக் குறைவாகக் கருது வதில்லை.

சாவித்திரி, நளாயினி, கண்ணகி, சீதை போன்ற இதி காசக் கதைப் பெண்களே சிறந்த பெண்ணுக்கு உதாரண மாக மதப்பிரச்சாரகர்கள் கோவில்களிலும் கூட்டங்களிலும் போதிப்பது மட்டுமல்ல, பள்ளிப் பாட நூல்கள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. இவை தவிர கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், கணவனே கண்கண்ட தெய்வம் போன்ற பல பழமொழிகளும் சொற்களும் கருத்தியலாக ஆதிக்கம் பெற்றுள்ளன. இவை தனியாக வேறு பகுதியில் எழுதப்பட்டுள்ளன.

குங்குமம், கூந்தல், மலர்கள், நகைகள், சேலை, பாவாடை போன்ற உடைகள் சிறப்பாகப் பெண்களுக்கே உரியன என்ற கருத்துகளும் சமூகத்தில் ஆதிக்கம் பெற் றுள்ளன.

தாலியைத் தன் வாழ்வின் சின்னமாகக் கருதுதல், கணவனுக்கும் குழந்தைகளுக்குமாகவே தான் வாழ்வது என எண்ணுதல், எப்பிரச்சினை பற்றியும் ஆண்களாலேயே சரியான தீர்மானம் எடுக்க முடியும் என எண்ணுதல், கண வனுடைய நீண்ட ஆயுளுக்காக விரதம் இருத்தல், விதவை யின் கட்டுப்பாடுகளைத் தானே ஏற்றுக் கொள்ளல், தன் உழைப்பின் மதிப்பை அறியாதிருத்தல் போன்ற பல சமூக

www.padippakam.com



நடைமுறைகள் கருத்தியலாக நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றன. முதலாளித்துவச் சமூகத்திலும் இக்கருத்தியல்களில் பல ஆதிக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக மதம் அங்குத் தூக்கி எறியப் படாததால் பெண்ணடிமை சார்ந்த மதக் கருத்துகள் கருத்தியல்களாக அவர்களது சிந்தனையைச் சிறைப் பிடித்துள்ளன. 'குடும்பம்' என்ற அமைப்பை மதமும் அரசும் வலியுறுத்திப் பெண்ணினத்தைச் சிறைப்படுத்தியும் உள்ளன.

யேசுநாதரைச் சிலுவையில் அறைந்துவிட்டுத் தேவகுமாரன் என வணங்குவதுபோலப் பெண்ணையும் சிலுவையில் அறைந்துகொண்டே 'பெண்ணின் பெருமை' பற்றிப் பண்டிதர்களும் சினிமாப்படம் எடுப்பவர் உட்பட இன்று கலை, இலக்கியம் படைப்போரும் போற்றிப் பாராட்டுவதே இன்றைய முரண்பாடுகளில் மிகவும் விசித்திரமானது. அடுத்துத் தமது அடிமை நிலையை உணராத பெண்கள், சிலுவையைக் கழுத்தில் சுமக்கும் கிறிஸ்தவர்கள் போலத் தம் அடிமைச் சின்னமாகத் தாலியைச் சுமந்து திரிவது மேலும் வியப்பான முரண்பாடாகும். வியர்வை படிந்த அழுக்கான மஞ்சள் கயிற்றில் தாலியைச் சுமக்கும் பெண்களைப் பார்க்கும் வேளை மேலும் தந்தை பெரியார் போன்ற பலர் நாட்டில் தோன்ற வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

# 10. பாலுணர்வும் பெண்களும்

பாலுணர்வு இயல்பானது; இன்பம் தருவது; எதிர்பாலாரோடு ஏற்படும் உறவின் மூலம் மறு உற்பத்தி ஏற்படுகிறது. சமுதாயம் நிலைப்பதற்கும் வளர்வதற்கும் மறு உற்பத்தி அத்தியாவசியம்.

படிப்பகம்

www.padippakam.com



இவை உண்மையாயினும் வர்க்கச் சமுதாயம் தோன்றி ஆண் ஆதிக்கம் கொண்ட சொத்துடைமைச் சமூகம் ஏற்பட்டதும் பாலுறவில் பல்வேறு கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. இக்கட்டுப்பாடுகள் யாவும் பெண்களுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

மதங்கள் தோன்றிப் பாலுறவில் கிட்டும் இன்பம் சிற்றின்பம் எனவும் பேரின்பமாகிய கடவுளை அடையத் தடை செய்வது என்றும் கூறின; பெண்களே சிற்றின்பத்திற்குக் கண்ணால் மயக்கி, முலையால் வெருட்டி, ஆண்களை இழுப்பவர்களென்றும் ஒருபுறம் கூறின. மறுபுறம் குழந்தைகளைப் பெறுவதற்கு மட்டுமே பாலுறவு என்றும் கூறி அனுமதி வழங்கியது. அளவிற்கு மீறிய பாலுறவு பாவம் எனவும் வரையறுத்தது.

இந்தியக் கருத்தியல் ஆக்கத்தில்முதன்மையாக இன்றும் நிலவும் மகாத்மா காந்தியின் அறிவுரைகளும் இவற்றையே வலியுறுத்துகின்றன.

மதம், சட்டங்கள், குடும்பம், கணவனது கட்டுப்பாடுகள், அனைத்தும் பெண்ணுடைய பாலுணர்வின்பத்தை மட்டுமே கட்டுப்படுத்தின. கற்பொழுக்கம் என்பது உடலால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் பிறரைத் தீண்டப்படாது என மனித இயல்பை மறுத்தும் வலியுறுத்தியது. ஆணுடைய இன்ப தேவைகளைப் பூர்த்தி செய்வதும் அவனது பரம்பரையைக் காப்பாற்ற பிள்ளைகளைப் பெறுவதும் மற்றைய குடும்ப வேலைப் பளுவுடன் பெண்ணின் தலையில் சுமத்தப்பட்டது.

வசதியான குடும்பங்களில் மனைவி தன்னை அலங்கரித்துக் கணவனைக் கவரத்தக்க உடையணிந்து படுக்கையறையிலும் மகிழ்விக்க வேண்டும்; இவற்றைக் கவனிக்காததினாலேயே கணவன் வெளியே வேறு பெண்களை நாடிச் செல்கிறான்; இவ்வாறு கூறிக் குடும்பத்தைச் சார்ந்தவரும் ஆண்மக்களின் தவறுக்குப் பெண்மேல் பழி சுமத்துவதைக் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



பணிவிடை செய்வதில் மனைவியாகவும் படுக்கையறையில் விபச்சாரிபோல் இன்பம் தருபவளாகவும் பிள்ளைகளை வளர்ப்பதில் தாயாகவும் நோயுற்றபோதும் முதுமையிலும் தாதியாகவும் வாழ்பவளே பெண் என வரை விலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. ஆண் உழைப்பவன் அவனுக்கு மட்டுமே வாழ்வு என்பதே ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பின் விதியாகிறது.

இவை நிலவுடைமைச் சமூக நடைமுறைகளாகும். இன்றும் இக்கருத்துகள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

புராதனக் கணக்குழுச் சமூகத்தில் பாலுறவு பற்றிய கட்டுப்பாடுகள் இருக்கவில்லை என்பதையும் அடிமைச் சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் பலமாக இருந்தன என்பதையும் மற்றொரு பகுதியில் (அத் : 7) கூறியுள்ளேன்.

நிலப்பிரபுத்துவத்தில் பாலுறவின்பம் பல கட்டுப்பாடுகளிடையே குடும்ப வாழ்க்கையின் சிறு அம்சமாகவே விளங்கியது. பாலுறவினால் ஏற்படும் சமூக உறவுகளே பலம் பெற்றிருந்தன.

முதலாளித்துவம் தோன்றி வளர்ந்து பாலுணர்வு, பால் கவர்ச்சியை மிகவும் பரவலாக்கியது. முதலாளித்துவத்தின் தனிப்பண்பு எவற்றையும் விற்பனைப் பண்டமாக்குவதாகும். பாலுணர்வு, பால் கவர்ச்சியை முதலாளித்துவம் விற்பனைப் பண்டமாக்கியது. பண்ட விற்பனைக்கு விளம்பரமாக்கியது. வாங்கும் சக்தியும் பொருளாதாரமும் ஆண்களின் ஆதிக்கத்தில் இருப்பதைக் கண்ட முதலாளித்துவம் பெண்களின் பாற்கவர்ச்சியைப் பண்ட விற்பனையோடு இணைத்துக் கொண்டது. பெண்ணினம் விளம்பரங்களில் எவ்வாறு இழிவுபடுத்தப்படுகிறது என்பதை மற்றொரு பகுதியில் (அத்: 12) காணலாம்.

முதலாளித்துவம் கிராமத்தில் வாழ்பவர்களைக் கூலி அடிமைகளாக நகரங்களுக்கு ஈர்க்கிறது. பெற்றார், சகோதரியர், குடும்பத்தவர் சூழ்ந்த உணர்வுப் பூர்வக்



படிப்பகம்

www.padippakam.com



கிராம வாழ்வுக்கு அந்நியமாகி நகரத்துக்கு வருபவர்கள் ஆங்காங்கே பிற கூலி அடிமைகளுடன் அறைகளில்அடைந்து வாழ்ந்து உழைக்க நேரிடுகிறது.

இவர்களுக்கு முதலாளித்துவம் யந்திர உற்பத்திப் பண்டங்களை விற்கிறது. மேலும் இவர்களது பாலுறவுத் தேவைகளைத் தணிக்க இவை சார்நத கதைகள், நாவல்கள் ஆகியவற்றைக் கவர்ச்சிப் பெண்களின் படங்களுடன் வெளியிடுகிறது. மேலும் திரைப்படங்களில் காதல், ஆபாசநடனம் கொண்ட காட்சிகளையும் புகுத்தி, இருளான திரையரங்கில் கனவுலகம் ஒன்றைச் சிருட்டித்து நேரத்தை விற்பனை செய்கிறது.

பாலுணர்வின்பத்தை முதலாளித்துவம் பல்வேறு வகைகளில் பெரிது படுத்துவதோடு பாலுணர்வுக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துகிறது. முதலாளித்துவ நாடுகளில் இந்நிலை இன்று நன்கு காணப்படுகிறது. கருத்தடைச் சாதனங்கள், கர்ப்பச்சிதைவு உரிமை ஆகியவையும் இன்று பெண்களுக்கு ஓரளவு வாய்ப்பளிக்கின்றன. சமூக நோய்களிலிருந்து தப்புவதற்கும் மருந்துகள் தாராளமாகக் கிடைக்கின்றன.

நிலப் பிரபுத்துவத்தில் மதத்தோடு ஒன்றி நிலவிய பாலுணர்வுக் கட்டுப்பாடுகளை முதலாளித்துவம் பரவலாக்கி விட்டது. பண்ட விற்பனை விளம்பரங்கள், திரைப்படம், ஆபாச நடனங்கள், பாஷன் உடைகள், அழகு ராணிப் போட்டிகள், பிரேசியர், நீச்சலுடைகள், பல்வேறு அழகு சாதனப்பொருட்கள், நவீன ஓட்டல்கள், 'நைட் கிளப்'பில் பொழுதுபோக்குகள், மசாஜ் கிளினிக்குகள், கருத்தடைப் பொருட்களின் பரவலான விளம்பரங்கள், திரைப்படப் போஸ்டர்கள், காமரசப் பாடல் கசெட்டுகள், வீடியோவில் பாலுறவு முறைகளையும் பிறழ்வுகளையும் காட்டும் படங்கள் முதலிய பல்வேறு முறைகளால் மலினப்படுத்தப் பட்டுப் பாலுணர்வு முதலாளித்துவத்தால் பரவலாக்கப் பட்டுள்ளது. நகரங்களில் எங்கே திரும்பினும் முதலாளித்

www.padippakam.com



துவத்தின் பரவலான பிரச்சார ஆதிக்கத்தைக் காணலாம். ஆண்கள், பெண்களின் கவர்ச்சியான உடைகள் மூலமும் முதலாளித்துவத்தின் தாக்கத்தை நகரங்களில் காணலாம்; வீட்டிலே உடுக்கும் உடைக்கும் வெளியே செல்லும்போது காட்டும் போலிக்கும் இடையில் எத்தனை வேறுபாடு. குட்டி முதலாளித்துவப் பெண்களே பெரும் பாலும் முதலாளித்துவ நுகர்பண்டப் பிரச்சாரத்தால் கவரப்படு கின்றனர். பெண்களைக் கவர்ச்சியாக்கும்படி முதலாளித் துவம் நிர்ப்பந்திக்கிறது. பாலுணர்வை மலினப்படுத்தி இலாபம் தேடும் வழிகளிலும் முதலாளித்துவம் வெற்றி பெறுகிறது.

இந்தியக் கிராமங்களில் இத்தாக்கம் இன்னும் வேகமாக நுழையவில்லை. அங்கு நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் நிலவு வதே முக்கிய காரணமாகும்.

திரைப்படம் பாலுணர்வில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றி ஒரு அமெரிக்கர் பின்வருமாறு கூறினார்;

''சினிமாவில் கணவன் தன் மனைவியைத் திரும்பு மிடமெல்லாம் முத்தமிடுகிறான். வீட்டுக்கு வந்து என் நடைமுறையை எண்ணியபோது என்னிடம் பாலுணர்வும் ஆண்தன்மையும் மிகவும் குறைந்திருப்பது போல உணர்ந்தேன்.''

சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவத்தில் உள்ளது போன்ற பாலியல் பிரச்சாரத்தைக் காணமுடியாது; பாலியல் அங்கு விற்பனைப் பண்டமாக்கப்படாது. பாலின்பத் திற்குத் தரவேண்டிய உரிய பங்கும் மதிப்பும் அங்குச் சமுதாய உணர்வுடன் பேணப்படும். பெண் விபச்சாரியாக, அடிமையாக அங்கு வாழ நேரிடாது.

படிப்பகம்

www.padippakam.com

# 11. அரசியலில் ஏமாற்று

பெண்கள் அரசியலில் முழுமையாக ஈடுபட முடியாத படியாக இன்றைய சமூக அமைப்பு அமைந்துள்ளது; வீட்டுக்குள்ளேயே அவர்களது முழு நேரமும் குடும்பத்திற்கான உழைப்போடு வாழ நேரிடுகிறது. ஆண்களின் ஆதிக்கம் பெண்கள் வெளியேறிச் சமூக உற்பத்தியில், அரசியலில் முழுமையாக ஆண்கள்போலப் பங்குபற்ற முடியாது தடை செய்கிறது.

பூர்ஷ்வா ஜனநாயகத்தில் பெண்களுக்கும் அனைத்திலும் சம வாய்ப்பு, வாக்குரிமை உள்ளதாகக் கூறிக் கொள்கின்றனர். மேல் நாடுகளிலும் பெண்களுக்கு வாக்குரிமை இந்த நூற்றாண்டிலேயே ஆண் ஆதிக்க அரசியலில் வழங்கப் பட்டது.

சென்ற நூற்றாண்டிலிருந்தே பெண்கள் தம் விடுதலைக்காகப் போராடி வந்துள்ளனர். அமெரிக்கா, பிரான்சு நாடுகளில் 1920 வரையிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இன்றும் பெண்களுக்கு வாக்குரிமையில்லாத ஏராளமான நாடுகள் ஆசிய, ஆபிரிக்க மத்திய கிழக்கு. தென் அமெரிக்கக் கண்டங்களில் உள்ளன.

பெண்களுக்குச் சம அந்தஸ்து அரசியலில் வழங்குவதாயின் அரசியலமைப்பில் அவர்கட்குச் சரிபாதிப் பிரதிநிதித்துவம் ஏன் வழங்க முடியாது? எந்தப் பூர்ஷ்வா ஜனநாயகத்திலோ, முன்னேறியதாகக் கூறும் முதலாளித்துவ அமைப்பிலேயோ குடித்தொகையில் பாதியினராக விளங்கும் பெண்களுக்கு அரைப் பங்காக ஆட்சியில் இன்றுவரை பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை; இனி மேலும் வழங்கப் போவதில்லை.

www.padippakam.com



ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதிக்கும் ஒரு பெண்ணும் ஓர் ஆணுமாகத் தேர்ந்தெடுப்பதாக அரசியலமைப்பில் ஏன் ஆக்கப்படவில்லை? அல்லது குடித்தொகை விகிதாசாரப் படிக் குறிப்பிட்ட தொகுதியில் பெண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் எனத் தொகுதிகளை ஏன் ஒதுக்க முடியாது? அமைச்சரவையிலும் பாதிப்பேர் பெண்களாக இருத்தல் வேண்டும். சோசலிச நாடுகள் எனக் கூறப்படும் நாடுகளிலும் இத்தகைய சம வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. முதலாளித்துவத்திலும் பார்க்க அதிக பங்கு பெற்றுள்ளனர் என்றே கூற முடியும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வாக்குரிமை உள்ளது எனச் சமன்படுத்துவது முதலாளிக்கும் தொழிலாளிக்கும், சொத்துள்ளவனுக்கும் பாட்டாளிக்கும், எசமானுக்கும் அடிமைக்கும் சமனான வாக்குரிமை உண்டு என சமன் படுத்துவதை ஒக்கும். முதலாளிகளுடன் தேர்தலில் போட்டி யிட்டுத் தம் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்தில் நிரப்பலாம் என்று பாட்டாளிகளுக்குக் கூறப்படுவதை நடைமுறையில் பார்க்கிறோம்.

பண வசதி, அந்தஸ்து உள்ளவர்கள் மட்டுமே நடைமுறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாட்டாளிகளும் இவர்களுக்கே வாக்களிக்க நேரிடுகிறது. அதே போலவே ஆண்களே தேர்தலில் முன்நிற்கின்றனர்; பெண்களும் அவர்களுக்கே தம் வாக்கை அளிக்கநேரிடுகிறது. இத்தகைய பொய்மையும் ஏமாற்றும் பூர்ஷ்வா அரசியல்மைப்பு இயல்பாகவே தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுவது போலப் பெண் சமூகத்தையும் ஏமாற்றி வருகிறது.

ஆட்சியில் பாதிப் பங்கைப் பெறமுடிந்தால் சட்டவாக்கத்திலும் உரிய பங்கைப் பெண்கள் பெறுவார்கள். அதே போல நிர்வாகம், நீதித் துறையிலும் தம் பங்கைப் பெறுவார்கள். இராணுவம், பொலிஸ், நீதி மன்றம் முதலிய

www.padippakam.com



துறைகள் அனைத்திலும் பெண்கள் தம் பங்கிற்கேற்ப ஆதிக்கம் பெறுவார்கள். சமூக உற்பத்தியிலும் சமபங்கு பெறுவர். இது கிட்டாததினாலேயே அடிமை நிலை ஏற்பட்டது.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாரதி முதலாளித்துவ நாடுகளில் ஒரு சிறு பகுதிப் பெண்கள் அத்துறைகளில் பங்கேற்பதைப் பார்த்தே பாடினான். நடைமுறையில் அந்நாடுகளிலே பெண்களில் பத்துச் சதவிகிதத்திற்குக் குறைந்தவரே இத்துறைகளில் ஈடுபட்டிருந்ததை, இன்றும் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம்.

பாராளுமன்றம், அமைச்சரவை, நிர்வாகம், நீதித் துறை முதலியவற்றில் ஒரு சிலருக்கு மட்டும் வாய்ப்பளித்து விட்டு அவர்களை உதாரணமாகக் காட்டிப் பெண்களை ஆண் ஆதிக்கவாதிகள் விவேகமாக ஏமாற்றி வருகிறார்கள். வாய்ப்புப் பெற்ற சிறுபான்மையினரும் மற்றைய ஒடுக்கப் பட்ட பெண்களின் சமத்துவத்திற்குப் போராடுவதை விட்டுப் பெண்ணினத்தின் கருங்காலிகளாகி ஆண்களின் ஆதிக்கத்தில் நீதி வழங்கப்படுவதாக் ஒத்தூதிக் கொண்டிருப்பதே பெண் சமூகத்தின் பரிதாப நிலையாகும்.

சுரண்டலான சமூக அமைப்பிலும் அதன் அடிமைத் தனமான பொருளாதாரத்தின் மேம்பட்ட அமைப்பாகவே அரசியல் உள்ளது. இத்தகைய சமுதாய அமைப்பு நிலைக்கக் குடும்ப அமைப்பும், பெண் அடிமைத்தனமும் நிலை நிறுத்தப் பட வேண்டும் என்பதை மற்றோரிடத்திலும் கூறியுள்ளேன். ஆகவே இத்தகைய சமூக அமைப்பு உடைத்தெறியப்படாமல் பெண்களுக்கு முதலாளித்துவ அரசால் என்றும் விடிவு கிட்டாது.

ஆணும் பெண்ணும் சமம் எனப் பேசும் முதலாளித் துவம் எத்தனையோ இடங்களில் பெண்களைப் பிரித்து

படிப்பகம்

www.padippakam.com



வைத்திருப்பதைக் காணலாம். ஆண், பெண்களுக்கு வெவ்வேறு கல்வி நிலையங்கள், இருக்கைகள், கழிவறைகள், தெருக்கூட்டல், தாதி வேலைகள், விமானப் பணிப்பெண் வேலைகள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். தொழில்களிலும் மிக மட்டமானவற்றைப் பெண்களுக்காக ஒதுக்கி விட்டு உயர்தர வேலைகளை ஆண்களுக்காக ஒதுக்கி வைத்துள்ளது.

புரட்சிகர அரசியலுணர்வே பெண்களுக்கும் விடுதலை தரவல்லது; அவர்கள் கற்க வேண்டியது சமையற்கலையல்ல; புரட்சிகர அரசியற்கல்வி.

புராதன தாய்வழிச் சமூகத்தில், பெண்கள் ஆதிக்கம் பெற்றிருந்த காலக்கட்டத்தில் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டக்கூடிய அரசு ஒன்றை அவர்களால் அமைக்க முடியவில்லை; தேவையும் ஏற்படவில்லை.

தாய்வழிச் சமூகத்தில் உயிரின உற்பத்தியே முதன்மை பெற்றிருந்ததால் அச்சமூகத்தில் 'தாய்மை' உயர்வு பெற்றிருந்தது; அச்சமூகத்தின் தெய்வங்களான காளி, துர்க்கை முதலிய பெண் தெய்வங்கள் தாய்வழிச் சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன என மாரியா மையில்ஸ் என்ற சமூகவியல் ஆய்வாளர் கூறுகிறார். நிலப்பிரபுத்துவமும் முதலாளித்துவமும் பெண்ணை 'மனை'க்கு உரியவளாக 'மனைவி' (Housewife) எனக் கூறி அவளின் தீரம், படைப்பாற்றல், சமூக உற்பத்தி, மனித இன உற்பத்திச் சிறப்பம்சங்களை மழுங்கடிந்தன.

வேட்டைக்காரனாக அம்பு, வில்லையும் பின்னர்ப் பித்தளை, இரும்பு உலோகத்தாலான அடக்குமுறை ஆயுதங்களையும் பயன்படுத்தி வர்க்கச் சமுதாயத்தில் அரசையும் ஆண்கள் ஆக்கிக் கொண்டனர். இன்றுவரை ஆணாதிக்க அரசை உடைத்தெறிய முடியவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தாலும் புரட்சிகர அரசியலாலுமே இது சாத்தியமாகும். அதன் பின்னரே பெண்ணினத்தின் அரசியல் விடுதலையும் ஆரம்பமாகும்.

www.padippakam.com

# 12. விளம்பரத்தில் பெண் கவர்ச்சி

பத்திரிகை விளம்பரங்கள், சினிமாவில் பெண்களை அரைநிர்வாணம், ஆபாசமாகக் காட்டுவதைப் பார்த்ததும் 'வேசைகள் இப்படி போஸ் கொடுத்து நடிக்கிறார்களே' எனச் சில பெண்களே திட்டித் தீர்ப்பதைக் கேட்கலாம்.

ஒரு சிலரிடம் இக்காட்சிகள் ஏற்படுத்திய வெறுப்புணர் வினால் எழுந்த வார்த்தைகளே இவை. ஆழ்ந்து நோக்கின் அவர்கள் மேல் குறை சொல்ல முடியாது. இன்றைய சமூக அமைப்பிலுள்ள குறையே இதுவாகும்.

முதலாவதாக, முதலாளிகள், தங்கள் பண்டங்களை விற்பதற்காகப் பெண்களின் பால் கவர்ச்சியைப் பயன் படுத்துகிறார்கள். இதற்குச் சமூகம் இடமளிக்கிறது. மற்றது ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இவற்றால் கவரப்பட்டுக் குறிப்பிட்ட பண்டத்தின்மேல் கவனமெடுக் கிறார்கள். அப்பண்டத்தின் பெயர் நினைவிலி மனத்தில் பதிந்து விடுகிறது. மளிகைக் கடைக்கோ, கடைத்தெரு விற்கோ செல்லும் வேளை, குறிப்பிட்ட பண்டம் வாங்க நேரும் வேளை, விளம்பரத்தில் கண்டு அவர்களை அறி யாதே நினைவிலி மனத்தில் பதிந்திருந்த அவ்வாணிபச் சின்னப் (Trade mark) பண்டத்தைக் கேட்டு வாங்கிவிடு கின்றனர். உளவியல் ரீதியாக விளம்பரங்கள் எத்தனை விதமாக வெற்றி பெறுகின்றன என்பதைப் பார்க்கலாம்.

பவுடர், கிறீம், செண்ட் முதலான வாசனைப் பொருட்கள், சேலைகள், துணிகள், உணவுவகைகள், வீட்டுச் சமையற் பொருட்கள், தளபாடங்கள் ஆகியவற்றை விளம்பரப்படுத்த பெண்களையே பயன்படுத்துகிறார்கள், இவை தவிர சமையல் செய்தல், துணி துவைத்தல், தைத்தல்

www.padippakam.com



வீட்டைச் சுத்தம் செய்தல், குழந்தை பராமரிப்பு, நோயாளரைக் கவனித்தல் ஆகிய விளம்பரங்களிலும் பெண்களையே பயன்படுத்துகின்றனர். கவர்ச்சிக்காக என்று எண்ணிவிட வேண்டாம்; குடும்பத்திற்கே உரிய பெண்ணாகவும், தன்னை அழகுபடுத்துபவளாகவும், குழந்தைகளையும் நோயாளரையும் கவனிப்பவளாகவும் கருதிப் பெண் அடிமைத்தனத்தை இவ்விளம்பரங்கள் மூலம் நிலை நாட்டுகிறார்கள்.

பெண்களை வாணிப நிலைய நிர்வாகிகளாக, விஞ்ஞானிகளாக, வக்கீல்களாக, டாக்டர்களாக, போராளிகளாக விளம்பரங்களில் காட்டுவது மிகமிக அரிதாகும். அழகுப் பொம்மைகளாகவே பெரும்பாலும் காட்ட முனைகிறார்கள்.

விளம்பரத்திற்கும் பெண்களுக்கும் தொடர்பே இல்லாத விதமான ஏராளமான விளம்பரங்கள் வெளி வருவதைக் காணலாம். பால் கவர்ச்சியாகப் பெண் படத்தைப் போட்டு விட்டு மின்விளக்கு, டயர், கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், எலெக்ட்ரிக் பொருட்கள் போன்ற சம்பந்தமில்லாத பொருட்களை விளம்பரம் செய்கின்றனர்.

குறிப்பிட்ட பண்டம் விற்பனையாகிறதோ இல்லையோ பெண்களின் உருவங்களை வெளியிட்டு விளம்பரப்படுத்துவதென்பது நடைமுறையாகி விட்டது.

புத்தகங்கள், சஞ்சிகைகளிலெல்லாம் அட்டையில் கவர்ச்சியான பெண்ணின் படமே தொடர்ந்து வெளியிடப் படுகிறது; சஞ்சிகை விற்கும் நிலையங்களில் இக்கவர்ச்சிப் பெண் படங்கள் தொங்குவதைக் காணலாம்.

இத்தகைய நிலை நமது நாடுகளில் மட்டுமல்ல. முதலாளித்துவ நாடுகளிலெல்லாம் நடைபெறுகிறது. பாலுணர்வுக் கவர்ச்சி, அழகுணர்ச்சி ஆகியவற்றையே

www.padippakam.com



விற்பனையாக்கக் கூடிய திறமை முதலாளித்துவத்திற்கே உரியது.

ஆண் தலைமெடுத்த சமுதாயத்தில் ஆண்களைக் கவர்ந்து விற்பனை செய்வதற்காகவே இவ்விளம்பரங்கள் என்றும் கூறிவிட முடியாது. தம் கருத்தை இக்கூற்றுக்கு எதிர்ப்பாக வெளியே கூறிக்கொள்ளும் பெண்களும் முதலில் இவ்விளம்பரங்களால் கவரப்படுகின்றனர். இந்நிலை உள வியல் சார்ந்த மனிதரின் குறைபாடுகளில் ஒன்று. மறைக்கும் உடற்பகுதிகளை ஒட்டுப்பார்க்கும் சுபாவம். இதைப்பற்றி ஆண்பார்வை என்ற பகுதியில் விரிவாகக் கூறியுள்ளேன். (அத்: 10).

மனித உளக் குறைபாடுகளை விளம்பர ஏஜென்சிகள் ஆராய்ந்து நன்கு பயன்படுத்துகின்றனர். விளம்பரங்களின் வியாபார தந்திரம் இன்று தலித்துவமாக வளர்க்கப்படு கிறது.

ஒரே பெண் விளம்பரத்தைத் திரும்பத் திரும்பக் காட்டி சுலோகமாகப் பண்டம் பற்றிக் கூறி நினைவிலி மனத்தில் அப்பண்டத்தைத் திணித்து விடுகின்றனர். அது இரு வகை யில் விற்பனையாளருக்குப் பயன்படுகிறது. ஒன்று அப் பண்டத்தைப் பயன்படுத்துபவர் விளம்பரத்தைப் பார்த்துத் தம் பண்டத் தேர்வு சரியெனத் திருப்தியடைகின்றனர். மற்றது, மீண்டும் அதையே வாங்க நினைவிலி மனம் தூண்டிக்கொண்டே இருக்கும். கவர்ச்சிப் பெண் படம் இதற்கு நன்கு பயன்படுகிறது.

பாலினக் கவர்ச்சியாகப் பெண்ணினத்தை விளம்பரங் களில் காட்டி இழிவு படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியு தாகும். சிலர் நிலவுடைமைக் காலத்துக் கோவிற் சிற்பங் கள், ஓவியங்களைக் காட்டி மதங்களே இவற்றை ஆதரித்தன என நியாயப்படுத்த முனைகின்றனர். அன்று நிர்வாண நிலையில் பெண்களின் உருவச் சிலைகள் வடிக்கப்பட்டன

படிப்பகம்

www.padippakam.com



லாம். அன்று நிலவிய பெண் அடிமைத்தனத்தைக்கொண்டு வந்து இன்றும் நிலை நாட்டப்பார்க்கின்றனர்.

பெண்கள் அழகாயிருக்கலாம். நிர்வாண கோலத்தில் தான் அழகாயிருப்பர் என்று கூறுபவர்களைப் பேடிகள் என அழைப்பதா, ஆண் இன வெறியர் என்று கூறுவதா என்று தெரியவில்லை. மனித இனத்தின் குறைபாட்டைப் பயன்படுத்திப் பண்டங்களை விற்கப் பெண்ணின் உடலும் அடிமை நிலையுமா பயன்படுத்தப்பட வேண்டும்?

இத்தகைய ஆபாச விளம்பரத்திற்கெதிராகப் பெண் களின் விடுதலை இயக்கங்கள் குரலெழுப்ப வேண்டும். இத் தகைய விளம்பரங்கள் வரும் இதழ்களுக்குக் கண்டனம் தெரி விக்க வேண்டும். இவற்றைத் தடை செய்யும் சட்டங்களை இயற்றச் செய்ய வேண்டும். நீதி மன்றங்களில் சஞ்சிகை ஆசிரியர்களுக்கெதிராக வழக்குகள் தொடுக்க வேண்டும். பெண்கள் இவ்விதழ்களை வாங்குவதை நிறுத்தவேண்டும்.

ஆபாசமாக, கவர்ச்சியாகப் போஸ் தர 'மாடல்' களாகப் பணியாற்றுவோரும் எதிர்ப்பு தெரிவிக்கலாம் ஆயினும் ஆதிக்கம் பெற்ற ஆண் வர்க்கம் அதிகப்பணம் கொடுத்து அடிமை நிலையிலுள்ள வேறு பெண்களை வாங்கிவிட முடியும். பெண்களுடைய உழைப்பே மிக மலிவாக முதலாளி களுக்குக் கிடைக்கிறது. ஏனெனில் அவர்கள் அடிமைகளாக நடத்தப்படும் அமைப்பே இன்று நிலவுகிறது.

சினிமாவுக்குள்ள தணிக்கைச் சபை போல விளம்பரங் களுக்கும் ஒரு சபை ஏற்படுத்தும்படியும் ரசை வற்புறுத்த லாம். இச்சபையில் பெண்களுக்குப் பெரும்பான்மையான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். இன்றைய சினிமா தணிக்கைச் சபைகளினால். சினிமாக்களில் பெண்களை ஆபாசமாக, கவர்ச்சியாகக் காட்டப்படுவதைத் தடுக்க முடியாதுள்ளது. ஏனெனில் அங்கும் ஆண்களின் ஆதிக்கமே

படிப்பகம்

www.padippakam.com



நிலவுகிறது. எங்கே திரும்பினும் பெண்ணை அடிமைப் படுத்தும் ஆண்களே உள்ளனர். ஏனெனில் அரசியல் ஆதிக்கமும் ஆண்களிடமே உள்ளது.

# 13. பெண் 'சாதி'

இன்றைய சமூகத்தில் ஓரளவு நிலையான சமூக அமைப்பு ஆண் பெண் என்ற பாலியல் வடிவ மூலம் எவ்வாறு நிறுவப்பட்டுள்ளது? வன்முறை மூலமாயின் அது அடக்கு முறையான அமைப்பு; இத்தகைய சமூக அமைப்பு நிச்சயம் மாற்றப்பட வேண்டியதாகும்.

பெண்கள் கணவனது அந்தஸ்தையும் பண ஆதிக் கத்தையும் உயர்த்துவதற்கே உழைக்க நேரிடுகிறது; அது வீட்டிலாயினும் சரி, வெளியேயாயினும் சரி ஒன்றேயாகும். வர்க்க முறையாக இல்லாது பாலியலால் ஆதிக்கம் செலுத்து வது தனிப்பட்டவர் ஆதிக்கமாகிறது. குடும்பத்தில் கணவன்– மனைவி என்ற தனிப்பட்ட உறவு முறையால் பெண்ணின் உழைப்பு அபகரிக்கப்படுகிறது; தொழிலாளியின் உழைப்பு சமூக உற்பத்தி மூலம் அபகரிக்கப்படுகிறது.

ஆணின் பொருளாதார ஆதிக்க மூலமாகவுமே பெண் ணின் கீழ்ப்படிந்த நிலை ஏற்பட்டது. வேலைப் பிரிவினை யால் ஆண்களும் பெண்களும் தனித்தனிக் குழுவான சமூக நிலை பெற்றுள்ளனர். வீட்டில், கோவில்களில், சடங்கு முறைகளில், கூட்டங்களில் பெண்கள் தனியாகவும், ஆண்கள் வேறாகவும் இருப்பதைக் காணலாம். இது ஒன்றே 'பெண்' என்ற கூட்டு உணர்வை ஏற்படுத்துகிறது. ஒன்றிணைந்த போராட்டத்திற்கு வழி ஏற்படக்கூடிய ஒரே வாய்ப்பும் இதுவே.

படிப்பகம்

www.padippakam.com



தாய்மாரே பெண் குழந்தைகளையும் வளர்த்தெடுக்க நேரிடுகிறது. அடுத்த பரம்பரைக்கும் தம்மைப்போல நடப்பதற்கும் தாய்மார் பழக்கிக் கொள்வதும் பரிதாபகரமான நிலையாகும். பெண் குழந்தைகளுக்குத் தம்முடைய வேலைகள், அடக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றைச் சிறுவயதிலிருந்தே வீடுகளில் கற்பிக்கின்றனர்.

'நான் மனைவியைக் காப்பாற்றுகிறேன்' என்ற கருத்தியலைக் கூறி அவளிடமிருந்து பறித்தெடுக்கும் உழைப்புக்குக் கணவன் சமாதானம் கூறுகிறான்.

பெண்கள் வெளியே செல்லும் வேளை கணவனுடனோ, பெற்றார், நெருங்கிய உறவினருடனோதான் செல்ல வேண்டும். சினிமா, திருவிழா, கடைத் தெருவுக்குஇவ்வாறே செல்லுவதைக் காணலாம். தனியாகச் சென்றால் ஆண்களின் பலாத்காரம் நடைபெறலாம், கேலி பேசலாம் என்பவையே முக்கிய காரணம். தனியே வேலைக்குச் சென்று உழைக்கும் பெண்களும் வீட்டுக்குத் தாமதமாக வரும்போது கணவனால் அல்லது குடும்பத்தவரால் விசாரணை செய்யப்படுகின்றனர். பெண் தக்க விளக்கம் கூற வேண்டியவளாகிறாள்.

கணவன் மனைவி சம நிலையிலில்லை என்பதை மனைவி கணவனை அழைக்கும் முறையிலிருந்தே காணலாம். மனைவி பெயர் சொல்லிக் கணவனை அழைப்பதில்லை. மகனிடம் 'உன் அப்பாவிடம் சொல்லு' 'வீட்டுக்காரர்', 'ஏனுங்க', 'ஆத்துக்காரர்' என இவ்வாறு மறைமுகமாகப் பல வகைகளில் கணவனை முன்னிலையிலும் படர்க்கையிலும் மனைவி அழைப்பதைக் காணலாம். கணவன் பெயரை மனைவி கூறக்கூடாது என்ற நிலப்பிரபுத்துவக் கருத்து இன்றும் நிலவுகிறது.

சமூக நடை முறைகளை மீறும் வேளை கணவன் வன்முறை ஆயுதத்தை மனைவிமேல் பிரயோகிக்கிறான்.

www.padippakam.com



மனிதர்கள் சட்டங்களை மீறும் வேளை பொலிஸ்காரன் காட்டும் அரசின் வன்முறையே இதுவும். வன்முறை தக்க புலனளிக்கிறது. 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை' என்ற பழமொழியும் பெண்ணுக்கு, மாட்டுக்கு வைக்கப்படும் இரும்புக் கம்பிச் சூட்டை நினைவூட்டுவதாகும். கணவனிடம் ஒரு தடவையாயினும் வாழ்க்கையில் அடிவாங்காத மனைவியைக் காண்பது அரிது என்பதை முன்னரும் கூறினேன். பெரும்பாலும் திருமண ஆரம்ப காலத்திலேயே அடிப்பதன் மூலம் ஆண் தன் ஆதிக்கத்தையும் அடக்கு முறையையும் நிலைநாட்டி விடுகிறான். மேல் மட்டக் குடும்பங்களில் பொருளாதார ஆதிக்கத்தை வைத்தும் ஆண் ஆதிக்கம் நிலைநாட்டப் படுகிறது.

மது வெறியில் வீட்டுக்கு வந்து காரணமின்றியும் மனைவியை அடிப்பதே ஏழைக் குடும்பங்களில் அன்றாட வழக்கமாகும். இது தவிர உரிய நேரத்திற்கு உணவு சமைக்காதிருத்தல், தக்க காரணமின்றி நேரங்கழித்து வீடு திரும்புதல், மரியாதைக் கீழ்ப்படிவு காட்டத் தவறல், கணவனின் குடும்பத்தைப் பற்றிக் குறைவாகக் கூறல் ஆகியவையே பெரும்பாலும் வன்முறைக்கு முதல் காரணமாகின்றன. வன்முறையின்போது பெண்கள் காயமடைதல், கருச்சிதைவு ஏற்படல் குடும்பத்தில் நடைபெறும்போது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. குடும்பத்தைத் துறக்கத் தீர்மானித்தால்தான் மனைவி பொலிஸ் நிலையம் சென்று சட்டத்தின் தயவை நாடமுடியும் பெற்றார் வீட்டில் பெண் சிலநாள் தஞ்சம் புகலாம்; 'இது புதுமையல்ல, வழக்கம், உரிமை' எனக்கூறிக் கணவனிடம் பெற்றார் தம் பெண்ணை அனுப்பி விடுவர். ஆண் மகன்மேல் எவ்வித குற்றமும் காண மாட்டார்.

இன்றைய சமூக அமைப்பில் பெண்களை அடிமைபடுத்துவதற்கு முதன்மையாகப் பயன்படுவது குடும்பம்

படிப்பகம்

www.padippakam.com



என்ற அமைப்பே. இது முரணான இரு துறைகளில் பெண் களைக் கட்டி வைத்துள்ளது.

ஒன்று, அவள் உழைப்பைச் சுரண்டுவதும் அடக்கி ஒடுக்குவதும். மற்றது, பெண்ணுக்கு ஆதரவும் பாது காப்பும். பெண்ணுக்கு வேறு வழியில்லை. குடும்பத்தால் எத்தனை மோசமாக ஒதுக்கப்பட்டபோதும் இன்று சிறிதள வாவது பாதுகாப்பளிப்பதும் குடும்ப அமைப்பே. குடும்பத்தை விட்டு வெளியே செல்வதும் பெருந்துன்பமே. அதை அறிந்தே குடும்பத் துன்பத்தையே தன் வாழ்வாகவும் பெண் ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது. இதுவே இன்றைய நிலப் பிரபுத்துவக் குடும்பத்தின் பெருங் கொடுமையாகும்.

குடும்பத்திலுள்ள கணவன் மனைவி உறவே தங்கள் ஆண், பெண் குழந்தைகளுக்கும் சிறு வயதிலிருந்து கற்பிக் கப்படுகிறது. ஆண் மகன் விரைவிலேயே தாயிடமிருந்தும் சகோதரியிடமிருந்தும் ஆணுக்குரிய சேவைகளை அதிகாரத் தோடு பெற்றுக் கொள்கிறான். நேரத்திற்கு உணவில்லாத போது தாயை வைது, தங்கையை அடிக்கிறான். தாயை மகன் அடிப்பதும் புதுமையல்ல. தாய்—எதிர் காலத்தில் மகனின் ஆதரவில் வாழும் நிலை ஏற்படும் என உணரும் தாய், மகனையும் கணவன் நிலையில் வைத்துச் சேவை செய்கிறாள். மகனிடம் அன்பும் பாசமும் காட்டி அவனை உயர்த்தி ஆண் ஆதிக்க உணர்வையும் ஏற்படுத்தி விடு கிறாள். இதனால் மனைவி வந்ததும் அவளைப் பெண் ணடிமை யாக்குவதற்குத் தாயே வழி காட்டி விடுகிறாள். இவையும் முரண்பாடான விந்தைகளே.

பொருளாதாரச் சுதந்திரம் பெற்று மனைவி உழைக்கும் போதும் கணவனே ஆதிக்கம் செலுத்துகிறான். கணவன் உழைக்காது மனைவி மட்டும் உழைக்கும்போதும் இது நடைபெறுகிறது. பெண் அடிமை என்ற கருத்தியல் மேலாதிக்கம் பெற்று நிற்பதையே இது காட்டுகிறது. பணம் உள்ளவனும் சாதி என்ற கருத்தியலால் ஒதுக்கப்

படிப்பகம்

www.padippakam.com



படுவதையும் இன்று காண்கிறோம். 'பெண்சாதி' என்று மனைவி கூறப்படுவது ஆண் சாதியிலும் குறைந்த சாதி என்பதனாலேயே இருக்க வேண்டும்!

# 14. குடும்பச் சண்டைகள்

சண்டையில்லாத குடும்பங்களை எங்கும் காண முடியாது. கணவன் என்ற ஆணாதிக்க நபரின் வன்முறைக்கு ஆட்படாத மனைவியைக் காண்பதும் அரிது. என்றோ ஒரு நாளாவது கணவனிடம் அடிவாங்காத பெண்கள் அதிர்ஷ்டசாலிகள்; இன்றைய சமூக அமைப்பிற்கு விதிவிலக்கானவர்கள்; விதிவிலக்கு விதியாகாது. இந்தியப் பெண்கள் இயக்கம் ஒன்று 300 பெண்களைப் பேட்டி கண்டபோது அனைவரும் கணவனிடம் அடிபட்டதாக ஒப்புக்கொண்டனர். நீதிபதிகள், வக்கீல்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள்கூட மனைவியை அடிப்பதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

குடும்பத்தின் அடக்கு முறையை அல்லது கணவனின் ஒடுக்கு முறையை மனைவி எதிர்க்கிறாள்; எதிர்க்காவிட்டால் அவள் மனிதப் பிறவியல்ல. நாய் கோழியைத் துரத்தும் வேளைகூட ஒரு கட்டத்தில் கோழி நாயை எதிர்ப்பதைக் காண்கிறோம்.

உதைக்க உதைக்கக் காலை நக்குவது நாய் ஒன்றேதான். உழைக்காது காலை நக்கி, வாலை ஆட்டி எசமானை ஏமாற்றி வாழும் மிருகம் நாய் மட்டுமே.

பெண் நாயல்ல, அவள் நாள் பூராவும் உழைக்கிறாள்; கூலி இன்றி உழைக்கிறாள்; அத்தோடு கணவனின் காலையும் பிடித்தா அவள் வாழவேண்டும்?

www.padippakam.com



வேலைச்சுமை, குழந்தைகள் தொல்லை குடும்ப ஆதிக்கம் ஆகியவற்றைத் தாங்க முடியாதபோது தன் எதிர்ப்பைப் பல வழிகளில் பெண் காட்டுகிறாள்.

வார்த்தைகளால் கணவனை, குடும்பத்தை எதிர்க்கிறாள். அவ்வேளை தண்டனை கிடைத்தபோதும் அவள் அடங்கி விடுவதில்லை. அழுகை மூலம் தன் துன்பத்தை ஆற்றிவிட முயல்கிறாள். சில வேளைகளில் உண்வுண்ணாது, வீட்டு வேலைகளையே செய்யாது சத்தியாக்கிரகம் செய்கிறாள். ஆயினும், பிள்ளைகள் மேலுள்ள உணர்வு, சமூகத்தின் பார்வை, அன்றாட வழக்கங்கள் அவளது சத்தியாக்கிரகத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிடுகின்றன. பெண்ணின் இக்குறைபாடுகளை நன்கு அறிந்த கணவன் எப்பொழுதும் வெற்றி பெறுகிறான். அவளது போராட்டங்கள் என்றும் முழுமையாக வெற்றி பெறுவதில்லை.

அடங்காப்பிடாரி, வாய்க்காரி, சண்டைக்காரி, பிடிவாதக்காரி என்றெல்லாம் ஆண் பெண்களுக்குப் பட்டம் சூட்டி மேலும் அடக்கி ஒடுக்க முயல்வதைக் காணலாம். எத்தகைய இடர்ப்பாடான சூழ்நிலையில் பெண்கள் எதிர்க்கின்றனர்; வாய்சண்டை போடுகின்றனர்; பிடிவாதம் பிடிக்கின்றனர்; இவற்றை எவரும் எண்ணிப் பாரப்பதில்லை. தன்மேல் வீசப்படும் அடக்கு முறையையும் வேலைப் பளுவையும் மறைமுகமாக எதிர்க்கும் குரல்களே பெண்களின் போரர்ட்டம் என்பதை எசமானர்களான ஆண்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. அடக்கி ஒடுக்குவதற்கும் சண்டை போடுவதற்கும் வாயால் அடக்குவதற்கும் தமக்கு மட்டுமே சமூக அனுமதி உண்டு என ஆண்கள் எண்ணிக் கொள்ளுகின்றனர். பெண்களை எல்லா வேளையும் வன்முறையாலும் வாயாலும் அடக்கி ஒடுக்குகின்றனர்.

விதிவிலக்காகச் சமூகம் பற்றி அஞ்சாத சில பெண்களின் குரலுக்கு ஆண்கள் அடங்கிப் போவதும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com



இது பெண்ணினத்தின் வெற்றி என்றே கூறவேண்டும். பொருளாதாரப் பலமுள்ள ஆண் இந்நிலையிலிருந்து, குடும்பத்திலிருந்து எவ்வேளையும் விடுபட முடியும். ஆயினும் சமூகத்தின் கட்டுப்பாடுகள் அவனைக் கட்டி வைக்கின்றன. வெளியே தன் நிலையைக் காட்டுவது அவமானம் எனக் கருதி அவன் அடங்கிவிடுகிறான்.

'பெண் அடங்க வேண்டியவள், பெண்ணுக்கு ஆண் அடங்கி நடப்பது அவமானம்' என்பது ஆண் அதிகாரச் சமூகத்தின் முடிவு. அதனாலேயே பெண்ணின் குரல் மேலெழுந்தும் சமூக அமைப்பை மீறிவிட்டதான குரல் எழும்புகிறது. பெண் தலை தூக்குவதை அடிமை நிலையிலுள்ள பிற பெண்களே கண்டிப்பதையும் காணலாம்.

மனைவியைக் கொடுமைப்படுத்தல், திட்டுதல், அடித்தல் மயிரறுத்தல், காயப்படுத்துதல், எரித்தல், கொலை செய்வது போன்ற சம்பவங்களை நாம் பத்திரிகைச் செய்திகளில் அடிக்கடி காண்கிறோம். நிசமாக நாள்தோறும் நடைபெறுவதில் ஒரு பகுதி மட்டுமே அம்பலமாக வருகிறது. பெரும்பபலானவை இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் மனைவி கணவனைக் கொடுமைப்படுத்துதல், அடித்தல் விதிவிலக்காக நடைபெறுவது உண்மையே. அது மட்டுமல்ல, மனைவி மற்றொரு காதலனோடு சேர்ந்து கணவனது கொலைக்கு உடந்தையாக இருக்கும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. பாலுறவிலும் பிற உரிமைகளிலும் நடைபெறும் அடக்கு முறைக்கு எதிராக, சமூக அமைப்புக்கு எதிராகத் தொடுக்கப்படும் போராட்டமாகவே இவற்றைக் கொள்ளல் வேண்டும்.

விதிவிலக்காக நடைபெறும் இத்தகைய சம்பவங்களை ஆண்களின் கலை, இலக்கியங்களில் பெரிதுபடுத்திப் பெண்களை ஆணவக்காரியாக, அடங்காப்பிடாரியாகச் சித்தரித்து மேலும் அவர்களை அடக்கி, ஒடுக்க முயல்வதையும் காணலாம். இத்தகைய பெண்கள், மாதிரிப் பாத்திரங்

www.padippakam.com



களல்ல, விதிவிலக்கானவர். இவ்வாறானவற்றை மாதிரிப் பாத்திரங்களாக்கிக் காட்டுவதே முதலாளித்துவக் கலை, இலக்கியத்தின் பண்பாகும். ஆண் கலைஞர்களது ஆதிக்கத்திலுள்ள கலை, இலக்கியங்களிலிருந்தும் பெண்கள் விடுதலை பெறவேண்டும். பெண்கள் வாய்ப்புக்கிட்டும் வேளையெல்லாம் புதுமைப் பெண்ணைப் படைத்துக் காட்டவேண்டும்.

நடுத்தர வகுப்புப் பெண்களிடையே சமூகத்தை எதிர்க்கும் துணிச்சல் குறைவு. பாட்டாளிப் பெண்கள் துணிச்சலோடு கணவனின் கொடுமையை எதிர்க்கின்றனர். இவ்வர்க்கத்தவர் வீட்டுச் சண்டையில் அயல் வீட்டுப் பாட்டாளிகள் தலையிட்டு நீதி பேசுவதைக் காணலாம். நடுத்தர வர்க்கத்தவரிடையே இத்தலையீடு குறைவு. ''நான் என் அடிமையைப் பார்த்துக்கொள்வேன். நீ உன் அடிமையைப் பார்த்துக்கொள். என் வீட்டில் தலையிடாதே. நானும் உன் வீட்டில் தலையிடமாட்டேன்'' என்று மறைமுகமாக அவ்வர்க்கத்தவர் கூறிக் கொள்கின்றனர்.

வீட்டில் அடிமைகளை வைத்துக் கவனிப்பது அடிமைக்கு மட்டுமல்ல, எசமானுக்கும் வீண் தொல்லை என்ற யதார்த்த உண்மையை ஆண்கள் உணர்வதில்லை. இவ்வுண்மையை உணர்ந்து பெண்ணுக்கு அனைத்திலும் சம உரிமை வழங்கி, வேலைப் பளுவைக் குறைக்கும் வரை குடும்பச் சண்டைகள் ஓயப்போவதில்லை. ஆயினும் இது வர்க்கப் பேதமற்ற, சுரண்டலற்ற சமுதாயமொன்றிலேயே சாத்தியமாகும். பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே இத்தகைய சமூக அமைப்பை ஏற்படுத்த முடியும். பாட்டாளியின் விடுதலையும் பெண் விடுதலையுடன் இணைந்தது. அதனாலேயே லெனின் கூறினார்:

''பெண்களுக்கு முழுச்சுதந்திரம் வாங்கிக் கொடுக்கும் வரை பாட்டாளி வர்க்கம் முழு விடுதலை அடைய முடியாது.''

படிப்பகம்

www.padippakam.com

# 15. தகாத பாலுறவும் பிராய்டும்

தகாத பாலுறவு முறை என ஒதுக்கப்பட்ட சில முறைகள் தோன்றியதற்குச் சிக்மன் பிராய்டு கூறிய நிரூபணமில்லாத கருத்தும் (Hypothesis) மேல்மட்ட அமைப்புச் சார்ந்தது. வெறும் புனைவுக் கதை; ஆண் ஆதிக்கம் ஏற்பட்ட நிலைக் கற்பனை; இன்று கருத்தியலாகி விட்டது.

கட்டுப்பாடற்ற பாலுறவுக்காலத்தில், தாயோடு பாலுறவு கொள்வதில் மகனுக்கும் தந்தைக்குமிடையில் போட்டி ஏற்படு கிறது; மகனுக்குப் பிறப்பிலிருந்து இயல்பாக, உளவியல் சார்ந்து தாய்மேல் எழும் பாலியல் உணர்வு தாயை உடைமையாகக் கொண்ட தந்தைமேல் பொறாமையை ஏற் படுத்துகிறது. இப்பொறாமைப் போட்டியால் பகைமையும் சண்டையும் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கவே தகாத பாலுறவு முறை என்ற வழக்கம் நடைமுறைப் படுத்தப் பட்டது. இதுவே பிராய்டின் கருத்தின் சுருக்கமாகும்.

தனிச் சொத்தும் அதன் அடிப்படையான குடும்ப முறையும் ஏற்பட்ட பின்னரே தாய், தந்தை, மகன் என்ற முக்கோண முரண்பாட்டு உறவுநிலை பிராய்டு கூறுவது போன்று ஏற்பட முடியும். தனிச்சொத்தும் குடும்பமும் வர்க்கச் சமுதாயத்திலேயே ஏற்பட்டதாகும்.

இடிபஸ் காம்பிளெக்ஸ் (Oedipus Complex) என்று கூறப்படும் உள்ளுறு மனநிலை என்பதற்கும், இதிகாசக் கதையையே பிராய்டு உதாரணமாக எடுத்துள்ளார். அக்கதை நடைமுறைச் சம்பவத்தைக் கூறுவதாக எடுத்துக் கொண்டபோதும் அரசு தோன்றிய வர்க்கச் சமுதாயக் கால

www.padippakam.com



கட்டத்தையே கூறி நிற்கிறது. அடுத்ததாக ஆண் ஆதிக்கம் மிக்க சமுதாயம்.

தந்தையைக் கொன்று தாயை மணக்கும் இடிபஸ் மன்னன் நான்கு பிள்ளைகளைப் பெற்ற பின்னரேயே தன் மனைவி, தன் தாய் என அறிந்து வேதனைப்படுகிறான். ஆகவே பல ஆண்டுகளாகத் தாயுடன் வாழ்ந்து, பாலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்றபோதும் தாயார் என்பதை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. இது எதை உறுதிப் படுத்துவதென்றால் பாலுறவுக்கு ஆண் பெண் என்ற வேறுபாடு தவிர வேறுவித இரத்த உறவோ, வயதோ அவசியமில்லை என்பதையாகும்.

ஆகவே, இடிபஸ் கதையை எடுத்துக் கொண்டபோதும் தகாத பாலுறவு என்பது கருத்தியலாக நினைவிலி மனத்தில் திணிக்கப்பட்ட ஒன்றேயாகும். இக் கருத்தியல் மேல்மட்ட அமைப்பாகத் தானே இயல்பாகத் தோன்றியது என்று கூறிவிட முடியாது. அப்படிக் கூறின் அது மார்க்சிய விஞ்ஞான முறைக் கோட்பாட்டிற்கு முரணானது. குடும்பம், தனிச் சொத்துச் சார்ந்த வர்க்கச் சமுதாயத்தின் நலனை ஒட்டியே தோன்றியது என்றே கூறவேண்டும்.

ஆண் வழியாகக் கூட்டுக் குடும்பச் சொத்துப் பிரிவதில்லை. பிரிய நேரினும் குலக்குடிசார்ந்ததாகவேஇருக்கும்; உடன் பிறந்த பெண் வழியாக, சீதனமாகச் செல்லக்கூடிய சொத்தை மீண்டும் அதே குடும்பத்தில் சேர்ப்பதற்காகவே அக்கா மகள், அத்தை மகள் ஆகிய முறைப் பெண் திருமணங்கள் வலியுறுத்தப்படுகின்றன. இது முன்கூறிய தற்காப்புத் திருமண முறையே. அண்ணன் தம்பி பிள்ளைகளிடையே திருமணம் அவசியமில்லை. சொத்துக்கள் குடும்பத்திடையேயே இருக்கும். குடும்பத்துக்குள்ளேயே பாலுறவு ஏற்படுவதும் சொத்துகளைப் பெருக்க மாட்டாது. பிற குடும்பச் சொத்துகளுடன் இணைந்து பலம் பெறத் தகுதியான பிற குடும்பங்களுடன் திருமண உறவு ஏற்பட

www.padippakam.com



வேண்டும். ஆகவே சிறிது சிறிதாகக் குடும்பத்துள் பாலுறவு, அண்ணன் தம்பி பிள்ளைகளிடையே ஏற்படக் கூடிய பாலுறவு தகாத உறவாகத் தவிர்க்கப்பட்டது. இவ்வழமை பின்னர்ச் சட்டமாகியது.

இன்றைய விஞ்ஞான நோக்கில் இரத்த உறவுகளைக் கடந்து கலப்புத் திருமணங்கள் செய்வதே மனித இன வளர்ச்சிக்குரியது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தாய்வழிச் சமுதாயம் கணக் குழுவாக மனித இனம் வாழ்ந்த காலம் வரை முழுமையாக நிலவியது. கூட்டாக உணவு தேடி, கூட்டாக உண்டு, குழுவாகவே பாலுறவில் ஈடுபட்டு வாழ்ந்த காலம் அது. குழுப் பெண்கள் அனைவரும் ஆண்கள் அனைவருக்கும் தம் விருப்பையொட்டிப் பாலுறவில் பங்களித்தனர். தகாத பாலுறவு என எவ்விதத் தடையும் இருக்கவில்லை. தாயின் குழந்தைகள் என்பதால் பெண் உயர்வு நிலை பெற்றிருந்தாள். எந்த ஆணும் தன் குழந்தை, தன் மனைவி என அன்று அடிமைப்படுத்த முடியவில்லை. பாலுறவினால் பொறாமை என்பது அன்று இருக்கவில்லை.

மாடு, எருமை, ஆடுபோன்ற மிருகங்களை வளர்த்து பயிர்த் தொழிலில் ஈடுபட்டு மனித இனம் நிலையாகக் குடியேறிய காலத்திலே சமூக வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. செம்பு உலோகக் கருவிகள் உற்பத்தி வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்தன. அடுத்து இரும்பு உலோகக் கண்டு பிடிப்பு, ஆழ உழக்கூடிய கலப்பை, வளையாது வெட்டக்கூடிய கோடரி, கத்திபோன்ற கருவிகள் உபரி உற்பத்தியைப் பெருக்கின. வேலைப் பிரிவினை வளர்ந்தது; புதிய உற்பத்தி உறவுகள் ஏற்பட்டன. வர்க்கச் சமுதாயம் நிலைத்தது. தனிச் சொத்துரிமையுடன் குடும்பங்கள் அமைந்தன. ஆண்கள் சொத்துக்களுக்குப் பரம்பரையாக உரிமை பெற்றனர்.

தனிச் சொத்தைப் பரம்பரையாக எடுத்துச் செல்வதற்காகப் பெண்ணின் பாலுறவு கட்டுப்படுத்தப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



ஆண் தலையெடுத்த சமூக அமைப்பு நிலைபெற்றது. ஆண் மட்டும் கட்டுப்பாடற்ற பாலுறவு கொள்ள, பல தார மணம் செய்யக்கூடிய வாய்ப்புப் பெற்றான். அவனது ஆட்சி நிலைத்தது. பெண் அவசியப் பொருள் உற்பத்தியிலிருந்து ஒதுக்கப்பட்டு வீட்டு வேலைகளுக்கும் குழந்தை பெற்று வளர்ப்பதற்கும் அடிமைப்பட்டாள்.

தாய்வழிச் சமுதாயம் சிறிது சிறிதாகத் தேயத் தொடங்கியது. அண்மைக் காலம் வரை நிலைபெற்றிருந்த தாய்வழிச் சமூக அமைப்புகளையும் சிறிது சிறிதாக ஆண்கள் கைப்பற்றி விட்டனர். இன்றைய முதலாளித்துவம் ஆண்களின் ஆட்சியே. பெண்களை அடிமையாக வைப்பதனாலேயே பெரிய சுரண்டலை நடத்த முடிகிறது. கணவனுக்குத் தரும் குறைந்த கூலியை, மனைவி அடிமையாக வீட்டில் உழைத்துச் சரிக்கட்டிக் கொள்கிறாள். முதலாளிகளுக்கு இது மானியமாகிறது. இதற்காகக் குடும்ப அமைப்பையும் முதலாளித்துவம் வேண்டுகிறது. சமூக அந்தஸ்து, வரிச் சலுகைகள் குடும்பங்களுக்கே கிடைக்கின்றன. மதம், சொத்துடைமை, நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்ச கருத்தியல்களும் குடும்ப அமைப்பை வலியுறுத்துகின்றன.

குடும்பம் என்ற சிறையில் நுழைந்ததும் ஆண் தன்னுடைய ஆதிக்கத்தைக் காட்டத் தொடங்கி விடுகிறான். அவனே குடும்பத் தலைவன். எங்கும் அவன் பெயரே எழுதப்படுகிறது. பெண்ணும் அதையே தொடர்கிறாள்.

புராதனக் கணக்குழுச் சமூக அமைப்பில் சுதந்திரமாகப் பெண்ணின் ஆதிக்கத்திலிருந்த பாலுறவு, தனிச் சொத்துடைமைச் சமூக அமைப்பில் ஆண் சமூகத்தின் ஆதிக்கத்தில் வந்தது. பெண்ணின் பாலுறவு கடுமையான கட்டுப்பாட்டுள் கொண்டுவரப்பட்டது. நிலப்பிரபுத்துவத்தில் ஏற்பட்ட சமூக உறவுகளில் பாலுறவு முதன்மை பெற்றுச் சமூக உறவுகளைக் கட்டுப்படுத்துவதாக ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



பின்னர் முதலாளித்துவம் கூட்டுக் குடும்பங்களை உடைத்துத் தனி மனிதர்களைச் சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தியது. அதோடு தனி மனிதர் பொருளாதார பலம் பெற்றதும் பாலுறவுக் கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்ந்தன. ஆயினும் முதலாளித்துவம் குடும்ப உறவை வலியுறுத்தவே செய்தது.

எனினும் நிலப்பிரபுத்துவக் காலத்துத் தகாத பாலுறவுகள் இங்கும் சட்டமாகின. மதத்தின் ஆதிக்கமும் இதற்கு ஒரு காரணம். மேலும், விஞ்ஞான நோக்கில் இரத்த உறவற்ற திருமண முறையே சிறந்தது என்பதும் வலியுறுத்தப்பட்டது. முதலாளித்துவம் விஞ்ஞானத்தை ஏற்கும் சமூக அமைப்பு என்பது யாவரும் அறிந்ததே.

இன்றைய பாலுறவுக் கட்டுப்பாடுகள் பெண்ணினத்தையே மிகவும் பாதிக்கின்றன. இவையே மிக மோசமான அடிமைத்தனத்திற்கு அடிப்படை. பிராய்டின் கருத்தின்படி எட்டு மாதத்திலிருந்து நாலு வயது வரை தன்னிச்சை கொள்ளும் குழந்தைகள் பின்னர் மொழியைக் கிரகித்ததும் சமூகக் கட்டுப்பாட்டை உணர்ந்து பாலுணர்வை தவறாகக் கருதிக் கொள்கின்றனர். வயது வந்த பின்னரே உடல் வளர்ச்சியால் மன எழுச்சியும் உந்தப்படுகிறது. ஆயினும் பெண், பல வழிகளில் பாலுணர்ச்சியில் அடக்கி ஒடுக்கப்படுகிறாள். திருமணத்தின் பின்னரும் பெண்ணின் உணர்வுகள் கணவனால் சிதறடிக்கப்படுகின்றன. கணவன் வெளியூர், வெளிநாடு செல்லும் காலங்களிலும் அவளது எழுச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்நிலைகளினால் பெண்கள் பெரும்பாலும் மன நோயாளராவதையும் காண்கிறோம்.

தாதிகள், பணிப்பெண் போன்ற சில வேலைகளில் ஈடுபடும் பெண்கள் திருமணம் செய்வதும் மறுக்கப்படுகின்றன. திருமணமானதும் பொருளாதார நிலையை இழக்க நேரிடுகிறது. மேலும் தாமே உழைத்துக் குடும்பத்தைப் பேணும் பெண்களும் திருமணம் செய்ய முடியா

www.padippakam.com



நிலை அடைகின்றனர், இத்தகையவர் பாலியலில் சுதந்திர நிலை எடுப்பின் திருமணமான பெண்களிலும் பார்க்கச் சுதந்திரமாக வாழ முடியும்.

# 16. ஆண்கள் உற்றுப் பார்த்தல்

பெண்களைக் காணுமிடமெல்லாம் ஆண்களின் உற்றுப் பார்த்தலை (Male-Gaze) சாதாரணமாகக் காணலாம். கசாப்புக் கடைக்காரன் தான் வாங்கப்போகும் ஆட்டையோ, மாட்டையோ பார்ப்பது போன்ற பார்வை; இத்தகைய மேய்ச்சற்பார்வை ஆணின் ஆதிக்கத்தையும் அவர்கட்குப் பெண் மேலுள்ள அவாவையும் காட்டுகிறது; ஆண் தன் பாலுணர்வுத் தாபத்தைத் தீர்க்கும் ஒரு பொருளாகவே பெண்ணைப் பார்க்கிறான்.

பெண்களைத் தனிமையில் ஆண்கள் ஏறிட்டுப் பார்ப்பது ஒரு புறம்; மறுபுறத்தில் சந்து முனைகளில் நின்று தெரு வழி செல்லும் பெண்களைப் பார்த்துத் துச்சமான கதைகளைத் தம்மிடை பேசுவது மட்டுமல்ல பெண்களின் செவியில் விழத் தக்கதாக அவர்களைப் பற்றிக் குறிப்புரை கூறுபவர்களையும் காணலாம்.

சினிமா போஸ்டர், பண்ட விற்பனை விளம்பரங்கள், மாடல்கள், சஞ்சிகை, நாவல் அட்டைகள் முதலிய அனைத்திலும் ஆண்களின் மேய்ச்சல் பார்வையைத் தூண்டும் விதமாகப் பெண்கள் அரை, முழு நிர்வாணமாகக் கவர்ச்சியான போஸ்களில் காட்டுவதை இன்று திரும்புமிடங்களிலெல்லாம் காணலாம்.

திரைப்படத்தில் தோன்றும் பெண்களை உற்றுப் பார்ப்பதன் மூலம் ஆணின் பாலுணர்வின்பம் இலகுவாகத்

படிப்பகம்

www.padippakam.com



தூண்டப்படுகிறது. இருண்ட மண்டபத்தில் பார்வையாளன் தனிமைப்படுத்தப்படுகிறான். முதலாவதாக, 'காமரா'வின் சிறு துவாரத்தால் எடுக்கப்பட்ட படம்; அடுத்து, ஒளிவரும் 'புரொயெக்டர்' அசையும் உருவங்களைத் திரையில் எறிகிறது. இவை ஓவியம் அல்லது விளம்பரங்களில் காண்பது போன்ற நிலையான உருவங்களல்ல; இவை அசையும் உருவங்கள்; பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றன. நாடகத்தில் காண்பதிலும் பார்க்க இவ்வுருவங்கள் பார்வையாளனுடன் நெருக்கமாக ஒன்றுகின்றன. மற்றைய கலைகளிலும் பார்க்கத் திரைப்படத்தில் ஏற்படும் அனுபவம் கனவு நிலைக்குப் பார்வையாளரை ஈர்க்கிறது.

இம்மனோநிலையில் கவர்ச்சியாகக் காட்டப்படும் பெண்களை உற்றுப் பார்க்கும் ஆண்கள் பாலுணர்வின்பம் பெறுகின்றனர்.

இருட்டறையில், தனிமைப்பட்ட நிலையில் ஒட்டுப் பார்க்கும் மனித இயல்புக்கேற்ற முறையில் திரைப்படம் அமைகிறது. ஆண்களால் 'காமரா' துவாரத்தால் பார்க்கப் பட்ட பகுதிகளே திரையில் வருகிறது. டைரக்டர்களும் ஆண்களே. பாலுணர்வை விற்பனைப் பண்டமாக்கும் தந்திரங்களை அவர்கள் அறிவர். ஆயினும் உளவியலார் இவர்களின் வெற்றிக்கு மனோதத்துவ முறையாகக் கூறும் காரணங்கள் பின் வருமாறு:

1. திரைப்படக் காட்சியிலே காதலன் அல்லது வில்லன் கவர்ச்சியான பெண்ணை உற்றுப் பார்க்கிறான்; இருட்டறையில் தனிமைப்படுத்தப்பட்ட ஆண் உற்றுப் பார்க்கும் பொருளாகப் பெண் உள்ளாள்.

2. பின்னர், அதே பார்வையாளன் திரையில் அதே காதலனுடன் ஒன்றி அப்பெண்ணைப் பார்க்கிறான், இவ்வேளை அவன் 'சீட்'டில் இல்லாது திரைக் கனவுலகில் ஒன்றிவிடுகிறான்.

www.padippakam.com



பின்னடைவான, பலங்குன்றிய மனோ நிலையில் பிறர் பார்க்காத தனிமை நிலையில் ஒட்டுப் பார்த்தும் பாலுணர்வில் திளைக்கிறான்.

பெண்களைக் கவர்ச்சியாகவும் அரைநிர்வாணக் கோலத்திலும் ஆடச் செய்வதைத் திரைப்படத்தில் வழக்கமாகக் காணலாம். ஆட்டத்தின் போது மார்பைக் குலுக்குதல், கீழ் உடலைப் பாலுறவைத் தூண்டும் வகையில் அசைத்தல் ஆகியவற்றைப் படமாக்குகின்றனர். காதலன் காதலியின் நெருக்கமான அசைவுகளும் போஸ்களும் கட்டித் தழுவலும் பாலுணர்வைத் தூண்டுவதாக இருப்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

திரைப்படங்கள் பெண்களை மகிழ்விக்கவில்லை எனக் கூறுவதற்கில்லை. ஆயினும் பெரும்பாலும் ஆண் டைரக்டர் 'காமராமன்' ஆகியவரது பார்வையிலேயே திரைப் படங்கள் எடுக்கப்படுகின்றன. அடிமை நிலையிலுள்ள பெண்களின் பால் கவர்ச்சி திரைப்படம் மூலம் மலினப் படுத்தப்படுகிறது. ஆண்களின் காம உணர்வைத் தூண்டு வதாகவே பெரும்பாலும் திரைப்படங்கள் ஆக்கப்படு கின்றன.

விபச்சாரத்தில் பெண்கள் ஈடுபட நேர்வது போலவே திரைப்படத்திலும் ஆணுடைய உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பெண்கள் பயன்படுத்தப்படு கின்றனர்.

ஆண்கள் பெண்களை உற்றுப் பார்ப்பதுபோலப் பெண் களும் ஆண்களை உற்று நோக்குகிறார்களா என்ற வினா எழுகிறது. ஓரளவு உரிமை பெற்ற கல்லூரிப் பெண்கள், உழைக்கும் பெண்கள் ஆண்களை உற்றுப் பார்க்கலாம். திருமணமான பெண்கள், வயதானவர்கள் அவ்வாறு பார்ப் பது மிகக் குறைவு. பெண் பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற மேல் நாடுகளிலும் இதே நிலையே உள்ளது.

www.padippakam.com



பெண்கள் பெரும்பாலும் தம்மை அலங்கரித்துச் செல்வதிலேயே திருப்தியடைகின்றனர். ஆண்கள் உற்று நோக்குவதால் அவர்கள் அத்தனை குழப்பமடைவதில்லை என்பதே உளவியலாரின் கருத்து.

வாணிப முறையில் நகரங்களில் இயங்கும் 'பியூட்டி பலர்' (Beauty parlour) என்ற அழகு நிலையங்கள் யாவும் பெண்களுக்காகவே நடத்தப்படுகின்றன. சிறு வயதிலிருந்தே உயர்தர, நடுத்தர வகுப்புப் பெண்களுக்கு அழகுபடுத்துவது பற்றிய நினைவு ஊட்டப்படுகிறது. ஆண்மையடையும்வரை இளைஞர்கள் தம் அழகு, உடை பற்றிப் பெண்களோடு ஒப்பிடும்போது கவனம் எடுப்பதில்லைஎன்றே கூறவேண்டும். பெண் பூப்படைவது சடங்கு முறைகள் மூலம் அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது. ''ஒரு பெண் திருமணத்திற்குத் தயார்' என்ற அறிவிப்பே இது. அதன் பின்னர்த் தன்னை அழகு செய்வதில் பெண் மேலும் கவனமெடுக்கிறாள்.

அழகு படுத்துவதன் மூலம் ஆண்களைக் கவர்ந்து கணவனைத் தேட முடியும் என்ற நினைவு பெண்களின் சிந்தனையில் குடும்பத்தவராலும் சமூகத்தாலும் ஏற்படுத்தப்படுகிறது. நீண்ட கூந்தல், பொலிவான மார்பகம் கவர்ச்சி தருவது என்பதை இளம் பெண்கள் அனைவரும் அறிவர். இவ்வாய்ப்புக் குறைந்த பெண்கள், இவற்றைக் கூறிக் கவலையடைவதையும் போலி முடி, பம்மாத்து மார்புக் கச்சை மூலம் இவற்றைச் சிறப்பாக்க முயல்வதையும் காணலாம்.

பெண்கள் கவர்ச்சிக்காகப் பயன்படுத்தும் அழகு சாதனப் பட்டியலைப் பார்க்கும் போதும் அவர்கள் தம்மை அழகுப்படுத்த எடுக்கும் நேரத்தைக் கவனிக்கும் போதும் பெண்கள் தம்மை அழகுபடுத்துவதில் திருப்தியடைவதோடு ஆண்கள் தம்மை உற்றுப் பார்ப்பதன் மூலம் அனைவரும் கலவரமடைவதில்லை என்பதையும் ஊகிக்க முடிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



மேல் நாடுகளில் பெண்களுடைய அழகை, புதிய உடையை ஆண்கள், பலர் முன்னிலையிலும் பாராட்டுவது மரபு பெண்களும் 'தாங் யு' என ஆண்களின் பாராட்டை ஏற்றுக்கொள்கின்றனர். புதிய உடையில் வரும் பெண்ணை சகத் தொழிலாளர் பாராட்டத் தவறின் அவமதிப்புச் செய்வ தாகப் பெண்கள் கொள்கின்றனர். நமது நாட்டுப் பெண் களும் பாராட்டுதலை உள்ளூற விரும்பவே செய்கின்றனர். வெளியே காட்ட விரும்புவதில்லை.

ஆண்கள் உற்றுப் பார்ப்பதன் மூலம் பெண்களைக் காம எழுச்சியூட்டும் காதலியாகவே பெரும்பாலும் கருது கிறான். இந்நிலை பெண்ணின் உயர் நிலையை வரையறுக் கிறது என்று கூறுவதில் தவறில்லை. ஏனெனில் பெண்கள் ஆண்களை அத்தனை நோக்காகப் பார்ப்பதில்லை.

இத்தகைய யதார்த்த நிலை மூலம் பெண் என்றும் ஒரு சமூகப் பிரஜை ஆக, தலை நிமிர்ந்து தனக்குரிய உயர்ந்த நிலையை என்றும் ஆக்கிக் கொள்ள முடியும் என உளவியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் கருதுகின்றனர்; பெண் விடுதலை இயக்கம் சார்ந்த அறிஞர்களும் கூறுகின்றனர்.

# 17. பாலியலும் வர்க்கமும்

இன்றைய ஏகாதிபத்திய, நவகாலனி அமைப்பு பெண் அடிமைத்தனத்தைப் பல்வேறு வழிகளில் நிலை நிறுத்தி வருகிறது. வன்முறை மூலமே அடிமைத்தனத்தை நிலை நிறுத்த முடியும் என்பதை வரலாற்றில் கண்டோம். ஆயினும் பெண் அடிமைத்தனத்தை அதிக வன்முறை இன்றியே நிலை நிறுத்த முடிவது வியப்பே.

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியம் வன்முறையானது. உலகில் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் சமமாகப் பண்டங்கள் கிடைக்க முடியாது தடுக்கிறது; மனித உரிமைகள் சமனாகக் கிடைக்க முடியாது செய்து விடுகிறது.

பெண்கள் கூலி இன்றி அல்லது குறைந்த கூலியுடன் உழைப்பதோடு எதிர்காலத்துக்குத் தேவையான உழைப் பாளர்களைப் பெற்று வளர்க்கும் பொறுப்பையும் ஏற்க வேண்டியுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் தொழிலாளர் களின் உழைப்புச் சக்தியும் சுரண்டப்படுவதில்லை எனக் கூறிவிட முடியாது. அதே போலவே அந்நாட்டுப் பெண் களின் உழைப்புச் சக்தியும் சுரண்டப்படுகிறது; முதலாளி களால் மட்டுமல்ல கணவன்மாராலும் சுரண்டப்படுகிறது. இருபுறச் சுரண்டல், மூன்றாம் உலக நாட்டுத் தொழிலாளர் அத்து மீறிச் சுரண்டப்படுவதுபோல அந்நாட்டுப் பெண் களும் அத்துமீறிச் சுரண்டப்படுகின்றனர். வர்க்கச் சுரண்ட லோடு பாலியலான சுரண்டலும் மூன்றாம் உலக நாட்டில் மிகத் தீவிரமானதே.

எத்தனைச் சுரண்டல் நடைபெற்ற போதும் மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளோடு உறவு கொண்டே உள்ளன. நெருங்கிய உலகச் சமூகத்திலிருந்து அவர்களால் ஒதுங்கிவிட முடியாது. ஏனெனில் மூன்றாம் உலக நாடுகளும் ஏகாதிபத்தியங்களுடன் இணைந்திருப்பதால் அந்நாடுகளி லிருந்து சில வாய்ப்புகளும் பெறுகின்றன. அதே போலவே பெண்ணும் திருமணம் மூலம் ஆணின் ஆதிக்கத்தில் வந்த போதும் சில வாய்ப்புகளையும் பெறுகிறாள். இவைபற்றிப் பல்வேறு இடங்களில் கூறியுள்ளேன்.

வர்க்கச் சமுதாயத்தில் மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் தொடர்புண்டு; பெண்களே முக்கிய உழைப்பாளர்கள்; மலிந்த கூலி உழைப்பாளர்; எங்கும் பெண்களுக்கு ஆண் களிலும் பார்க்க ஒரே உழைப்பிற்குக் குறைந்த கூலியே தரப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகளுக்கு வீட்டிற்கு வெளியே உழைப்பதற்கும் எந்நாளும் தயார் நிலையிலுள்ள பெரிய கூலிப்படை பெண்களே. கணவனுக்கு வீட்டில் கூலியின்றிக் கிடைக்கும் பெண்களின் உழைப்பை முதலாளிகள் கணவனூடாகப் பெற்றுவிடுகின்றனர். இச் சமனற்ற உழைப்பு, சுற்று வட்டத்திலிருந்து மத்திய மையமான ஏகாதிபத்தியங்களுக்குச் செல்கின்றது (Periphery to centre).

ஆகவே ஏகாதிபத்தியத்தின் சுற்று வட்டத்தில் உள்ள மூன்றாவது உலக நாடுகள் போல இருப்பவர் பெண்களே. மூன்றாவது உலக நாட்டுப் பெண்கள் மட்டுமல்ல, ஏகாதி பத்திய முதலாளித்துவ நாட்டுப் பெண்களும் இதனுள் அடங்குவர். சுரண்டலின் அளவில்தான் வேறுபாடு. ஏகாதி பத்திய முதலாளித்துவ நாட்டுத் தொழிலாளர் சுரண்டப் படவில்லையா? அதே போலவே அங்குள்ள பெண்களும் இருவகைச் சுரண்டலில் அகப்பட்டுக் கொள்கின்றனர். ஒன்று முதலாளித்துவம்; மற்றது குடும்பம்.

மேல் தட்டுக் குடும்பங்களில் வாழும் பெண்கள் உழைப்பில் ஈடுபடாது பலவித பொருளாதார வாய்ப்பு களைப் பெறுவதைக் காண்கிறோம். மனைவிக்குரிய சமையல், வீட்டைப் பராமரித்தல், குழந்தை வளர்த்தல், துணி துவைத்தல் முதலிய வேலைகளுக்குக் கூலி வேலை யாட்கள் இருப்பர். இப் பணக்காரப் பெண்களுக்கு நுகர் பண்டங்கள் வாங்கப் போதிய பணம், பிரயாணத்திற்குக் கார் வசதி யாவும் உள்ளன. சமூக அந்தஸ்தும் உண்டு. இவர்கள் பாலியல் சார்ந்த கருத்தியல்களைப் பரப்பு கின்றனர். பெண்கள் தம் அழகைப் பேணி, கவர்ச்சியாகத் தம்மை அலங்கரித்துப் பெண்ணினத்தின் தனித்துவச் சிறப்பு களைக் காட்டிக்கொள்ள வேண்டும் என மற்றப் பெண் களுக்கும் அறிவுரை கூறுவர். பாலியல் பொம்மையாக ஆக்கிக்கொள்ளும் இப்பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்தி லேயே தாம் வாழ்வதை உணர்ந்து கொள்வதில்லை. இவர்கள் இன்றைய ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பை

படிப்பகம்

www.padippakam.com



ஏற்றுக்கொண்டு நயம் பெறுபவர். தொழிலாளர் உபரியிலேயே தாம் நலமாக வாழ்வதை அறியார்.

மற்றொரு பகுதிப் பெண்கள் அதிகாரிகளாக, மேலாளராக, நிர்வாகிகளாக ஆண்களது சில உயர் பதவிகளை அடைந்தவர்கள்; இவர்கள் மற்றைய பெண்களுக்கு நம்பிக்கையூட்டி ஏமாற்றுபவர்களாவர். பெண்ணினம் சமூகத்தில் 50 சதவீதத்தினர், 5 சதவீத ஆண்களின் இடத்தைப் பெற்றதை உதாரணமாக வைத்து, 'நீங்களும் படித்துப் போட்டியிடுங்கள். நீங்களும் இவ்விடங்களைப் பெறலாம்' எனவும் பிரச்சாரம் செய்கின்றனர். பெண்ணின் அடக்கு முறை நிலையை மறைக்கக் கையாளப்படும் மற்றோர் தந்திரம் இது.

போட்டியில், தோற்றவரைக் குறைகூறும் பழைய கதையே இது. ஏகாதிபத்திய நாடுகள் மூன்றாவது உலக நாடுகளைப் பார்த்து, ''நாங்கள் கடுமையாக உழைத்து முன்னேறியுள்ளோம். அறியாமை, சோம்பல், வறுமையே உங்கள் பொருளாதார தேக்கத்தைக்குக் காரணம்'' என்று கூறி வருவதைப் போன்றதே இவ்வாய்ப்புப் பெற்ற சிறுபான்மைப் பெண்களின் கூற்றுமாகும்.

மேலும், ''அமெரிக்கத் தொழிலாளர் கடுமையாக உழைத்து எல்லோரும் கார் வைத்திருக்கிறார்கள், நீங்களும் கஷ்டப்பட்டு உழையுங்கள், கார் ஓட்டலாம்'' எனவும் எம் நாட்டுத் தொழிலாளருக்கு முதலாளிகள் அறிவுரை கூறுவது போன்றதே இதுவாகும். மூன்றாவது உலக நாட்டுத் தொழிலாளரின் உபரியை அபகரித்து, ஏகாதிபத்தியம் தன் தொழிலாளர்களுடன் பகிர்ந்து அவர்களது போராட்டத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறது. அத்தோடு அந்நாடுகளிலும் பெண்களின் உழைப்பு வீடுகளிலும் ஆண் தொழிலாளர்களால் அத்துமீறிச் சுரண்டப்படுவதும் அங்குள்ள தொழிலாளரின் வர்க்கப் போராட்டத்தைத் தணிக்கிறது.

www.padippakam.com



மேற்கூறிய பணக்கார ''பாஷன்'' பெண்களும், எதிர் பாராத வாய்ப்புப்பெற்ற 'உயர் பதவி'ப் பெண்களும் இன்றைய சமூக அமைப்பிலுள்ள பெண்களின் அடிமை நிலையை ஏற்கும் பெண் சமூகக் கருங்காலிகள்; சுய நலமிகளாவர். இவர்களே முழுப்பெண்களின் விடுதலைக்கும் எதிராக இன்று குரல் கொடுப்பவர்.

ஆயினும் ஆண் ஆதிக்க வர்க்கச் சமுதாயத்தைக் காப் பாற்றி வருவதில் இப் பணக்காரப் பெண்களின் பங்கு மிகச் சிறிதே. உள்நாட்டு மூலதனமும் சர்வதேச மூலதனமும் வளர் வதற்கு வேண்டிய உழைப்பைக் கூலி பெறாது வாழ்நாளை அர்ப்பணிப்பவர் பரந்து பட்ட பெண் சமூகத்தவரேயாவர். ஆண் தொழிலாளர் ஏகாதிபத்தியத்தை, முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடும் வேளை தற்காப்புத் தருபவர்களும் இப் பெரும்பான்மைப் பெண்களேயாவர்; அடிமை உழைப்பில் குடும்பங்களைக் காப்பர்.

ஏகாதிபத்திய நாட்டிலாயினும் மூன்றாவது உலக நாட்டிலாயினும் வாழும் சாதாரண உழைப்பாளி ஆண் என்ற நிலையால் இன்றைய சமூக அமைப்பில் பயனடைந்த போதும் பொருளாதாரச் சுரண்டலால் பாதிக்கப்படுகிறான். வீடு, குடும்பம், குழந்தைகள் நினைவில் மனத்தில் நிலைப் பதனால் அவன் சுரண்டலை எதிர்த்துப் போராடத் தயங்கு கிறான்; பெண்ணும் கூலிச் சந்தைக்கு வெளியே தள்ளப் பட்டுள்ளாள். கூலிச்சந்தைக்கு ஈர்க்கப்படினும் அவளுக்குக் குறைந்த கூலியே தரப்படுகிறது. பரந்த கூலிப்படைச் சந்தையில் மலிவாக உழைக்கத் தயார் நிலையில் இருப்பவர் பெண்களே.

பாலியல் கருத்துக்களைச் சமூகத்தில் ஆதிக்கம் மிக்க வர்க்கத்தவரே சஞ்சிகை, சினிமா, டி.வி., ரேடியோ மூலம் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். பாலியல் எண்ணங்களைத் தூண்டுவது முதலாளித்துவத்திற்குப் பல்வகைகளில் வாய்ப்



படிப்பகம்

www.padippakam.com



பளிக்கிறது. பெண்ணை அடிமையாக வைத்திருத்தல் வர்க்க உணர்வுகளை மழுங்கடித்தல், தன் யந்திரங்களில் தொடர்ந்து கூலியாக உழைக்கவும் மறு உற்பத்திக்கு மட்டும் பயன்படுத்து வதற்கும் முதலாளித்துவத்தின் பரந்த பாலியல் பிரச்சாரம் பயன்படுகிறது.

ஆண், பெண்களிடை வேலைப்பிரிவினை இன்று, இருப்பது போல நிலவும் வரை சிறு சீர்திருத்தங்கள், சம்பள உயர்வுகள், குடும்பத் தலைவி, தாய்மையின் பெருமை, பெண்களே உலகத்தின் கண்கள் போன்ற பாராட்டுகள் எவ் வகையாலும் பயன் தரப்போவதில்லை. இவை பெண்களின் அரசியல், பொருளாதார வாய்ப்புகளை முடமாக்குபவை யாகும்.

வர்க்கமும், பாலியலும் அடக்கி ஒடுக்குவதற்கான ஒன்றோடொன்று இறுகப் பிணைந்த இரு அமைப்புகள் என்பதைக் கண்டோம். வர்க்க அடிப்படையில் வைத்தே பெண்ணின் சமூக உறவும் வைக்கப்படவேண்டும். அதை விட்டுப் பெண்ணின் நிலையை உயர்த்துவதாக வழங்கப் படும் சலுகைகள் தற்போது வாய்ப்பாக வாழும் பெண்கள் மேலும் பயன்பெற உதவும்; அல்லது சிறு புதிய குழுவினரை ஆக்கிச் சிறிது உயர்த்தி விடலாம். பிற்பட்ட சாதியினருக்குச் சலுகைகள் தந்து அரசு உயர்த்திவிட முயல்வது போன்றதே.

பெண்ணினம் உலக அரங்கில் வெற்றிபெற வேண்டின் ஒடுக்கு முறை ஒடுக்கு முறையே என்பதை மறந்துவிடக் கூடாது; ஒடுக்கு முறையால் துன்பப்படுபவர் அனைவரும் ஒரே வர்க்கத்தவரே என்பதையும் நினைவில் கொள்ளல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# 18. சொற்களும் பழமொழிகளும்

ஆண் ஆதிக்கச் சமுதாயம் ஆண்களுக்கெனவே பல பதவிகளையும் நடைமுறைகளையும் நிலை நாட்டிக் கொண்டது. இது தவிரப் பெண்களை இழிவுபடுத்தக் கூடிய பல வார்த்தைகளையும் பழ மொழிகளையும் கூட நிலை நாட்டி வைத்துள்ளதை இன்றும் காணக் கூடியதாக உள்ளது. இப்பழமொழிகள் கருத்தியலாகி ஆதிக்கம் செலுத்து கின்றன.

மேலும். பல சொற்கள் எவ்வாறு குறியீடுகளாக ஆதிக்கம் செலுத்தக் கூடியன என்பதை மொழியியல், குறி யீட்டியல் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

'மனித இனம்' என்ற சொல் ஆண்களைக் குறித்து, உலகில் ஆண்கள் மட்டுமே வாழ்வதாகக் காட்டுகிறது. 'மனுஷியினம்' என்ற சொல் தமிழ் வழக்கிலில்லை, ஆங்கிலத்திலும் Mankind, Chairman என்ற ஆணினச் சொற் களை மட்டுமே காணலாம். கணவன் என்ற சொல்லுக்கு எதிராக 'மனைவி' என்ற வார்த்தை பெண்ணை வீட்டோடு கட்டி வைக்கிறது.

படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய பணிகளை ஆற்றும் பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய மூன்று கடவுள் களையும் ஆண்களாகவே ஆண் ஆதிக்கச் சமூகம் படைத்தது.

தமிழில் அம்மன் என்ற சொல் மட்டுமே ஆண்பால் விகுதியுடன் பெண் தெய்வத்தைக் குறிப்பிடும் வார்த்தை யாகும்.

சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்களும் ஆண்களே, கலைஞன், மைந்தன், புலவன், வைத்தியன், போதகன் போன்ற சொற்களுக்குப் பெண்பாற் பெயர் கிடையா.

படிப்பகம்

www.padippakam.com



'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்றே கூறப்படுகிறது. 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்றார் வள்ளுவர். புத்தன், யேசு, முகமது ஆண்களே.

வேசை, தேவடியாள், சரக்கு போன்ற சொற்களால் பெண்கள் பெரும்பாலும் தாக்கப்படுகின்றனர். 'என்ன இருப்பினும் கீழே கிடப்பவளே' என்றும் ஆணாதிக்கம் நிலை நாட்டப்படுகிறது.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமொழி ஆண் ஆதிக்கத்தையும் பெண்ணைக் கணவனுக்கு அடிமை ஆக்கும் அதிகாரத்தையும் கூறி நிற்கிறது.

'பெண் புத்தி பின் புத்தி' என ஆண்கள் அடிக்கடிப் பெண்கள் விடும் சிறு தவறுகளுக்குப் பழமொழி கூறி அவர்களது உன்னிப்பு, செயலாற்றல், விவேகத்தைத் தடை செய்கின்றனர். பெண்கள் தக்கத் தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் எனவும் கூறிவிடுகின்றனர். ஆண்களின் தவறுதல்களைக் குறிப்பிடும் பழமொழி கிடையாது.

''பெண் சிரிச்சால் போச்சு, புகையிலை விரிச்சால் போச்சு'' என்று பெண்கள் சிரிப்பதைக் கூட இழிவாக்கி விடுகின்றனர்.

''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்று வழமைப்படுத்திப் பெண்கள் ஆபத்தானவர்கள் என நிலை நாட்டுகின்றனர்.

''சேலை கட்டிய மாதரை நம்பாதே' எனக்கூறி பெண்ணின் ஒழுக்கத்தைச் சந்தேகிப்பர். ஆனால் தம் ஒழுக்கம் பற்றிக் கவலைப்பட்டார்.

பெரிய யுத்தங்களெல்லாம் பெண்களாலேயே ஏற்பட்டன எனப் பாரதப் போருக்குத் துரோபதையின் சிரிப்பையும் லங்காபுரி யுத்தத்திற்குச் சீதை, லக்குமணன் கீறிய கோட்டைத் தாண்டியதே காரணம் எனவும் கற்பிப்பர்.

www.padippakam.com



'தாயைச் சந்தையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்கத் தேவையில்லை.' என வீட்டை விட்டு வெளியே செல்லும் பெண்ணை இழிவுபடுத்துகின்றனர்.

பெண் விடுதலைக்காகம் பாடிய பாரதியும் பாஞ்சாலி சபதத்தில் 'பெட்டைக் கூவல் பிறர்க்குத் துணையாமோ,' எனப் பெண்ணினத்தின் கூக்குரலைப் பாடிவிட்டான்.

பல துறையெல்லாம் வாழ விடாது ஒதுக்கி விட்டுப் 'பெண்ணென்றால் பேயுமிரங்கும்' என கழிவிரக்கம் காட்டு கின்றனர். அதே வேளை பேய், பிசாசு, அடங்காப்பிடாரி எனவும் பெண்ணை வைகின்றனர்.

''உன் பெண்ணைக் கட்டிக் கொடுத்தாயா'' என திருமணமானது பற்றிப் பேச்சு வழக்கில் விசாரிப்பதே பெண்ணை இழிவு படுத்துவதாக உள்ளது. ஆடு, மாடு களையே 'கட்டி வைப்பது' பற்றிப் பேசுவர்.

'அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு?' எனப் பெண் கல்வியை மறுக்க முனைகின்றனர்.

'தையல் சொற் கேளேல்', 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என அவ்வை கூறியதான செல்லரித்த கூற்றுகள் இன்றும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன.

எம் நாட்டைத் தாய் நாடு என்கிறோம். வேறு சில நாட்டார் தம் நாட்டைத் தந்தை நாடு என்கின்றனர். தாய் மொழி எனத் தாயே மொழியையும் கற்பித்தாள் என உலகமே உயர்த்திய போதும் அடிமை நிலையிலேயே பெண் வைக்கப்பட்டுள்ளாள். தாய்மொழி என்ற அடிப்படையில் தமிழ்மொழியைத் 'தமிழ்த்தாய்' எனவும் வழங்கி வருகின் றோம்.

பயிரை வளர்த்து உணவளிப்பதையும் பொறுமையையும் முன் வைத்துப் பூமியைப் 'பூமித்தாய்' எனக் கூறுவர். விளைச்சலற்ற நிலத்தைக் குழந்தை பெறாப் பெண்ணுடன் ஒப்பிட்டு மலட்டு நிலம் என்றனர்.

www.padippakam.com



மலட்டு நிலத்தை மாதவிலக்கான பெண்களைக் கொண்டு உழச்செய்யின் விளைச்சல் ஏற்படும் என்ற நம் பிக்கையும் ஒரு காலத்தில் நிலவியது. மாதவிலக்கு சினைப் படும் வளத்தை அறிமுகப் படுத்துவதென்பது உண்மையே. இச்சிறப்பை அறிவிக்கும் முகமாகவே புராதன காலத்தில் மாதவிலக்கு வேளை ஏற்படும் இரத்தக் கசிவைத் திலகமாக நெற்றியில் பெண்கள் இட்டுத் தமது கருவளத்தைத் தெரி வித்து வந்தனர் என்பர். இன்றும் இவ்வழக்கம் குங்குமப் பொட்டாக, மங்கலச் சின்னமாக நாள்தோறும் பெண்களின் நெற்றியில் திகழ்வதைக் காண்கிறோம்.

# 19. திரைப்படத்தில் பெண்

பெண்ணினத்தை மிகவும் இழிவு படுத்தும் கலை வடிவ மாக இன்று பரந்து நிற்பது திரைப்படமாகும்.

தமிழ்த் திரைப்படம் மட்டுமல்ல, இந்தியத் திரைப்படம் அனைத்தும் நிலப்பிரபுத்துவக் கருத்துகளையே வலியுறுத்திப் பெண்ணடிமையை மேலும் நிலைநாட்ட முயன்று வரு கின்றன. நாட்டின் சமூக அமைப்பு இன்னும் அரை நிலப் பிரபுத்துவமாக இருப்பதும் ஒரு முக்கிய காரணமாகும்.

திரைப்படத் துறையில் தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா, டைரக்டர், 'காமராமேன்' முதலான அனை வரும் ஆண்களாகவும் ஆணாதிக்கத்தை நிலை நாட்டும் பிற்போக்காளர்களாகவும் இருப்பது மற்றொரு காரண மாகும்.

திரைப்படங்களில் பெண் பாத்திரங்களில் நடிப்பவர் மட்டுமே பெண்களாவர். இவர்களும் கல்வியறிவில்

படிப்பகம்

www.padippakam.com



குறைந்தவர்களாகவும் கூலிக்கு நடிக்கும் நடிகர்களாகவும் இத்துறையில் ஆதிக்கம் செலுத்தும் முன்கூறிய கலைவல்லு நரின் தயவில் வாழ நேரிடுவதாலும் பெண்ணடிமையை எதிர்த்துப் போராட முடியாத நிலையில் உள்ளனர். திரைப் படத்தில் பெண்ணடிமைப் பிரதிபலிப்புகளை எதிர்க்க முடியாத நிலையில் உள்ளனர்.

திரைப்படத்தில் மட்டுமல்ல வெளியேயும் பெண் கலை ஞர்களின் கற்பு பறிக்கப்படுவதை திரைப்படத்துறை தவிர்த்த வேறு எந்தத் துறையிலும் காண முடியாது. இது இந்தியாவில் மட்டுமல்ல முதலாளித்துவ உலகிலேயே நடைபெறுகிறது. திரைப்படம் மூலம் பிரபலமாகி விபச் சாரச் சந்தையில் உயர்ந்த கூலி பெறவும் இத்துறை வழி வகுக்கிறது.

பெண் இயக்கங்கள் வளர்ச்சியடைந்து கலைத்துறை களில் பெண்ணடிமைக்கு எதிராகப் போராட்டம் நடத் தாததும் பெருங்குறையாகும். நாட்டில் பெரும்பாலான பெண்கள் கல்வியின்றி அறியாமையில் மூழ்கியிருப்பதும் அடிமை நிலைக்கெதிரான தக்கப் பிரச்சார மின்மையும் மற்றைய காரணங்களாகும். பால் கவர்ச்சிப் போஸ்டர்கள் தெருக்களெல்லாம் தொங்குகின்றன. பல நடிகைகள் கவர்ச்சி காட்டித் திரைப்படக் கூலிச் சந்தையில் தமக்கு உயர்ந்த கூலி பெறவும் முயல்கின்றனர்.

திரைப்படத்தில் இன்று மலினப் படுத்தப்படுவது பாலியலும் வன்முறையுமாகும். பாலியல் இருவகையாகக் கையாளப்படுகிறது. அழகான, கவர்ச்சியான பெண் நட்சத்திரங்கள் கதாநாயகியாக அல்லது முக்கிய பாத்திரங் களாக நடிக்கின்றனர். இப்பாத்திரங்கள் உளவியல் ரீதி யாகப் பரந்த மக்களைக் கவரும் விதமாகத் திரைப்படத் துறையினரால் மிகவும் கவனமாகக் கையாளப்படுகின்றன. காதல் காட்சிகளில் இப்பெண்கள் சம உரிமை பெற்ற முற்போக்கான பெண்களாகவும் காதலனோடு துணிச்ச

www.padippakam.com



ளாக ஆடிப்பாடுபவர்களாகவும் தம் பாலியல் இன்பங்களைக் கவிதையில் மட்டும் கூறுபவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். உடலால் ஓரளவு கட்டியணைத்துக் காட்சி தந்தபோதும் முறையான திருமணத்தின் பின்னரே பாலுறவுக்கு உடன்பட முடியும் என்பதை வலியுறுத்துபவர்களாகவும் காட்டப்படுகின்றனர். இக்காட்சிகள் கனவுக் காட்சிகளாகவும் காட்டப்படுகின்றன. பெற்றோரின் எதிர்ப்பு, வில்லனின் கடத்தல், கற்பழிப்பு முயற்சிகள் யாவையும் முறியடித்துக் காதலன் இறுதியில் வெற்றி பெறுவான்.

திரைப்படத்தில் காதல் திருமணத்தின் பின்னர்ப் பெண் அடிமையாக உழைப்பதையும் சமனற்ற நிலையையும் தெளிவுபடுத்திக் காட்டுவதில்லை.

ஆணும் பெண்ணும் சமனற்ற நிலையில் எவ்வாறு காதல் ஏற்பட முடியும்? வெறும் பாற்கவர்ச்சியும் பாலின்பத் தூண்டலுமே 'காதல்' என்பதை இன்றைய சமூகமும் ஒப்புக் கொண்டே தீரவேண்டும்.

பெண்கள்மேல் பலாத்காரம், கற்பழிப்புக் காட்சிகள் திரைப்படங்களில் பெரும்பாலும் கையாளப்படுகின்றன. இக்காட்சிகளை ஆண்களும் பெண்களும் வரவேற்று ரசிப்பதாகத் தயாரிப்பாளர் கருதுகின்றனர்.

பிராய்டின் கோட்பாடுகள் சார்ந்து மற்றைய உளவியலாளர் கூறும் காரணங்கள் 'ஆண்கள் உற்றுப் பார்த்தல்' என்ற பகுதியிலும் கூறப்பட்டுள்ளன. கதாநாயகி அல்லது கவர்ச்சியான பெண்ணின் சேலையை உரிதல், பிற ஆடைகளை அகற்றல் ஆகியவை பெண் உடலை ஒட்டுப்பார்த்தல் மூலம் பாலியல் இன்ப உணர்வு ஏற்படுத்துகிறது. பிறர் பார்க்காத வேளையிலேயே ஒட்டுப் பார்க்கும் ஆவல் ஏற்படுகிறது. ஒட்டுப்பார்க்க விரும்பாதவர்களையும் திரைப்படம் பார்க்கச் செய்கிறது. தியேட்டரில் இரவுச் சூழலில் திரைமேல் வேகமாக ஓடும் சம்பவங்களைப் பார்க்கும்

www.padippakam.com



நிலையில் பார்வையாளர் தனிமை நிலையடைந்து, தியேட்டரையே மறந்து விடுகின்றனர். திரையில் தோன்றும் பாத்திரங்களுடன் ஒன்றி விடுகின்றனர். சீட்டில் அவர் இருப்பதில்லை. தாம் விரும்பும் நடிகர், நடிகையாகி அப் பாத்திரங்களின் இன்ப துன்பங்களுடன் ஒன்றிவிடுகின்றனர். பார்வையாளரைக் கனவு நிலையில் ஈர்த்துச் செல்வதே திரைப்படம். இவ்வாறெல்லாம் உளவியலாளர் கூறுகின்றனர்.

- பிறர் பாலுறவு கொள்வதை ஒட்டுப் பார்ப்பதிலும் (Voyeurism) தம் உடலை அம்மணமாகப் பார்ப்பதிலும் (Exhibitionism) இன்பமேற்படுவது மனித இயல்பு. திரைப் படத்தில் இவை மறைமுகமாக எளிதாகக் காட்டப்படு கின்றன. கனவு நிலையில் தம்மேல் பலாத்காரம் செய்வதைப் பெண்களும் பாலெழுச்சியில் மகிழ்ந்து காட்சியை ரசிக்கின்ற னரா என்றோர் வினா எழுகிறது. அல்லது பெண்கள் ஏன் இத்தகைய திரைப்படங்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டும் பார்க்கச் செல்ல வேண்டும்? பெரும்பாலும் பாலியலில் பல கட்டுப்பாடுகள் விதித்து அடக்கி ஒடுக்கப்படும் பெண்கள் இக்காட்சிகளை பலவித உணர்வு நிலையில் பார்க்கின்றனர்; பெண்ணின் நிலையை உணர்ந்து வேதனை உணர்வும் பெறுகின்றனர்.

துன்ப நிகழ்ச்சிகளும் கலை வடிவங்களில் வரும்போது எம் நெஞ்சை நெகிழ வைக்கின்றன. துன்பியலும் கலை ரசனையே துன்பியல், இன்பியல் எனக் கலைகளைப் பிரிப் பதும் மேல்நாட்டு மரபு.

திரைப்படம் முடிந்து, கனவு நிலைமாறி வெளியே வந்தபின்னரே அக்கற்பழிப்புக் காட்சிகளைக் கண்டித்து ஆபாசம் என அனைவரும் பேசுகின்றனர். திரைப்பட விமர்சனச் சஞ்சிகைகளும் இக்காட்சிகளைக் கண்டித்து எழுதுகின்றன. திரையரங்கில் தாம் பார்த்து ரசித்த படத்தைப் பின்னர் தம் பிள்ளைகள், மனைவி, குடும்பத்

படிப்பகம்

www.padippakam.com



தவர் பார்க்க வேண்டாம் எனவும் தடுக்கின்றனர். இது பெரிய முரண்பாட்டான விந்தையாகும். தியேட்டரில் ஏற்படும் கனவு நிலைக்கும் வெளியே வந்ததும் சமூகத்தோடு ஒட்டிய நனவு நிலைக்கும் ஏற்படும் முரண்பாட்டு நிலை கவனிக்கப் பட வேண்டியதாகும். இதற்குரிய காரணம், தியேட்டரில் இருளில் இருக்கும்போது தனி மனிதனாக ஆபாசக் காட்சி களை ரசித்துப் பாலின்ப உணர்வுடன் மகிழ்பவன் வெளியே வந்ததும் சமூகத்தின் அங்கத்தவனாகிறான். பாலியலில் உள்ள சமூகக் கட்டுப்பாடுகள் அவன் முன் நிற்கின்றன. சமூகத்தோடு ஒன்றித்து ஆபாசக் காட்சிகள் தடை செய்யப் பட வேண்டும். குடும்பத்தவர் பார்க்கும் படமல்ல எனக் குரலெழுப்புகின்றனர்.

உரிமையோடு காதலித்துப் பூங்காவிலும் கடற்கரை யிலும் குன்றுகளிலும் ஆடிப்பாடிய காதலி திருமணமானதும் முதலிரவு அன்று அடக்க ஒடுக்கமாக நாணி வருகிறாள். பின் கணவனுக்கும் குடும்பத்துக்கும் அடங்கி அவர்களது காலில் விழுந்து ஆசிய பெறும் குடும்பப் பெண்ணாக வீட்டுப் பொறுப்புகள் அனைத்தும் ஏற்கும் அடிமைப் பெண்ணாக, அத்துன்பங்களில் மகிழ்ச்சியுறும் இனிய பெண்ணாகக் காட்டப்படுகிறாள்.

பெண்கள் கஷ்டமும் துன்பமுமடையும் காட்சிகளையும் குடும்பத்திற்காக, அதன் நற்பெயரைக் காப்பதற்காகத் தன்னை அர்ப்பணிக்கும் காட்சிகளையும் பெண்கள் தங்கள் வாழ்வோடு இனங்கண்டு ரசிப்பதைக் காணலாம்.

கதாநாயகியின் கற்பொழுக்கம் திரைப்படங்களில் சிறப்பாகப் பேணப்படுகிறது. அதே வேளை கதையில் வரும் மற்றைய பெண்கள் யாவரும் இழிவாகக் காட்டப் படுகின்றனர். பெரும்பாலும் பிற பெண்கள் பால் கவர்ச்சிக் கணிகைகளாகவும், கற்பொழுக்கமற்று காதலனை மயக்கு பவர்களாகவும் அரை நிர்வாணத்தில் டிஸ்கோ நடனம் ஆடுபவர்களாகவும் காட்டப்படுகின்றனர். இந்தியத்

www.padippakam.com



திரைப்படங்கள் யாவும் ஏறக்குறைய ஒரே வாய்ப்பாட்டையே பின்பற்றுகின்றன.

பெரும்பாலும் நிலப்பிரபுத்துவக் கருத்துகளே திரைப் படங்கள் மூலம் வலியுறுத்தப்படுகின்றன. ஆகவே பெண் ணடிமை உட்பொருளாகிறது. சில முதலாளித்துவக் கருத் துள்ள படங்களும் பெண்ணடிமைத் தளத்தை விட்டுவிட வில்லை.

டைரக்டர் கே. பாலச்சந்தரின் 'அரங்கேற்றம்' என்ற படம் சில ஆண்டுகளின் முன் வெளிவந்தபோது பரபரப் பேற்படுத்தியது. வறுமையின் காரணமாக மூத்த பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டுப் பெரிய குடும்பத்தைக் காப்பாற்று கிறாள். இங்கும் விபச்சாரம் செய்து பிழைப்பது அநீதி, ஆணாதிக்கத்தின் அவலம், பெண்ணடிமையின் இழிநிலை எனக்கூறி இதை ஒழிப்பதற்கு அவரால் வழிகாட்ட முடிய வில்லை. விபச்சாரத் தொழிலை விட்ட பின்னர், ஒருவன் காதலித்துத் திருமணம் செய்ய முன் வந்தபோது அப்பெண் தற்கொலை செய்து கொள்கிறாள்.

முற்போக்கானவர் போலப் பெண்களைக் காட்டி அடிமைப்படுத்துவதே முழுத் திரைப்படத்தினதும் நோக்க மாகும்.

'நிரபராதி' என இந்தியிலும் தமிழிலும் வெளியிடப் பட்ட படத்தில், விபச்சார விடுதிக்கு ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட பெண் ஒருத்தியின் சகோதரி அத்தொழிலை நடத்திய முக்கிய நால்வரைக் கொலை செய்து தானும் சிறை செல்கிறாள், கதாநாயகி சமுதாய மாற்றத்திற்குப் போரிடுபவளாகச் சித்தரிக்கப்படவில்லை. தன் தங்கைக் காகச் சிலரைப் பழி வாங்குபவளாகக் காட்டப்பட்டுள் ளாள். அத்தோடு தயாரிப்பாளரின் நோக்கம் விபச்சார விடுதிகளில் நடைபெறும் பாலியல் விகாரக் காட்சிகளைக் காட்டிப் பணம் பறிப்பதாகவே இருக்கிறது; இந்நோக்கத் தின் அடிப்படையாகப் பல ஆபாசக் காட்சிகளும் விகாரமான பாலுறவுக் காட்சிகளும் இப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



அண்மையில் வெளிவந்த ஏ.வி.எம்.மின் 'புதுமைப் பெண்'ணில் கணவன் சிறையிலிருந்து வந்து மனைவியின் கர்ப்பம் பற்றிச் சந்தேகப்பட்டதும் 'ஒவ்வொரு பெண்ணும் சீதைபோல் தீக்குளித்துத் தன் கற்பை நிலை நாட்ட முடியாது' எனக் கூறி வீட்டைவிட்டு மனைவி வெளியேறுகிறாள். இப்சனின் நோராவை நினைவூட்டக் கூடியதான கதை ஒன்று நூறு ஆண்டுகளின் பின்னர் திரைப்படமாக வெளிவந்தது பாராட்டுதற்குரியது. ஆயினும் இன்றைய சமூக அமைப்பில் வீட்டைவிட்டு வெளியேறும் அப்பெண்ணுக்கு மூன்று வழிகளே உள்ளன. ஒன்று: கோபம் தணிந்து வீடு திரும்புவது. இரண்டு: விபச்சார விடுதியை நாடுவது. மூன்று: தற்கொலை செய்வது. இப்சனின் நோராவுக்கும் அன்று இம்மூன்று வழிகளே இருந்தன.

பாட்டாளிப் பெண்களுடைய வாழ்க்கையை, உழைப்பை துன்பங்களைத் திரைப்படங்களில் காட்டுவதில்லை. அழகான வீட்டு வேலைக்காரியையும் அழகான தோட்டக்காரனை அவள் காதலிப்பதையுமே பெரும்பாலும் காட்டுகின்றனர்.

# 20. கலை, இலக்கியங்களில் பெண்ணடிமை

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் ஆண் ஆதிக்கச் சமுதாயத்தை நிலைநிறுத்துவதாக, நீதிப்படுத்துவதாகவே எழுதப்பட்டன.

மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைகள், புராணக் கதைகள், சிலப்பதிகாரம் போன்ற காவியங்கள், சங்க இலக்கியங்கள் எதுவுமே இதற்கு விலக்-

படிப்பகம்

www.padippakam.com



கல்ல. பரத்தையைப் புணர்தல் என்பது வழக்கம். விபச்சாரம் மிகப்பழைய தொழில் என ஆங்கிலத்திலும் கூறுவர். கணவன் பொருள் தேடி வரும்வரை மனைவி அவனை நினைத்து ஏங்கிக் கண்ணீர் விடுவது காதல் காவியமாகிறது.

மன்னர்கள் நிலப்பிரபுக்களது விரகதாபமே பெரும் பாலும் புலவர்களால் பாடப்பட்டது. இவ்வர்க்கத்தவரைத் திருப்திப்படுத்தும் 'மலை' போன்ற மார்புகளைக் காட்டும் ஓவியங்கள், சிற்பங்களைக் குகைகளில் மட்டுமல்ல கோவில் களிலும் காணலாம்.

இன்றைய அரை நிலவுடைமை அரைக் காலனித்துவச் சமூக அமைப்பிலும், நவகாலனித்துவத்திலும் பெண் அடிமைத் தனத்தை உடைத்தெறியும் கலை இலக்கியங்கள் படைக்கப் படுவதாகக் கூறுவதற்கில்லை.

சாதி, சீதனம், மதச் சடங்குமுறைகளைக் கண்டிக்கும் சிறுகதை, நாவல், நாடகம், கவிதைகள் வெளி வருவதைக் காண்கிறோம். காதல் மட்டும் உயர்வாகக் கூறப்படுகிறது.

குடும்பங்களில் பெண்கள் படும் துன்பங்கள், கற்பழிப்பு, விதவை நிலை, காதல் முறிவு ஆகியவற்றால் ஏற்படும் அவல நிலைகள் ஆகியனவும் கலை, இலக்கியங்களில் படைக்கப் படுகின்றன.

விபசாரத் தொழில் மேல் இரக்கம் கொள்ளும் நாவல், சிறுகதைகள் மட்டுமல்ல அவற்றை நீதிப்படுத்தும் எழுத்து களையும் காணலாம். சமூகத்திலிருந்து இவற்றை அழித் தொழிக்கும் வழிகள் கூறப்படுவதில்லை. புதுமைப் பித்தனிலிருந்து ஜெயகாந்தன் வரை இதுவே நடை பெறு கிறது.

சஞ்சிகைகளில் துணுக்குகள் மூலமும் பெண்கள் இழிவு படுத்தப்படுகின்றனர். சமைப்பது, துணி துவைப்பது, வீட்டைப் பார்ப்பது போன்ற வேலைகளை ஆண்கள் செய் வது நகைச்சுவையாக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



கல்லூரி, கடற்கரை, ஆபீசுகளில் ஏற்படும் காதல், அவற்றினால் ஏற்படும் போட்டி, பொறாமை முறிவு ஆகியவை சிறுகதை, நாவல், நாடகங்களில் முதன்மை பெறுகின்றன. காதலிக்கும் காலம் மட்டும் பெண் சம உரிமை பெற்றவளாகவும் குடும்பக் கட்டுப்பாடுகளை அசட்டை பண்ணுபவளாகவும் காட்டப்படுகிறாள். திருமணமானதும் குடும்பப் பெண்ணாக அடங்கிவிடுகிறாள். ஆண்கள் பெண்களை ஏமாற்றுவது, பெண்கள் ஆண்களை ஏமாற்றுவது, அவற்றால் ஏற்படும் மனத் தாங்கல்கள் பெரும்பாலும் சித்தரிக்கப்படுகின்றன.

திருமணத்திற்கு முன்னைய பாலுறவு பெரும்பாலும் கலை, இலக்கியங்களில் தவிர்க்கப்படுகிறது.

லட்சுமி போன்று வணிகப்பத்திரிகைகளால் ஆக்கப்பட்ட பிரபல பெண் எழுத்தாளர்களே கணவன் மற்றோர் பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பினும் மன்னித்து, மனைவி குடும்பத்தைப் பேண வேண்டும் எனவே எழுதியுள்ளனர்.

உயர்ந்த பதவி, அந்தஸ்து, செல்வத்தில் வாழ்பவர், பண்ணையார் போன்றவர் கீழ்மட்டத்திலுள்ள பெண்களை ஏமாற்றிப் பாலுறவு கொள்வது அல்லது பலாத்காரம் செய்வது, இவற்றை எதிர்த்துப் பெண்கள் போராடுவது, பலியாவது போன்ற சிறுகதை, நாவல், நாடகங்களையும் பெரும்பாலும் காணலாம்.

அண்மையில் சென்னையில் மேடையேறும் பெரும்பாலான நாடகங்களில் பெண்கள் எதிர்மறையான இரு வகைகளில் சித்தரிக்கப் படுகின்றனர். ஒன்று பெண் காதலிக்கப்படுபவளாகவும் சம உரிமையுடன் குடும்பத்தை எதிர்த்துப் போராடுபவளாகவும் பின்னர் அடக்கமான குடும்பப் பெண்ணாகவும் சித்தரிக்கப்படுகிறாள். மற்றது, பெண் அடங்காப் பிடாரியாகவும் கணவன், குடும்பத்த

படிப்பகம்

www.padippakam.com



வரை ஆட்டிப்படைப்பவளாகவும், காதலித்து விட்டு ஆண்களை ஏமாற்றுபவளாகவும் கதையில் அமைக்கப்படுகிறாள்.

முதல் முறையானது வழக்கமான சரக்கே. இரண்டாவது, பெண் விடுதலைக்கு மிகவும் ஆபத்தான போக்காகும். பெண்ணை அடங்காப்பிடாரி எனக்காட்டி அவள், மேலும் அடக்கி ஒடுக்கப்படவேண்டும் என்ற ஆபத்தான, பிற்போக்கான கருத்தைத் திணிப்பதாகும்.

நிலப்பிரபுத்துவ காலகட்டத்தைச் சிறப்பாகப் பிரதிபலித்த நாடகங்களை எழுதிப் புகழ்பெற்ற சேக்ஸ்பியர் 400 ஆண்டுகளின் முன்னர் எழுதிய 'அடங்காப் பிடாரியை அடக்குவது' (Taming of the shrew) என்ற நாடகம் பிற்போக்கான நாடகமே. பெண்ணடிமைக் கருத்து கொண்டவையே, இன்றைய தமிழ் நாடகங்களுமாகும். சேக்ஸ்பியரின் இந்நாடகத்தில் பெண் கணவனால் சவுக்கால் அடித்து அடக்கப்படுகிறாள்.

1879இல் ஹென்றிக் இப்சன் எழுதிய 'பொம்மை வீடு' (A Doll's House) என்ற நாடகத்தில் வரும் நோரா போன்ற ஒரு பெண்ணை இதுவரை தமிழ் நாடகத்தில் எவராலும் படைக்க முடியவில்லை. நோரா தன் மேல் கணவன் காட்டிய அநீதியையும் அன்று வழக்கத்திலிருந்த பழைய ஒழுக்க வரம்புகளையும் உடைப்பவளாக, குழந்தைகளையும் கணவனையும் பொருட்படுத்தாது வீட்டை விட்டுப் புறப்படுகிறாள். மிக அண்மையிலேயே, இப்சன் நாடகம் எழுதி நூறு ஆண்டுகளின் பின் இதே கருத்துக் கொண்ட ஒரு ரேடியோ நாடகத்தை மட்டும் கேட்க முடிந்தது.

இல்வாழ்க்கையை, குடும்ப வாழ்க்கையை வள்ளுவர் வரவேற்றுள்ளார். ஆணின், 'வாழ்க்கைத் துணை நலமாக மனைவியின் இலக்கணங்களை வகுத்துள்ளார்.' கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடிக் குடும்பப் பெருமை காக்கக்

படிப்பகம்

www.padippakam.com



கற்புடன் வாழவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தெய்வத்தைத் தொழாவிடினும் கணவனைத் தெய்வமாகத் தொழுது கற்புக் காப்பவள் 'பெய் யெனப் பெய்யும் மழை போன்றவள்' எனப் பெண் கற்பை உயர்த்தி வலியுறுத்தி யுள்ளார். நல்ல மக்களைப் பெற்று வளர்ப்பதும் அவள் பொறுப்பே.

அறத்துப்பாலில் இவ்வாறெல்லாம் கூறிய வள்ளுவர் பொருட்பாலில் 'பெண்ணின்பத்திற்கு ஆட்படவேண்டாம், அவள் சொல்லைக் கேட்கவேண்டாம்' என்று வலியுறுத்து கிறார், பின்னர் அன்பின் விழையார், பண்பின் மகளிர், வரைவிலார், இருவகைப் பெண்டிர் எனப் பரத்தையரைப் பரிகசித்து ஆண்களை விழிப்பாக இருக்கும்படி வலியுறுத்து கிறார்.

பின்னர்க் காமத்துப்பாலில் ஒருதாரக் காதல் மண முறையைக் கூறும் வள்ளுவர் கணவனைப் பிரியும் பெண் ணின் துன்பத்தை விரித்துள்ளார். ஊடலில் ஓரளவு சம உரிமை பேசியபோதும், காதலி மட்டும் கணவன் வேறு பெண்களை எண்ணுகிறானோ, நினைக்கிறானோ என் றெல்லாம் நுட்பமாகக் கூறுகிறார். காதலன்போல, காதலி வேறு ஆண்களை நினைக்க முடியும் என்பதை அவராலும் எண்ணிப்பார்க்க முடியவில்லை. இது இலக்கிய மரபாகி விட்டது!

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்' என வள்ளுவரும் நிலவுடைமையை இறுகப் பிடிக்கும் கற்பைப் பெண்களுக்குமட்டும் வலியுறுத்து கிறார்.

ஒரே ஒரு குறளில் மட்டும் காதலன் காதலி தராசு போலச் சமமாக இருக்கவேண்டும் என சமப்படுத்துகிறார், அது காம இன்பம் 'ஒருதலையா னின்னாது காமங்காப் போல இருதலை யானு மினிது' (1196)எனக் கூறியுள்ளார்.

www.padippakam.com



'வள்ளுவர் வாசுகிபோல' வாழ வேண்டும் என வாழ்த்தும் வழக்கமாகக் கூறும் கதைகள் வள்ளுவரின் மனைவியும் அடிமையாக வாழ்ந்ததாகவே கருத நேரிடுகிறது. வள்ளுவர் வாசுகியை அழைத்ததும் கிணற்றுக் கயிற்றை அப்படியே விட்டு விட்டு ஓடினாள் எனவும், வள்ளுவர் உணவுண்ணும் வேளை தவறிக் கீழே விழும் சோற்றுப் பருக்கையை ஊசியால் எடுத்து வாசுகி உண்டாள் எனவும் சில பேச்சாளர் கூறுவர்.

காம இன்பத்தில் வீழ்ந்து விடாதவனே ஆண்மகன் என்ற கருத்துப் படவும் வள்ளுவர் பெண் வழிச் சேறல், வரைவின் மகளிரிலும் மறைமுகமாகக் கூறியுள்ளார். ஆங்கில நாடகாசிரியர் பர்னாட் ஷாவும் மாவீரன் சீசர், கிளியோபத்திரா போன்ற அழகிய பெண்ணால் கவரப் படாத ஆண்மகன் எனச் சிருட்டிக்க முயன்றார். ஆயினும் 'மனிதனும் உயர்ந்த மனிதனும்' என்ற மற்றொரு நாடகத்தில் எந்த உயர்ந்த மனிதனையும் படைப்பாகிய 'வாழ்க்கைச் சக்தி' பெண்ணிடம் ஈர்த்துவிடுகிறது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

காதலைப்பாடும் நம் கவிதைகளே ஏராளம். பெண்களை வர்ணித்தல், அவர்களது அழகையும் அவயவங்களையும் கவர்ச்சியையும் போற்றுதல் ஆகிய கவிதைகளைப் பரவலாகக் காணலாம். ஆண்களின் 'உற்றுப் பார்த்தல்' உளவியல் பாங்கு இங்கு நிரூபிக்கப்படுகிறது.

பாரதிதாசன் முதல் கண்ணதாசன் வரை இப்போக்கைக் காணலாம். நிலப்பிரபுத்துவக் கண்ணோட்டத்திலேயே அவர்களும் பெண்ணினத்தைப் பார்த்தனர். பெண்களின் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்படைக் குணங்களை வரவேற்றுப் பாராட்டினர்; 'தலை குனிவது அழகென்று சொல்லி உலகையே பார்க்காது பெண்களைத் தடுத்தனர்' என ஒருவர் புதுக்கவிதை பாடினார். வீட்டுக்கு

பெ—8

படிப்பகம்

www.padippakam.com



விளக்கேற்றும் உயர்ந்த குடும்பத்தலைவியாகப் பெண்ணைப் பார்த்தனர். குடும்பத்தலைவி என்பது குடும்பத் தலைவனுக்குக் கீழ்ப்பட்ட நிலையே.

கவிஞர் கண்ணதாசன் பெண்ணை ஆயிரம் நிலவாகவும் மிதிலையின் மைதிலியாகவும், காவிரி மாதவியாகவும், மாங்கனி சுமப்பவளாகவும், தங்கச்சிலையாகவும், மல்லிகை மலராகவும், நிலம் பார்த்து நடப்பவளாகவும் தொட்ட இடமெல்லாம் இனிப்பவளாகவும், மயிலாகவும், மானாகவும் தென்றலாகவும், காஞ்சிப் பட்டுடுத்த தேவதையாகவும் கண்டார்.

'டூயற்' பாடுமிடங்களில் காதலி ஆணின் தோள், மார்பு அழகையும் அவை தரக் கூடிய சுகத்தையும் சம நிலையில் வைத்துப் பாடியபோதும் குடும்பத்தில் அடக்க ஒடுக்கமாக வாழும் பெண்ணையே கண்ணதாசன் வேண்டினார்.

''மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' எனக் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களும் பெண்ணுடைய அடிமை நிலையை அறியாது பாடினார்; இவ்வாறு பெண்ணின் இன்றைய யதார்த்த நிலையைக் காணாது உயர்த்திப்பாடிப் பெண்ணைப் புகழும் மற்றைய பல கவிஞர்கள், பிரசங்கியார் போலவே கவிமணியும் பாடி வைத்தார். 'ஆயிரம் பாவங்களே ஒரு பெண்ணாகப் பிறக்கிறது' என்று கிராமங்களில் கூறும் யதார்த்த உண்மையைக் கூட அறியாது மேலும் பலர் இவ்வாறு பாடியுள்ளனர். பெண்ணை மித உயர்த்தி மட்டமாக்குவது. மேலும் அடிமைப்படுத்துவது ஆண் ஆதிக்கச் சமூகத்தின் வழக்கமாகும். மேலும், கண்ணகி போல், நளாயினி போல், அருந்ததி போல் பெண்கள் வாழ வேண்டும் என்று கூறும் வேளை இப்பெண்கள் எத்தனை அடிமைநிலையில் ஆண் ஆதிக்கக் கணவராலும் சமூகத்

www.padippakam.com



தாலும் அடக்கி ஒடுக்கப்பட்டனர் என்பதை இவர்கள் உணர்வதில்லை.

பாரதி மறைந்து 60 ஆண்டுகளுக்கு மேலாகியும், பாரதியைப் புகழ்ந்து பாராட்டும் பாரதியுகத்தில் வாழ்ந்த எந்தப் புலவரானாலும் இன்று வரை பெண்ணடிமையை எதிர்த்துப் பாரதிபோல் பாடியதில்லை; அவன் போல் பெண் விடுதலைக்குக் குரல் எழுப்பியதில்லை.

பெண்ணைப் பணயமாக வைத்துச் சூதாடும் பெண்ணடிமைச் சமூகத்திலும், 'நாயகர் தாந்தம்மைத் தோற்ற பின்— என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை' எனப்பாரதியின் துரோபதை குரலெழுப்புகிறாள்.

(துரோபதையைத் துச்சாதனன் மயிரைப் பிடித்து அரசவைக்கு இழுத்துச் செல்வது, அவளின் ஆடையை அரசவையில் உரிவது பெண்ணடிமையின் உச்சநிலையைக் காட்டுவதாகும். இன்றும் இந்நிலை ஆணாதிக்கத்தில் மாறி விடவில்லை. இந்தியத் திரைப்படங்கள் அனைத்திலும் பிரபல நடிகர்களே துச்சாதனர்ராக நடிக்கின்றனர். இந்நடிகர்கள் அரசியலந்தஸ்துப் பெற்றவர்களாகவும் சமூகப் பிரமுகர்களாகவும் வாழ்வதைக் காணலாம். இது தவிரக் கலை என்ற பெயரில் பெண்களையே தம் உடையைக் களையப்பண்ணிச் சமூக அந்தஸ்துப்பெற்ற ஆண்கள் சுற்றிவர உட்கார்ந்து கைதட்டி மகிழ்வதை நகரங்களில் காணலாம்; ஸ்ரிப்ரிஸ் நடனங்களையே குறிப்பிடுகிறேன்)

''அமிழ்ந்து பேரிருளா மறியாமையில் அவலமெய்திக்
கலையின்றி வாழ்வதை உமிழ்ந்துதள்ளுதல்
பெண்ணறமாகுமாம்.''

''மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்''

''வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா!''
''கற்பு நிலையென்று சொல்ல வந்தார்—இரு
கட்சிக்கும்அது பொதுவில் வைப்போம்''

www.padippakam.com



''எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்''

''கொடியார் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம் முதல் என்றனரன்றே''

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்''

''ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே''

பாரதி பெண் விடுதலை பற்றிப் பாடும் வேளை முதலாளித்துவ நாட்டுப் பெண்களையே முன் மாதிரியாக எண்ணிப் பாடினான். அந்நாட்டுப் பெண்களும் முற்றாக விடுதலை பெறவில்லை என்பதைப் பாரதியால் கண்டறிய முடியவில்லை. பெண்விடுதலை பெற வேண்டும், அத்தோடு சமைத்து, குழந்தைகள் பெற்று, பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும்: அவளே புதுமைப்பெண் என்றே கருதினான். அடுத்து பாவேந்தர் பாரதிதாசனும் பெண்கல்வி, விதவைத் திருமணம், பெண்ணின் சமத்துவம், பெண்ணடிமையின் கொடுமைகள் பற்றிய பல கவிதைகள் பாடியுள்ளார்.

# 21. மனித இன மறு உற்பத்தி (*Reproduction*)

மனித இனம் தற்காப்பு மற்றும் உணவு தேடுதலுக்காகச் சமூகமாக வாழ நேர்ந்தது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி வேலைப் பிரிவினையை ஏற்படுத்தியது. உபரி உற்பத்தி வர்க்கச் சமுதாயத்தை நிலை நாட்டியது. அடிமை நிலப்பிரபுத்துவச் சமூகங்களில் நிலவிய கட்டளவான உற்பத்தி முதலாளித்துவம் கொண்டு வந்த யந்திர உற்பத்தி

www.padippakam.com



யோடு வேகமடைந்தது முதலாளித்துவம் பண்ட உற்பத்தியைப் பெருக்கியதோடு மனிதத் தேவைகளையும் விரிவாக்கியது.

மனித அடிப்படைத் தேவைகளுக்காக இருந்த உற்பத்தி, முதலாளிகளின் இலாபத்திற்கான உற்பத்தியாக மாறியது. இந்நிலையை நிலை நாட்ட தமக்கு வேண்டிய அரசு யந்திரத்தையும் முதலாளிகள் அமைத்துக் கொண்டனர். 'அரசியல்-சட்டம் சார்ந்த' வன்முறைப் பகுதியையும் (இராணுவம், பொலீஸ், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்) வன்முறையற்ற 'கருத்தியல்களை'யும் (மதம், கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள், கலை இலக்கியம் முதலியன) கொண்ட அரசு யந்திரத்தின் ஆதிக்கமும் இன்றைய தனியார் உற்பத்தியும் மறு உற்பத்தியும் நடைபெறும் சமூக அமைப்புக்குச் சேவை செய்கின்றன.

ஒரு தொழிற்சாலை தொடர்ந்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு மற்றோரிடத்தில் அவ்வுற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்கள், யந்திரம் இயங்குவதற்கு வேண்டிய மின்சாரம். எண்ணெய், யந்திரத்தின் மாற்றுறுப்புகள் மறு உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அது மட்டுமல்ல. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களும் மற்றோரிடத்தில் தயாராக்கப்பட வேண்டும். இம் மறுஉற்பத்தி (Reproduction)ப் பணியைச் செய்ய வேண்டிய பொறுப்பு பெண்ணினத்தையே சார்கிறது. அதாவது அவர்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து பெற்று வளர்த்து, தொழிற்சாலைகளிலும் பிற இடங்களிலும் உழைப்பதற்குத் தயாரிக்க வேண்டும். அப்பொழுதே இன்றைய சமூக அமைப்பு தொடர்ந்து இயங்க முடியும்.

தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி அவர்கள் தமது இழந்த உழைப்புச் சக்தியை மீண்டும் பெற்று மறு நாள் உழைப்பதற்குத் தொழிற்சாலைக்கு வருவதற்காக மட்டும் அல்ல; அவர்கள் திருமணம் செய்து, குழந்தைகளைப்

படிப்பகம்

www.padippakam.com



பெற்று வளர்ப்பதற்கும் வேண்டிய கூலி தரப்பட வேண்டும். அப்போதுதான் தந்தை வேலையிலிருந்து ஓய்வு பெற அல்லது இறந்து போக அந்த இடத்தைப் பிள்ளை நிரப்ப முடியும். குறிப்பிட்ட தொழிலாளியின் பிள்ளையை வேலைக்குஅமர்த்தாவிடின் முதலாளி கூலிச்சந்தையிலிருந்து ஒருவரைத் தேர்ந்து கொள்வான். ஆகவே கூலிச் சந்தையில் உழைப்புச் சக்தியை விற்கத் தயாரானவர்கள் மறு உற்பத்தி செய்யப்பட்டு என்றும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

உழைப்பதற்காக நாள்தோறும் சென்று வரும் தொழிலாளி இழந்த உழைப்புச் சக்தியை மீண்டும் பெறுவதற்கு வேண்டிய உணவு சமைத்தல், வீட்டைப் பேணல், குழந்தைகளைப் பராமரித்தல், உடைகளைத் தோய்த்தல் முதியோரைக் கவனித்தல், தண்ணீர் எடுத்தல் போன்ற வேலைகளைச் செய்யும் மனைவியின் உழைப்புக்குக் கூலி கிடைப்பதில்லை. வேலைக்காரர் இப்பணிகளைச் செய்யும்போது கூலி தரப்படுகிறது. பெண் நாள்தோறும் 15-18 மணி நேரம் உழைக்க நேரிடுகிறது. சில வேளைகளில் அவள் ஓய்வு எடுப்பது போலக் காணப்பட்டாலும் உழைப்பதற்குரிய தயார் நிலையிலேயே அவள் எந்நேரமும் வீடு என்ற சிறையில் அடைந்து கிடக்கிறாள்.

முதலாளிகள் இலாபம் சேர்ப்பதற்கு வேண்டிய பண்ட உற்பத்தி தொடர்ந்து இயங்கத் தொழிற்சாலைகளின் வெளியே மற்றோர் இடத்தில் கூலி பெறாத அடிமை நிலையில் பெண்கள் உழைக்க நேரிடுகிறது. இதற்கு மேலாக முதலாளித்துவம் பெண்களைத் தொழிற்சாலைகளிலும் பிற இடங்களிலும் வேலைக்கு அமர்த்துகிறது. அங்கெல்லாம் உழைப்புச் சக்தியை விற்றுவிட்டு வீடு திரும்பும் பெண் தன் இனத்தின் பரம்பரையான அடிமை வேலைகளான சமையல், வீடு பேணல், குழந்தை வளர்த்தல், துணி தோய்த்தல், மூதியோர் பேணல் முதல் கணவனுக்குரிய பிற பணி விடைகள் வரை உழைக்க நேரிடுகிறது. தார

www.padippakam.com



இடங்களிலிருந்து குடங்களில் தண்ணீர் சுமக்கும் பெண்களை இந்தியக் கிராமங்களில் காணலாம்.

இத்தகைய நெருக்கடி நிலையில் ஓரளவு சுதந்திரம் பெற்ற முதலாளித்துவச் சமூக அமைப்புள்ள மேல் நாடுகளில் நுகர் பண்டங்களா. குழந்தையால் கிடைக்கக் கூடிய உணர்வுத் திருப்தி (Emotional Satisfaction)யைத் துறந்து பண்டங்களால் கிடைக்கக் கூடிய திருப்தியையும் வாய்ப்பு களையும் முதன்மையாக அங்குப் பெண் கொள்கிறாள். வீட்டில் தன் வேலைப் பளுவைக் குறைக்கக்கூடிய எலெக்டிக் காஸ் குக்கர், வாஷிங்மெஷின். பிரிட்ஜ், 'வக்கும் கிளினர்', தகர உணவுகள் முதலியவற்றுடன் பிரயாணத்தில் பயன் படக்கூடிய வாகனங்களுக்கும் முதன்மை, தருகிறாள். இவை தரும் திருப்தி, வசதியையே முதன்மைப்படுத்துகிறாள். குழந்தையை ஒரு தொல்லை தரும் செலவான பண்டமாகவே பெண் கருதுகிறாள்.

இத்தகைய நுகர் பண்டச் சமூகத்தில் வாழப் பழகிய பெண், குழந்தையைப் பெற்று வளர்ப்பதன் மூலம் தன் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. குழந்தையால் அவளது உழைப்பு நேரம் கர்ப்பக் காலத்திலும் பிள்ளை பெற்ற காலத்திலும் பின்னர் வளர்க் கும் காலத்திலும் பாதிக்கப்படுகிறது. பிள்ளையைப் பகலில் தன் வெளி உழைப்பு வேளையில் கவனிக்கும் இடங்களிலும் அவளது கூலியில் ஒரு பகுதி பறிக்கப்பட்டுவிடும். அரசு அல்லது முதலாளி இந்த இக்கட்டான காலத்திற்கு வழங்கும் சில சலுகைகள் ஈடுகொடுப்பதாக இல்லை. ஆகவே கருத் தடைச் சாதனங்கள் அவளுக்கு முதலாளித்துவச் சுரண்டலி லிருந்து விடுபட ஓரளவு வாய்ப்பளிக்கிறது.

முதலாளித்துவம் குறுகிய கால நலனைக் கொண்ட திட்டமற்ற அமைப்பேயாகும்; எதிர்காலத்தைப் பற்றிக்

படிப்பகம்

www.padippakam.com



கவலைப்படாது அவ்வேளை சந்தைக்கு இழுக்கக் கூடிய அனைவரையும் உற்பத்தியில் ஈடுபடுத்தவே முயலும், மனித உழைப்பின் மூலம் மட்டுமே உபரி மதிப்பை அபகரித்து வளர்வதே முதலாளித்துவம். ஒரு பகுதியினரை வேலையற்றவர்களாகவும் முதலாளித்துவம் வைத்திருக்க வேண்டும். ஆகவே மனித உழைப்புச் சக்தியோடு முரண்பாடு ஏற்படும் வேளை யந்திரங்களை மேலும் மேலும் கூர்மைப்படுத்தி உற்பத்தி தேங்கிவிடாது காப்பாற்றிக் கொள்ளும்.

இன்றைய நிலையில் முதலாளித்துவ நாடுகளில் மனித இன மறு உற்பத்தி வீழ்ச்சியடைகிறது. அதைச் சீர் செய்ய அந்நாடுகள் பல வழிகளைக் கையாளுகின்றன. ஒன்று. மூன்றாவது உலக நாடுகளில் உற்பத்தியில் ஈடுபட வாய்ப்பற்றுத் தேங்கிக் கிடைக்கும் கூலி உழைப்பாளரைத் தம் நாட்டிற்கு இறக்குமதி செய்வது. முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் (கள்ளக் கடத்தல்) மூன்றாவது உலக நாடுகளிலிருந்து கூலி உழைப்பாளர் இறக்குமதி செய்யப்படுகின்றனர், அடுத்து உழைப்புச் சக்தியும் மூலப் பொருட்களும் மலிவாகக் கிடைக்கும் மூன்றாவது உலக நாடுகளில் மனித உழைப்பை அதிகம் ஈர்க்கும் தொழிற்சாலைகளைத் தரகு முதலாளிகளுடனோ, நேரடியாகவோ அமைத்துக்கொள்கின்றனர். தையற் தொழிற்சாலைகள். மாற்றுறுப்பு உற்பத்தி, கைப்பணிப் பொருட்கள், தகர உணவுகள், சுற்றாடல் பிரச்சினை ஏற்படுத்தக் கூடிய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஏராளமான தொழிற்சாலைகள் இன்று மூன்றாவது உலக நாடுகளில் ஏற்படுத்துவது மட்டுமல்ல அந்நாடுகளை முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகள் தங்களது நவகாலனிகளாகவும் ஆக்கி வருகின்றன.

பெண்களின் மலிவான அடிமை உழைப்பை அபகரிப்பதைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு ஏகாதிபத்திய

படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவ நாடுகள் இவ்வாறான பல்வேறு நவீன முறைகளைக் கையாள்கின்றன.

தம் நாடுகளிலேயே பிள்ளைகளைப் பெற்று வளர்த்து யந்திரங்களில் உழைப்பதற்கு வேண்டிய அளவு ஆர்வம் தர வல்லதாகப் பெண்களுக்குத் தகுந்த முழுநேரக் கூலியையும் ஓய்வையும் தந்துதவ முதலாளித்துவம் தயாராக இல்லை என்பதையே இன்றைய நிலை காட்டுகிறது.

பெண்களின் அடிமை உழைப்பை மறைமுகமாக முதலாளித்துவம் அபகரிக்கிறது. உலகில் இன்று உபரிக் குவிப்பில் எழுப்பப் பட்டுள்ள அனைத்துச் செல்வங்களின் பின்புறமாகப் பெண்ணினத்தின் அடிமை உழைப்பு மறைந்துள்ளதைப் பெரும்பாலான பொருளாதார நிபுணர்களும் காண்பதில்லை. இந்நிலை நீடிக்கும் வரை பெண்களின் அடிமை நிலை என்றும் மாறப்போவதுமில்லை. புதிய புரட்சிகரமான சமூக அமைப்பு ஒன்றை அமைப்பதன் மூலமே பெண்ணினம் விடுதலை பெற முடியும். பாட்டாளிகளின் அரசியற் போராட்டங்களுக்குப் பெண்களும் முழு ஆதரவு தருவதன் மூலமே இது சாத்தியமாகும்.

ஆண்களால் சமூக உற்பத்தியில் மட்டுமே ஈடுபட முடிகிறது. பெண்கள் மட்டுமே சமூக உற்பத்தியிலும், அது தொடர்ந்து இயங்குவதற்குரிய மனித இன உற்பத்தியிலும் ஈடுபட முடியும். பின்னதில் ஆணின் பங்கு மிகக் குறைவு. பெண் விரும்பின் கர்ப்பத்தைத் தடுப்பது மட்டுமல்ல, கருச் சிதைவும் செய்துவிட முடியும். இவ்வுண்மை ஒன்றே பெண்ணினம் ஆணினத்திலும் உயர்ந்தது என்பதற்கு முதன்மையான எடுத்துக்காட்டாகும். மற்றைய தனிச் சிறப்புகள் பிற அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன.

இன்று தாழ் நிலையிலுள்ள பாட்டாளி வர்க்கம் விரைவில் சோஷலிசப் புரட்சியுடன் உயர்நிலையடையப் போவதை நாம் உறுதியாக நம்புகிறோம். அதே போலவே இன்று அடிமை நிலையிலுள்ள பெண்ணினம் சோஷலிசப்

படிப்பகம்

www.padippakam.com



புரட்சியைத் தொடர்ந்து ஒரு காலத்தில் உயர் நிலை அடையப் போவதும் உறுதியாகும். பெண்ணினத்தின் வரலாறு அடிமை விலங்குடன் தோன்றியதில்லை. அவ் வினத்தின் எதிர்காலம் அவ் விலங்குகளுடன் முடியப் போவது மில்லை.

## 22. எதற்காகக் கர்ப்பம்?

முதலாளித்துவ நாடுகளில் பெண்கள் குழந்தை பெற்று வளர்க்கும் தொல்லையிலிருந்து விடுபட்டு வருகின்றனர்.

எதற்காகப் பெண் ஒருத்தி குழந்தையைப் பெற வேண்டும் என்ற வினா ஒன்று இங்கு எழுகிறது. குழந்தை கர்ப்பமானதும் மசக்கைத் தொல்லை, வயிற்றில் சுமப்ப திலுள்ள அசௌகரியம், தன் உயிரைப் பணயம் வைத்து இரத்தம் சிந்திப் பிள்ளை பெறும் பிரசவ வேதனை, பிறந்த பின் 24 மணி நேரமும் விழிப்பாக இருந்து பாலூட்டி, கழிவுகள் அகற்றி, குளிப்பாட்டி, தன் பிற சுதந்திரப் பொழுது போக்குகளைத் துறந்து வளர்த்தெடுக்கும் துன்ப மான பொறுப்பைப் பெண்ணினம் ஏன் ஏற்க வேண்டும்? குழந்தையின் சிரிப்பில், அணைப்பில் பெறும் சிறு மகிழ்வு பட்டதுன்பத்திற்கெல்லாம் ஈடாகுமா? இது தவிர அவள் தன் வாழ்க்கைத்தரம், வசதிகள் ஆகியவற்றைக் குறைக்க நேரிடு கிறது.

பெண்ணின் கர்ப்பத்தையும் இயற்கையை ஆக்கிர மிப்பது போலத் தாம் ஆக்கிரமிக்க முடியும் என ஆண்கள் எண்ண முயல்கின்றனர். பெண் இயற்கையைச் சார்ந்த மிருகமல்ல.

படிப்பகம்

www.padippakam.com



கணவனின் சொத்துரிமையைப் பேண, பெண் ஏன் துன்புறவேண்டும்? அடிமை ஆடு, மாடு போலத் துன்புற வேண்டும்? சமூக உற்பத்தியைத் தொடர்ந்து எடுத்துச் செல்வதற்காகக் குழந்தை பெறவேண்டுமாயின் அதற்கேற்ற கூலியையும் வாய்ப்பையும் சமூகம் பெண்ணுக்குத் தந்துதவ வேண்டும். அரசு தலையிட்டு, இன்று ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு விதமாகப் பெண் கர்ப்பத்தைக் கட்டுப்படுத்து கிறது. கர்ப்பப்பையை அகற்றும் சாதாரணப் பெண்களுக்குச் சிங்கப்பூர் அரசால் ரு 55,000 வரை வழங்கப்படும்போது அயல்நாடான மலேசியாவில் பெண்கள் ஐந்து குழந்தைகளாவது பெறும்படி அரசால் வேண்டப்படுகின்றனர். இந்தியாவில் இரண்டுக்கு மேல் வேண்டாம் என்கின்றனர். கர்ப்பச் சிதைவுக்குச் சட்ட ரீதியாக உரிமை பெற்ற ஈரானியப் பெண்கள் தற்போது அதிகக் குழந்தைக்ள் பெறும்படி வலியுறுத்தப் படுகின்றனர்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 15 லட்சம் கருச் சிதைவுகள் நடப்பது அநீதி என ஜனாதிபதி ரீகன் கூக் குரலிட்டார்.

அமெரிக்கப் பெண்கள் கர்ப்பச்சிதைவு பெண்களது உரிமை எனப்போராடுகின்றனர். நார்வே, சுவீடன் போன்ற பல நாடுகளில் பெண்கள் குழந்தை பெறத் தயங்குவதால் தமது சமுதாயம் காலப்போக்கில் அழிந்து போகப் போகிறது எனச் சமூக விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர்; முதுமையில் பண்ட ஆசைகளில் நாட்டம் குறைய மூன்றாவது உலகநாடு களிலிருந்து குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்க அந்நாட்டவர் முயல்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் குழந்தை பெறும் தொல்லை யிலிருந்து விலகும் பெண்கள் தனிமையைப் போக்க நாய், பூனை போன்ற மிருகங்களையும் பறவைகளையும் வளர்க் கின்றனர். தனிமையைப் போக்க முதுமையில் திருமணம் செய்து குடும்பமாக வாழ முயல்பவர்களும் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



செல்வந்தர்கள் முதுமையில் இளம் ஏழைப்பெண்களைச் சொத்துரிமை ஆசைகாட்டி மணம் செய்வதும் நிகழ்கிறது.

அண்மையில் ஓர் ஆங்கிலப் பெண் தன் கர்ப்பத்தில் மற்றொருவருக்கு ஒரு குழந்தை வளர்த்துப் பெற்றுக் கொடுத்த சம்பவம் உலகச் செய்தியாக வெளி வந்தது. கர்ப்பத்தில் வளர்த்தெடுத்துப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பெண் முன்னரேயே கூலிபேசியிருந்தாள். இச் செய்தி பலருக்கு வேடிக்கையாக இருப்பினும் அப்பெண் கூலி பேசியது நியாயமே. ஒரு பெண் கூலியின்றி மிகவும் கஷ்டமான, ஆபத்தான தொழிலில் ஏன் இறங்க வேண்டும்? ஆரம்பத்தில் எழுப்பிய வினாவிற்கு மீண்டும் வருகிறோம். கணவனின் பரம்பரைக்காக, அவன் சொத்துரிமையை எடுத்துச்செல்ல பெண்ணினம் அடிமை நிலையிலிருந்து குழந்தை பெற்றுக் கொடுத்த காலம் மலையேறி வருகிறது. சமூகத்திற்குக் குழந்தைகள் வேண்டுமாயின் பெண்களுக்கு அதற்கேற்ற கூலிவழங்கட்டும். முதலாளித்துவச் சமூகத்தில் உரிய கூலியை அரசோ, ஆளும் வர்க்க முதலாளிகளோ வழங்கத் தவறுவதாலேயே பெண், குழந்தை பெறுவதைத் தடுக்கிறாள்; அல்லது கருச்சிதைவு செய்கிறாள்.

பாலுணர்வு இன்ப எழுச்சி தருவது, இயல்பான உள்ளுணர்வு (instinct) எனக் கூறலாம், ஆயினும் மனித அறிவியல் வளர்ச்சியின் மூலம் இன்று கர்ப்பத்தைத் தடை செய்யும் அளவிற்குப் பெண்ணினம் ஆற்றல் பெற்றுள்ளது. ஆகவே மனித இன மறு உற்பத்தி என்பது முழுமையாக உரிமைபெற்ற பெண்களின் ஆதிக்கத்திலேயே உள்ளது. பல்வேறு பொழுதுபோக்குகள், நுகர் பண்டங்கள், விளையாட்டுகள் பெண்ணுக்கு மகிழ்வளிக்கக் கூடியவையாகச் சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது. பாலுறவின்பம் தேவைப்படினும் அவளை உற்றுப் பார்க்கும் ஆண்கள் தயாராக உள்ளனர்; அவளது இன்பத்திற்குக் கூலிதரவும் தயாராக ஆண்கள் இருப்பது பெண்ணின் மற்றொரு உயர்நிலையாகும். இது விபச்சாரமல்ல. அவளே ஆண்களைத் தேர்ந்

www.padippakam.com



தெடுக்கத்தக்க உயர்நிலை. தாய்வழிச் சமுதாயத்தில் பெண் இவ்வுயர் நிலையிலேயே வாழ்ந்தாள். வேலைப் பிரிவினை, வர்க்க சமுதாயம், பெண்ணினத்தை அடிமையாக்கியது. இதையே, 'உலக வரலாற்றில் பெண்ணினம் பெற்ற தோல்வி' என ஏங்கெல்ஸ் கூறினார். ஆயினும் இந்நிலை மேலும் நெடுங்காலம் நீடிக்கப் போவதில்லை என்பதை இன்றைய நிகழ்ச்சிகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

சமூக நோய்கள் கட்டுப்பாடற்ற பாலுறவில் பெருகக் கூடும் எனக் கூறும் சமுதாய உணர்வு மிக்க முதலாளித்துவ அறிஞர்கள் இன்றும் விபசார விடுதிகளை ஏன் விட்டு வைக்கின்றனர்? புதிய சமுதாயத்தில் பாலுறவு ஆண்கள் மட்டும் தேவைக்கு வாங்கும் விற்பனைச் சரக்காக இருக்க மாட்டது. பெண் தன் ஆதிக்க நிலையை உணர்ந்த, சமுதாய உணர்வு மிக்க சமூக முன்னோடியாக இருப்பாள். ஆண்களால் பரவக்கூடிய சமூக நோய்களுக்கு விழிப்பாக இருப்பாள். இன்றைய விஞ்ஞான உலகில் மருத்துவ விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்த நிலையிலேயே உள்ளது. அரசியல், சமூக உணர்வுகள் உயர்மட்ட நிலையிலுள்ள சமுதாயத்தில், பெண் உரிமை பெற்ற நிலையில் போலிக் கருத்துக்களும் கருத்தியல்களும் அவளை ஏமாற்றிவிட மாட்டா.

''உண்மையான பெண் விடுதலைக்கு பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போகவேண்டும்... மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக் கூடும்!'' என்று தந்தை பெரியாரும் துணிச்ச லோடு கூறியுள்ளார். மனித சமுதாயம் நிலைக்க வேண்டு மாயின் 'ஆண்மை' என்ற ஆதிக்கம் அழிந்து பெண்களின் விடுதலையிலும், தயவிலும் புதிய சமுதாயம் ஏற்பட வேண்டும் என்பதே, பெரியாரின் நோக்குமாகும். பெரி யாரின் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூலை அன்னாரைப் போற்றும் தமிழக அரசு பாட நூலாக்கிச் சிறப்பிக்கலாம்.

www.padippakam.com



பெண்ணினத்தின் வீழ்ச்சிக்கு ஏங்கெல்ஸ் காரணம் கூறும்போதும், "மறு உற்பத்தியும் (குழந்தை) பிற அத்தியாவசிய உற்பத்தி உழைப்புப் போல சமூகத்திலிருந்து தனிக்குடும்பத்திற்குச் சென்றது" என்று குறிப்பிடுகிறார். மேலும், "எல்லாப் பெண்களும் சமூக உழைப்பில் ஈடுபடுவதன் மூலமே தமது விடுதலையைத் தேட முடியும். இதற்கு குடும்பம் என்பது சமூகத்தின் தனிப்பொருளாதாரக் கூறாக இருக்க வேண்டிய அவசியமில்லை. தனிக்குடும்ப வேலைகள் பொதுத் தொழிலாக்கப்பட வேண்டும்" எனவும் ஏங்கெல்ஸ் கூறியுள்ளார்.

இக்கருத்தையே லெனினும் வலியுறுத்தி பின் வருமாறு கூறினார் :

"அற்ப வீட்டு வேலைகள், சமையல், குழந்தை வளர்ப்பு ஆகியன சோர்வும் சலிப்பும் ஏற்படுத்துவன. இவ் வேலைகள் யாவும் சோஷலிசப் பொருளாதார உற்பத்தியாக்கப்பட வேண்டும். பெண்களின் விடுதலையும் உண்மையான கம்யூனிசமும் அப்பொழுதே ஆரம்பிக்கும்"

தற்போது சோஷலிச நாடுகள் எனக் கூறப்படும் நாடுகளில் முழு அரசியலுரிமை கிட்டாததினாலும், குடும்பத் தொழில்களும் வீட்டு வேலைகளும் சமூக உற்பத்தி ஆக்கப் படாததினாலுமே இன்னும் அந்நாடுகளில் பெண்கள் முழுமையாக விடுதலை பெறாத நிலையில் உள்ளனர் என்றே ஏங்கெல்ஸ், லெனின் கருத்துகளை வைத்து நாம் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

# 23. அழகு, கவர்ச்சி, காதல், திருமணம்

இயற்கையாகவே அழகாகச் சிலர் பிறக்கிறார்கள். பின்னர் அந்த அழகை வாய்ப்புள்ளவர் மேலும் கவர்ச்சியாக்குகின்றனர். வேறு ஒரு பகுதியினர் அழகின்றிப் பிறக்கின்றனர். அவர்களிலும் வசதியுள்ளவர் தம்மை அழகாக்கிக்

www.padippakam.com



கொள்கின்றனர். பல்வேறு அழகு சாதனங்கள் இன்று பண்டச் சந்தையில் கிடைக்கின்றன.

சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்கு அழகு படுத்தும் எண்ணம் ஊட்டப்பட்டு விடுகிறது. அழகும் அடக்கமுமே அவளுக்கு வாழ்வளிக்க வல்லன என்ற நினைவை குடும்பத்தவரும் சமூகமும் ஏற்படுத்துகிறது.

தம் அழகை மேலும் கவர்ச்சியாக்கப் பெண்கள் அனைவரும் விரும்புகின்றனர். தம்மை மேலும் அழகு படுத்தி வெளியே சென்று வருவதில் பெரும்பாலான பெண்கள் திருப்தியடைகின்றனர். ஆண்களிடம் இக்குறைபாடு இல்லை என்பதல்ல. வாலிப வயதில் பெரும்பாலும் இருக்கலாம். பின்னர் காலப் போக்கில் குறைத்து விடலாம். ஒரே உடையை எத்தனை காலம் பயன்படுத்தினேன் என்று கூறுவதில் ஆண் பெருமைப்படுகிறான். பெண்கள் ஒரு நாள் எத்தனை தடவை உடைமாற்றினேன் என்பதில் தற்பெருமையடைகிறாள். நடுத்தர வகுப்புப் பெண்களே நாள் தோறும் உடை மாற்றி வேலைக்குச் சென்று வருவதைக் காணலாம்.

பெண்களின் குறைபாட்டை முதலாளித்துவம் நன்கு பயன்படுத்துகிறது. வகை வகையான சோப்பு, பவுடர், நறுமண எண்ணெய்கள், கிறீம், சென்ட் வகைகள், உதட்டுச் சாயங்கள், நக வர்ணங்கள், ஷாம்பு, கண்மை, பொட்டு, காதணிகள், வளையல், கழுத்தணிகள், கிளிப்புகள், கால்அணிகள், பிரேஸியர்கள், சேலைகள், தைத்த ஆடைகள், உள் ஆடைகள், துணிகள், பட்டுகள், கூலிங்கிளாஸ் வகைகள், தலை முடிகள், கைக்கடிகாரங்கள், பிரேஸ் லெட்டுகள் இத்தியாதி நூற்றுக்கணக்காகப் பார்க்கலாம். குழந்தைகளுக்குப் பயன்படும் பால் மாவை முதலாளிகள் தாராளமாக உற்பத்தி செய்ய மாட்டார். மேல் கூறியவற்றை வாங்கும் சக்தி படைத்த மூதலாளித்துவ, குட்டி முதலாளிகளுக்காக தாராளமாக உற்பத்தி செய்வர்.

படிப்பகம்

www.padippakam.com



இவையெல்லாம் முதலாளித்துவ விற்பனைப் பண்டங்களே. உலகின் மிகப் பெரிய இலாப மீழைக்கும் தொழிலாக பெண்களின் அழகு சாதனப் பொருட்கள் விளங்குகின்றன. ஆண்கள் இத்தனை பொருட்களைத் தேடுவதில்லை.

பெண்கள் நகையணிந்து தம்மை அழகுபடுத்துவதற்காக காதுகள், மூக்கில் ஓட்டை துளைக்கவும் தயங்குவதில்லை.

முதலாளித்துவ வர்க்கத்தவர், குட்டி முதலாளிகள் சார்ந்த வீட்டுப் பெண்களுக்காகவே அழகு சாதனப் பண்டங்களெல்லாம் பெரும்பாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவர்களிடமே இவற்றை வாங்கும் சக்தி உண்டு. பாட்டாளிப் பெண்களுக்கு இவற்றை வாங்க ஆவலில்லை என்பதல்ல. அவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கே அன்றன்றாடு போராடுபவர்கள்; ஒரே சேலையையே தோய்த்து ஒரு பகுதியைப் பாதி உடுத்தியபடி மறுபகுதியைக் காய விட்டு வெய்யிலில் காத்திருக்கும் பெண்களை இந்தியக் கிராமங்களில் காணலாம்.

நடுத்தர வகுப்புப் பெண்களில் பெரும் பகுதியினர் தம் உழைப்பிலும் பெரும் பகுதியை இத்தகைய நுகர் பண்டங்களுக்கே செலவிடுகின்றனர். முதலாளித்துவத்தின் பண்டவிற்பனைப் பிரச்சாரத்தில் அகப்பட்டு இன்னல் படுபவர்களும் இவர்களே. குறிப்பிட்ட வயதில் வரும் முகப்பருவை அடிக்கடி சோப்புப் போட்டுக் கழுவின் பருக்கள் போய்விடலாம். முதலாளித்துவம் பல வகை முகப்பரு கிரீம்களை பல பத்து ரூபாக்களில் விளம்பரம் மூலம் விற்றுக் கொண்டிருக்கிறது. சினிமா நட்சத்திரங்களைக் காட்டி நவீன முறையான சினிமா விளம்பரங்களையும் பார்க்கச் செய்து விற்று விடுகிறது. பெரும்பாலான குடும்பங்களில் பிள்ளைகளுக்கு நல்ல சத்துணவு தருவதில்லை. அவர்களின் ஒட்டி உலர்ந்த உடலை நவீன ஆடைகளாலும் அழகு சாதனங்களாலும் அலங்கரித்து

www.padippakam.com


விடுகின்றனர். நடுத்தர வகுப்புப் பெண்களையும் இவ்வாறு காணலாம். இவர்கள் அழகு, நாகரிகம் பற்றி நன்கு அறியாதவர்களாவர்.

நல்ல உடற்கட்டுக்கு இளமையிலிருந்து சத்துமிக்க உணவு உண்ண வேண்டும். அதுவே நோய்களிலிருந்தும் தற்காப்பு அளிக்க வல்லது. இதுவே புற அழகு. கருமை அழகானது. வெறும் சிவப்பு, வெள்ளை நிறம் மட்டும் அழகாகாது; இவைதான் அழகு என்பது வெள்ளைக்காரர், ஆரியரான பிராமணர் ஆளும் வர்க்கங்களாக இருந்தமையால் நினைவிலி மனதில் கருத்தியலாகப் பரம்பரையாகப் புகுத்தப்பட்டு விட்டது. பெண்களெல்லாம் விரும்பும் கண்ணன் கருப்பு (நீலம்) நிறத்தவனே.

பெண் பார்க்கும் வேளை அழகு தவிர்ந்த மேலும் பல பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன என்பதை வேறு கட்டுரையிலும் கண்டோம். சீதனத்திலும் பார்க்க கவர்ச்சியான பெண்தான் வேண்டும் என எண்ணும் ஒரு பகுதியினரின் ஆதிக்கத்தில் அழகான பெண்களில் சிறு பகுதியினர் போய்விடுகின்றனர். பெண் பார்க்கும்போதும் அழகு சாதனங்கள் மூலமும் ஆண்மகனை ஏமாற்ற முடிகிறது. மேலும் பிராய்டின் கோட்பாட்டின்படி தாயின் சாயலுள்ள பெண்களை ஆண்கள் தம்மை அறியாமலே தேர்ந்தும் விடலாம், அதனாலேயே அழகு என்பது அவரவர் பார்வையையும் அழகு பற்றிய கோட்பாட்டையும் கொண்டதே. பெரும்பாலும் புற அழகையே பார்க்கின்றனர். அக அழகையும் ஆளுடைமையையும் செயல்கள் மூலமே அறிய முடியும்; வெறும் பார்வையினாலல்ல.

அழகு குறைந்தவள் எனக் கூறப்படும் பெண்ணையும் சீதனத்தை முதன்மைப் படுத்தும் குடும்பங்கள் தேர்ந்து விடலாம். சாதகப் பொருத்தத்திற்காக அழகைப் பாராது சிலர் திருமணம் செய்கின்றனர்; அக்கா மகள், அத்தை மகள் முறைப்பெண்ணாக அழகாகத் தோன்றுவதுமுண்டு. கிராமங்களிலுள்ள புற அழகான பெண்களைச் சீதனத்தைப்

பெ—9

www.padippakam.com



பொருட்படுத்தாது வசதி உள்ள குடும்பத்தவர் இரண்டாம், மூன்றாம் தாரமாகக் கட்டிக் கொள்கின்றனர்.

இவ்வாறு பலவகையாகத் திருமணங்கள் நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்புகளில் நடைபெறுகின்றன. காதல் திருமணங்கள் நடைமுறையில் மிகக் குறைவு. சினிமாவிலேயே காதல் திருமணங்கள் நடைபெறுகின்றன. அழகு, கவர்ச்சி, அந்தஸ்து, பொருத்தம் முதலியவற்றுக்கு மேலாக நாம் கருத வேண்டியது திருமணமான பின்னர் பெண்கள் குடும்பங்களில் பெறும் சிறைத் தண்டனை; அவர்களது அடிமைநிலை, அது தரும் துன்பம், வேதனை, வேலைப்பளு, சுரண்டல் ஆகியன. பெண்ணுக்கும் சுதந்திரமும் வாழ்வில் ஆண்களுக்குக் கிட்டுமளவாவது உரிமைகளும் தரக்கூடிய மகிழ்வை வேறு எவ்வித கவர்ச்சியும் அழகும் அழகான, அந்தஸ்தான, கணவனும் தந்துவிடப் போவதில்லை. ஆண். ஆணின் வெறி கொண்டவனாகவே இருப்பான்.

காதல் பற்றி இக்கட்டுரைகள் எதிலும் விரிவாக விளக்கமாகக் கூறப்படாதது பலருக்கு வியப்பாக இருக்கலாம். காதல் என்ற அழகான வார்த்தையின் யதார்த்தமான பொருளைத் திருமணமானவர்களால் மட்டுமே நன்கு புரிந்து கொள்ள முடியும். மற்றவர்களுக்குக்குப் புரியவைப்பது சிரமம். அனுபவ மூலமே இவர்களால் உணர்ந்து கொள்ள முடியும். ஆணாதிக்க எசமான், அடிமைப் பெண். சமனற்ற நிலையில் எப்படிக் காதல் எழ முடியும்?

ஒருதார மணமுறையை வலியுறுத்துவதற்காக எழுந்ததே 'காதல்' என்ற பிரச்சாரம். தனிச்சொத்துடைமை ஒரே குடும்ப வழியாகக் கொண்டு செல்வதற்கு ஒரு தார மணமுறை வாய்ப்பானது. அரசுக்கும் இது சிறப்பானது. இதற்குரிய காதல் பிரச்சாரத்தைப் புலவர்களும் கலை. இலக்கிய வல்லுனரும், மதமும் சிறப்பாகச் செய்கின்றன. அரசு சொத்தையும் திருமணத்தையும் சட்டத்துடன் கொண்டு வந்தது. இறுதியில் காதல் மூலமோ, தரகர்

www.padippakam.com



ஏற்பாடு செய்த திருமண மூலமோ பெண்ணுக்குக் கடைசியில் கிடைப்பது குடும்பச்சிறை; பாலுறவில் கடும் கட்டுப்பாடு; வேலைப்பளு. ஆண்களுக்கு மட்டுமே சுதந்திரம். ஆணாதிக்கச் சமூக அமைப்பின் விதிகள் இவை.

பாலுணர்வு என்பது ஒரு கெடு; இன்சுவைக் கவர்ச்சி; நிரந்தர மற்றது; என்றும் தணியாதது; தற்காலிக இன்ப உணர்வு (Sensational) மட்டும் தருவது; நிரந்தரமான மகிழ்வோ, இன்பமோ தருவதல்ல. இக்குறை பாட்டைத் திருமணத்தின் பின்னரே பெண்கள் அனுபவ மூலம் உணர்ந்து கொள்கின்றனர். ஆனால் அவர்களால் கட்டுப் பாடுகளை மீறிவிட முடியாது. 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' எனக் கூறும் பழமொழியில் உண்மையில்லாமலில்லை. பழமொழிகள் அனைத்தும் அனுபவத் தொகுப்பே.

குடும்ப வாழ்வு முழுவதுமே பாலுறவின்பமாக இருப்ப தில்லை. காலப்போக்கில் குடும்ப வாழ்வில் அது சிறிய அம்சமாகி விடுகிறது. கர்ப்ப நினைவால் பெண்களுக்கு வேதனையாகவும் ஆகி விடுகிறது. குடும்ப வாழ்வின் அடித்தளம் பொருளாதாரமே. அது ஆண்களின் ஆதிக் கத்தில் உள்ளது. ஆணாதிக்கமும் பொருளாதிக்கமும் அவர்களுக்குச் சுதந்திரமளிக்கின்றன.

ஆண்கள் திருமணமாகிய தம் ஆசைக்காலம் முடிந்ததும் வெளியே மேயத் தொடங்குகின்றனர். அழகான மனைவி வீட்டிலிருக்க அழகில்லாத வேறு பெண்களைத் தேடி அலைகிறான். எக்காலமும் அவனது பாலுணர்வு முற்றாக அடங்கி விடுவதில்லை. சமூகக் கட்டுப்பாடுகள், அந்தஸ்து, சந்தர்ப்பமின்மை, சில சட்ட விதிகளே அவனை ஓரளவு கட்டுப்படுத்துகின்றன. முதலாளித்துவ அமைப்பில் மனைவி யும் ஓரளவு கட்டுப்படுத்துகிறாள். அங்கு பெண் ஓரளவு பொருளாதார சுதந்திரம் பெறுகிறாள். கணவன் தவறின் அவளும் வேறு ஆணைத்தேட, விவாகரத்துக் கோர முயல்கிறாள்.

www.padippakam.com



இத்தகைய உளவியல் நிலையாலேயே காதலை உயர்வு படுத்தி, குடும்பங்களில் காதல் நிலவின் பெண்ணடிமை நீங்கிவிடும் என்று கற்பனாவாதிகள் கூறுவதுபோல இங்கும் சொல்லி அனைவரையும் ஏமாற்ற நான் விரும்ப வில்லை. காதல் திருமணத்திற்கும் தரகர் திருமணத்திற்கும் அதிக வேற்றுமை இல்லை என்பதைக் குடும்ப வாழ்வு தொடங்கிய பின்பே காண்கிறோம். வர்க்க சமுதாயத்தில் காதல் திருமணங்கள் குறைவு. முதலாளித்துவத்திலும் அவ்வாறே. முதலாளிகள், குட்டி முதலாளிகள். பாட் டாளிப் பெண்களைக் காதலித்து மணப்பது அரிது. அந்தந்த வர்க்கத்திலேயே திருமணத்தில் முடியும் காதல் திருமணங்கள் ஏற்படுகின்றன.

முன் கூறியவற்றால் காதல் திருமணத்தை எதிர்க் கிறேன் என்று முடிவுகட்டிவிடக்கூடாது. திருமணம் இருவரும் காதலித்தோ, ஒருவரை ஒருவர் விரும்பியோ செய்வதே நல்ல முறையாகும்; சுதந்திரமான போக்கு மாகும். எத்தகைய காதலும் குடும்பத்தில் முடிகிறது. அங்கு ஆணாதிக்கத்தில் பெண் அடிமைப்படுத்தப்படுகிறாள் என்பதே இந்நூல் மூலம் கூறவந்த முதன்மைக் கருத்தாகும். ஆகவே அடிமைத்தனத்தை நிலை நிறுத்தி அரசும், முதலாளிகளும் பரப்பும் பொய்மைகள் பற்றி பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அழகு, கவர்ச்சி. அழகு சாதனங்கள், காதல் போன்ற வற்றின் உண்மைநிலையைப் பெண்கள் அறிந்து கொள்ள வேண்டும். புற அழகு, கவர்ச்சியிலும் பார்க்க அக அழகைப் பெண்கள் வளம் படுத்த வேண்டும். 'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும் நிலத்திலே யாவர்க்கும் அஞ்சாத நெறிகளும்' என்ற பாரதி கூறியவையே ஆளுடமையும் சமத்துவமும் தரவல்லவை. முதலாளித்துவ விற்பனைப் பண்டங்களான அழகு சாதனப் பொருட்களில் மயங்கி விடக்கூடாது. தமக்கு வசதியும் மகிழ்வும் தரக்கூடிய உடைகளை அணியலாம். ஆண்களின்

www.padippakam.com



பார்வைக்காக அணிவதைத் தவிர்க்கலாம்; ஆண்களின் உடை பெண்களுக்கு வசதியும் சமத்துவமும் தரவல்லது.

காதல் திருமணம் என்பது குடும்பம், சட்டம், வழக்கங்களாலல்ல, சமத்துவத்தாலும் சுதந்திரத்தாலும் ஏற்பட வேண்டும். இவற்றை ஆண் மீறும் வேளை பெண் சுதந்திரமாக வெளியேறும் உரிமை பெற வேண்டும். இந்நிலையில் குடும்ப வாழ்வு அமைந்தால் மட்டுமே அதைக் காதல் வாழ்வு என்று கூறலாம்.

ஆண்கள் உடையில் மாற்றத்தை ஏற்ற வேகத்தில் பெண்கள் ஏற்க முடியாதவர்களல்ல. நம் நாடுகளில் வேட்டி, சேட், பான்ட் போன்று ஆண்கள் மாற்றங்களை ஏற்ற போதும் பெண்களை வசதி குறைந்த சேலையை அணியும்படி வற்புறுத்துவதனாலே அவர்கள் உடையில் மாறுதல் ஏற்படவில்லை. இன்றும் தூங்கும் வேளையிலும் சேலையை உடுத்தபடி வியர்வையுடன் தூங்கும் நிலைபெண்களுக்கு ஏற்பட்டது. ஆண்களின் உடையுடன் ஒப்பிடும்போது சேலை வசதியற்ற உடை என்பதை அனைவரும் அறிவர். சிறைக் கைதிகள் ஓடிவிட முடியாதபடி உடை அணியச் செய்வது போலவே பெண்ணடிமைகளும் குடும்பச்சிறையிலிருந்து ஓடிவிடப் படாது என ஆணாதிக்க சிறை அதிகாரிகள் எண்ணிச் சேலையைப் பெண்களுக்கு வலியுறுத்துகின்றனர் போலும். முதலாளித்துவ சமூகத்தில் பெண்கள் ஓரளவு வசதியைக் கருதி உடையணிகின்றனர்.

ஆண்கள் கூந்தல், தாடி வளர்த்த காலம் மறைந்தது. ஆயினும் பெண்களுக்குக் கூந்தலே அழகு என வற்புறுத்தி பொய் முடிவைத்து நீண்ட கூந்தல் காட்டும் அழகையும் போற்றுகின்றனர், சீனாவில் அழகு என்ற பெயரால் பெண்களின் கால்கள் சிறு வயதிலேயே கட்டப்பட்டன. குடும்பச் சிறையிலிருந்து ஓடி விடுவதைத் தடுக்கப் போலும். சீனப் புரட்சியின் பின்னரே இவ்வழக்கம் ஒழிக்கப்பட்டது.

www.padippakam.com



ஆணினத்தின் கட்டுப்பாடுகளினாலேயே பெண்கள் தமக்கு வசதிதருவதாக உள்ள உடை, அழகைப் பேண முடியாதவராக உள்ளனர், மதத்தின் தேவைக்காகப் பெண்கள் கூந்தலை வெட்டுவதை ஏற்றுக் கொள்பவர் அவர்களின் வசதிக்காக ஆண்கள்போல் அளவாக வெட்டுவதைக் கேலியாகப் பார்க்கின்றனர். முதலாளித்துவ வளர்ச்சி ஒன்றே பெண்களுக்கு இத்துறையிலும் உரிமை வழங்குகிறது. நீண்ட கூந்தலால் வியர்வை, அழுக்கு, பேன், ஈர் போன்ற தொல்லைகளுக்கும் பெண்கள் ஆட்பட நேரிடுகிறது. ஆண்கள் எளிதாகப் பிடித்து இழுத்து அடிப்பதற்குமாகவே கூந்தல் வளர்க்கும்படி வற்புறுத்துகின்றனர் போலும். சைனஸ், தலைவலி, சளி போன்றவை கூந்தல் வளர்ப்பதால் ஏற்படும் தொடர்ந்த நோய்கள்.

ஆண்கள், சேலை உடுப்பதை வலியுறுத்திய போதும் பிற உடையிலும் பார்க்க ஆபாசமாக, பால் கவர்ச்சி யூட்டுவதாக சேலை, ஜாக்கெட் பெண்களால் உடுத்த முடியும் என்பதை அவர் அறியார்.

# 24. சமூக உற்பத்தியில் பெண்ணின் பங்களிப்பு

ஆண், பெண் என்ற பாலீயல் சார்ந்த சமூக அமைப்பிலேயே நாம் வாழ்கிறோம். இங்கு ஆணும் பெண்ணும் சமனற்ற உரிமை, வாய்ப்புகள் கொண்டவராக வாழ்கின்றனர். ஏன் என்பதற்குத் தக்க விளக்கம் கூறுபவரைக் காண்பது அரிது.

உடலமைப்பிள்ள சில வேறுபாடுகளை மட்டும் முன்வைத்து பெண்ணுக்குக் கிடைக்க வேண்டிய சம வாய்ப்புகளை ஆண்கள் எவ்வாறு மறுக்க முடியும்? தடை செய்ய முடியும்?

www.padippakam.com



குழந்தைகள் நாட்டின் செல்வங்கள் என ஆட்சியிலுள்ள வர்களே கூறுகின்றனர். ஆனால் குழந்தையைப் பெற்று வளர்க்கும் தாய் இப்புகழால் எவ்வித வாய்ப்பும் பெற முடிய வில்லை. வயதான பெண்கள், பருவமடையாத பெண் களிலும் பார்க்க சுதந்திரமற்றவளாக குழந்தை பெற்ற தாய் வாழ நேரிடுகிறது. சமுதாயத்திற்கு எவ்வித செலவு மின்றி, குடும்பத்தின் சிக்கன செலவுடன் தாய் குழந்தையை வளர்க்கிறாள். பெற்ற சில வாரத்தில் குழந்தையுடனே வேலைக்குச் செல்கிறாள்; அல்லது வீட்டு வேலைகளைக் கவனிக்கிறாள்; குழந்தைக்கும் பால் தந்து வளர்க்கிறாள். வயல்களிலும் வேலைத் தலங்களிலும் குழந்தையைக் கிடத்திவிட்டு உழைக்கும் பெண்களைக் காணலாம்.

குழந்தை பிறக்கும் வேளை சில நாட்களே பெண் ஓய் வெடுக்க நேரிடுகிறது. கர்ப்பம் அவள் உழைப்பைப் பாதிக்க வில்லை; பால் ஊட்டுவது அவள் எவ்விடத்திலும் செய்யலாம். ஆகவே குழந்தை பெறும் தொழிலை வைத்துக் கொண்டு சமூக அந்தஸ்தில் பெண்ணின் தரத்தைக் குறைத்துவிட முடியாது. உண்மையில் சமூகத்தில் அவள் நிலை உயர்த்தப் பட வேண்டும்.

மாதவிலக்கு பெண்களை உழைப்பிலிருந்து ஒதுக்கி விடு வதில்லை. இது பெண்ணுக்குத் தனிமையில் ஏற்படும் தொல்லையே. இது மட்டுமல்ல, குழந்தையை வயிற்றில் சுமந்து, தன் வேலைகளைச் செய்து பின்னர் பெற்றெடுக்கும் துன்பத்தைத் தாங்கும் தைரியம் உள்ளவர்களும் பெண்களே.

ஆண்களது புஜ பலத்திலும் பார்க்கப் பெண்களின் புஜ பலம் குறைவாயிருக்கலாம். அது மட்டும் பெண்களை இரண்டாம் தரத்திற்கு இறக்குவதற்கு தக்க காரணமல்ல. ஆணைப் போன்று பெண்ணும் கடுமையாக உழைக்க வல்ல வளே. நாள்தோறும் வீட்டில் உள்ள கஷ்டமான வேலை களை அவளே செய்கிறாள். கிணற்றிலிருந்து தண்ணீர்

www.padippakam.com



இழுப்பது தண்ணீர் சுமப்பது, விறகு வெட்டுவது, சுமப்பது, அரிசி இடிப்பது, அரைப்பது போன்ற கடுமையான வேலைகளைப் பெண்களே கூலி இன்றிச் செய்கின்றனர். ஆண்கள் மட்டும் இவ்வேலைகளைச் செய்யும் வேளை அவர்கட்குக் கூலி கிடைக்கிறது.

பெரிய சுமையான பொறுப்புகளைப் பெண்களே ஏற்று நடைமுறைப்படுத்துகின்றனர் என சமூகவியல் ஆராய்ச்சியாளர் மேர்டொக் (Murdock) குறிப்பிட்டுள்ளார்.

புஜ பலத்தை இன்று தொழில் நுட்பங்களும் யந்திரங்களும் கைப்பற்றி விட்டன. கார், பைசிக்கிள், டிராக்டர், மின் சுத்தியல், அரைக்கும் யந்திரம், மின் அடுப்பு யாவும் வந்தபோதும் பெண் ஆணுக்குத் தாழ்ந்தவளாகவே கருதப் படுகிறாள். உணவுப் பொருட்களை வாங்குவது, நெல் குத்துவது, இடிப்பது, அரைப்பது, சமைப்பது, பரிமாறுவது, வீட்டையும் சுற்றாடலையும் கூட்டிப் பெருக்கி சுத்தமாக்குவது, குழந்தைகளைக் கவனித்து, நீராட்டி உடுக்கச் செய்து பள்ளிக்கு அனுப்புவது, வயதானவர்களைக் கவனிப்பது, வீட்டு வளர்ப்புப் பிராணிகளைக் கவனிப்பது ஆகியவை சாதாரண பெண்ணின் அன்றாட வேலைச் சுமைகளாகும். இவற்றை விட பாட்டாளிப் பெண்கள் வெளியேயும் வேலைக்குச் செல்வார்கள். பாலிய லடிப்படையாக ஆண், பெண் என ஏற்பட்ட வேலைப் பிரிவு தொடர்ந்து வேறு பல அடக்குமுறைகளைத் திணிப்பதற்கும் வாய்ப்பேற் படுத்தியது.

கணவனுக்கும் குழந்தைகளுக்கும் செய்யும் சேவைகளை ஒதுக்கி விட்டுப் பார்க்கும்போதும் பெண்களது முழு உற்பத்தியும் ஆண்களதிலும் பார்க்க உயர்வானதாகவே இருக்கும். ஆயினும் இதற்குரிய பாராட்டு சமூகத்திலிருந்து பெண்ணுக்குக் கிடைக்கவில்லை; ஆண் ஆதிக்க சமூகம் இதை ஏற்கத் தயாராக இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



இன்றைய சமூக அமைப்பில் பிரதான உற்பத்தியாளரான அடிமைகள், கூலி ஏழை விவசாயிகளும் தொழிலாளரும் பெண்களுமே ஆவர். ஆயினும் எப்பொழுதும் பெண்கள் பொருளாதார முறையில் ஒடுக்கப்பட்டு, சமூக ரீதியில் கேவலப்படுத்தப்பட்டு, சிறுமைப்படுத்தப் படுகின்றனர். இவர்கள் உழைப்பின் மூலம் ஆண்கள், முதலாளிகள், உயர் சாதியினர் ஆதிக்கம் பெறுகின்றனர்; பெண்கள் உட்பட பாதிக்கப்படும் அடித்தட்டு மக்கள் சமூக அமைப்பில் மாற்றமோ, புரட்சியோ ஏற்படுத்த விடாது அவர்கள் தடுத்தும் விடுகின்றனர்.

வேறு பணிகள் பல ஆற்றிய பின்னரும் உலகிலுள்ள பெண்கள் (சிறு பகுதியினர் தவிர்த்து) தங்கள் நேரம்• சக்தியில் பெரும் பகுதியை உற்பத்தியைத் தொடர்ந்து இயக்க வேண்டிய உழைப்புச் சக்தியின் 'மறு உற்பத்தியை, (குழந்தைகளை) பெருக்குவதில் ஈடுபட்டுள்ளனர். குழந்தைக்கும் ஆணுக்கும் தொடர்பில்லை. இன்று பெண் ஊசி மூலமே கர்ப்பமடையலாம்.

இம் மறுஉற்பத்தியைப் பெண்களால் மட்டுமே ஆக்க முடிகிறது. பெண்கள் இம்மாபெரும் மறு உற்பத்தியில் ஈடுபடத் தவறினால் மனித சமுதாயமே மறைந்துவிடும். இவ்வுண்மையை ஆணுலகம் உணர மறுப்பதே இன்றைய உலகின் பெரிய விந்தை. அத்தோடு சமூகத்தின் பலமற்ற சிறுவர், முதியவர், நோயாளர், வளர்ப்பு மிருகங்கள் முதலியவற்றைக் கவனிக்கும் பொறுப்பும் பெண்களுடையதாகிறது. இவ் உழைப்பு யாவும் வீட்டுக்குள்ளே நடைபெறுகிறது.

இந்நவீன உலகிலும் பெண்கள் வீட்டுள் பயன்படுத்தப் பெரும்பாலும் பிற்போக்கான கருவிகளே வழங்கப்படுகின்றன. பெண்ணுக்கு வேண்டிய காஸ் அடுப்பு, அரைக்கும் மெஷின் போன்றவற்றிலும் பார்க்க கணவனின் மோட்டார் சயிக்கிள் முக்கியமாகிறது.

www.padippakam.com



பெண்களின் பொழுது யாவும் வீட்டுக்குள்ளேயுள்ள வேலைகளுடனேயே கழிகிறது. ஆண் வெளியே சென்று தன் நலன்கள், விருப்புகளைக் கவனிக்க முடிகிறது. பெண களுக்கு வெளியே செல்லத்தக்க வாய்ப்பு, நேரம் காலம், உரிமையே அரிது. தமக்காகப் போராட ஒய்வே இல்லாத வாறு தனித்தனியே வீடுகளுள்ளே பெண்ணினம் அடிமை உழைப்புக்குள் அடங்கிக் கிடக்கிறது.

குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பெண்ணின் மறுஉற்பத்தி சிக்கலானது. வீட்டுள் நடப்பது. நேரடியான உபரி இல்லாதது. ஆணின் உற்பத்தி சமூக உற்பத்தி. நேரடி யாக உபரி உற்பத்தி செய்வதால் அதிகக் கூலி கேட்டும் போராட முடிகிறது. தன் உழைப்பில் ஒரு பகுதியை வீட்டில் மனைவியிடம் வீசிவிட்டு ஆண்மகன் பல வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்கிறான். ஆண் ஆதிக்கத்தில் அவன் கையிலேயே உழைக்கும் பணம் கிடைக்கிறது. அவன் தய விலேயே பெண் வாழ்கிறாள். குடும்பம் வளர்ந்ததற்கியைய, பண வீக்கத்திற்கேற்ப கணவன் பணம் வழங்காதபோது மனைவியே செலவை, தன் விருப்புகளைக் குறைத்து வாழ வேண்டியுள்ளது. காரணம் எதுவுமல்ல. ஆண் எசமான்; பெண் வீட்டு அடிமை.

இதற்குமேலாக குடிப்பதிலும், சிகரெட், வீண் பொழுது போக்குகளிலும் தன் கூலிப் பணத்தை விரயம் செய்வதும் பெண்ணின் துன்பத்தையே அதிகரிக்கச் செய்கிறது.

# 25. பெண்ணடிமையும் உற்பத்தியும்

பண்டங்கள் அனைத்தும் மனிதர்கட்கு திருப்தி தருபவையே. ஆயினும் பயன்பாட்டு மதிப்பு மட்டும் கொண்ட பண்டங்கள், சேவைகள் நேரடியாக முதலாளித் துவத்திற்குப் பயன்படா. ஏனெனில் அவற்றில் உபரி

www.padippakam.com



மதிப்புக் கிடையாது. பரிமாற்று மதிப்புக் கொண்ட உற்பத்தி யிலேயே முதலாளித்துவம் ஈடுபட்டுள்ளது. அங்குதான் உபரி மதிப்பை அபகரித்து வளர முடிகிறது.

ஆண்கள் சமூக உற்பத்தியில், முதலாளித்துவத்தின் யந்திரங்களில் வேலை செய்வதால் அவர்களின் உபரி மதிப்புள்ள உற்பத்தி மூலம் முதலாளிகள் நலனடைகின்றனர். பெண்கள் வீட்டிலே உழைப்பது பயன்பாட்டு மதிப்பு மட்டும் கொண்டது. உரிய மதிப்பு இல்லாதது (பெண்களின் உபரி முதலாளிகளால் மறைமுகமாக அபகரிக்கப்படுவது பற்றி அத்: 2 -ல் ஆராய்ந்தோம்)

பெண்கள் விவசாயத்தில் ஈடுபடுவது, வீட்டில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பது, விறகு தேடுதல் ஆகியன உபரி மதிப்புத் தருபவையே. ஆயினும் அவை கணவனது பொருளா தார ஆதிக்கத்துடன் மறைந்து விடுகிறது.

மேலும் மனிதர் கரங்களாலும் மூளையாலும் மட்டும் உழைக்கவில்லை; உடலாலும் உழைக்கின்றனர்; இயற்கை யுடன் போராடி வெற்றி கொள்கின்றனர்; உணவு உடை இருப்பிடம் மட்டுமல்ல மேலும் தன் திருப்திக்கு வேண்டி உற்பத்திக் கருவிகளைக் கூர்மைப்படுத்துகிறான்; மேலும் ஆண் பெண் உடலுறவிலும் ஈடுபடுகிறான்.

பெண் கர்ப்பத்தை உடலில் சுமக்கிறாள். மார்பிலிருந்து பால் கொடுத்து குழந்தையை வளர்க்கிறாள். பின்னர் இக்குழந்தை வளர்ந்து உற்பத்தியில் ஈடுபடுகிறது. (பயிரை நாட்டி வளர்த்த பின்னரே பலன் தருகிறது.) பெண்களுடைய இத்தகைய பிரதான உழைப்பு பொருளாதார உற்பத்தி யாகக் கருதப்படுவதில்லை; தக்க கூலி தரப்படுவதில்லை. இதுவே பெரிய விந்தை.

மூன்றாம் உலக நாடுகளில் சமூக உற்பத்தியில் ஈடு படும் பெண்களுக்கு மூன்று மாத ஓய்வும் அரசு மருத்துவ மனையில் பிரசவச் செலவும் கவனிக்கப்படுகிறது. முதலாளித் துவ நாடுகளில் மேலும் சில வாய்ப்புகள் வழங்கப்படுகின்

www.padippakam.com



றன. இவை பெண்களின் உழைப்பிற்கு ஏற்றதாக இன்றும் வழங்கப்படுவதில்லை. ஆயினும் பெண்ணின் மனித இன உற்பத்தி பரிமாற்ற மதிப்புடையது என்பது முறைமுகமாக உணரப்படுகிறது.

புராதன, நிலப்பிரத்துவ காலங்களில் மனித இன உற்பத்தி இயற்கையின் நிகழ்வாகவே கருதப்பட்டது. பெண் அடிமையாக குழந்தைகளைப் பெற்று தானே வளர்த்து வந்தாள். இயற்கையில் கிடைக்கக்கூடிய காய், கனி, காளான், பருப்புகள், கிழங்கு ஆகியவற்றைத் தேடிக் குழந்தைகளைப் பெண்கள் வளர்த்தது மட்டுமல்ல கணக் குழுவிலுள்ள ஆண்களுக்கும் வழங்கி வந்தனர். பயிர்த் தொழிலிலும் பெண்களே ஆதியில் ஈடுபட்டிருந்தனர். நிலத்தைக் கிண்டும் கடப்பாரை அவர்களது கருவி என அண்மைய மானிடவியல் ஆய்வாளர் கூறுகின்றனர். பெண் களின் உபரியில் வாழ்ந்த ஆணினம் அம்புவில்லான கருவியை ஆக்கினர். ஆண்களின் அம்பு வில்லுக் கருவி களும் வேட்டையாடலும் நிரந்தர உணவு வழங்கவில்லை எனவும் இக்கருவிகள் பிறரை இவ்ஆயுத பலமூலம் அடிமைப் படுத்தவே பயன்பட்டன என்றும் ஆய்வாளர் கூறுகின்றனர். மேலும், பிறகுடிப் பெண்களை அடிமைப்படுத்துவதிலே வேட்டைக்காரர் அதிக கவனம் செலுத்தி பெண்ணடிமைச் சமூகத்தை இன்று வரை ஆயுதபலத்தால் அடிமைப்படுத்தி வைத்துள்ளனர் எனவும் நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவம் எனக்கூறப்படும் வர்க்க சமூக அமைப்புகளும் ஆணாதிக்க, பலாத்கார அமைப்புகளாக உள்ளன எனவும் பெண் ணடிமைக்கு விளக்கம் கூறுகின்றனர். வேட்டைக்காரனின் அம்பும் வில்லும் இன்று நவீன பலாத்கார வடிவங்களாக, அரசு அமைப்பாக மாறி உள்ளன என்பர்.

சோஷலிசத்திலும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி ஆண்களின் ஆதிக்கத்தில் இருக்கும்வரை பெண்ணடிமை தீராது என்பதும் உண்மையே. தம் உடல் மூலம் மனித

www.padippakam.com



இன மறு உற்பத்தி செய்யமுடியும் என்ற அனுபவ உணர்வு பெண்களுக்கு மட்டுமே உண்டு. எத்தனை நெருக்கடியிலும் பெண்கள் கர்ப்பத்தைக் கட்டுப்படுத்தும் வழிகளையும் கர்ப்பத்தை கலைக்கும் முறைகளையும் நீண்டகாலமாகவே அறிந்திருந்தனர். காலப் போக்கில் இது பாவமாகவும் சட்டத்தால் தண்டிக்கக் கூடியதாகவும் மதங்களாலும் அரசுகளாலும் விதிகள் ஏற்படுத்தப்பட்டன. உற்பத்தி உடலுழைப்பை மையப்படுத்தியிருந்ததால் நிலப் பிரபுக்கள் அதிக அடிமைகளைப் பெறும்படி பெண்களை வற்புறுத்தினர். ஆண்கள் பல பெண்களை மணக்கவும் அனுமதித்தனர். ஆண்களிலும் பார்க்க பெண் அடிமைகளிகளிலேயே அதிக கவனம் செலுத்தினர். ஒரே காளையால் பல பசுக்களைச் சினைப்படுத்த முடியும் என்ற நடைமுறை அனுபவத்தையும் ஆதிக்கத்திலுள்ளவர் அறிந்திருந்தனர்.

மனித இனம் உயிர் வாழ்வது மட்டுமல்ல; மனித இனத்தைப் பெண்கள் மறு உற்பத்தி செய்கின்றனர். இதை உற்பத்தியாகக் கொள்ளத் தயங்குகின்றனர். குழந்தை பெறுதல் என்பது பிற உயிரினம், தாவரங்கள் இனவிருத்தி செய்வது போலக் கருதுகின்றனர். இயற்கையின்மேல் ஆதிக்கம். கட்டுப்பாடு கொள்வது போலப் பெண்களையும் இயற்கையின் ஓர் அம்சமாக ஆண்கள் எண்ணத் தலைப்படுகின்றனர் இதுவே இன்றைய உலக விசித்திரமாகும்.

தாயின் பராமரிப்பில் வளர்ந்த குழந்தைகள் அவர்களோடு உணவு சேகரிப்பதில் ஈடுபட்டனர். இலை, நார், மரப்பட்டை ஆகியவற்றால் முதலில் கூடை செய்தவர்களும் பெண்களே, உணவைத் தேடிச் சேகரிக்க இவை தேவைப்பட்டன. குழந்தைகளுடன் தாய்மாரே ஆதியில் சிறு சமூக அமைப்பை ஏற்படுத்தினர் என சமூகவியல் ஆய்வாளர் கூறுகின்றனர்.

www.padippakam.com



பழங்குடி மரபில் வாழும் பல ஆபிரிக்க சமூகங்களிடை பெண்களே உற்பத்தித்திறன் உடையவராகக் கருதப் படுகின்றனர். பெண்களே அடிமைகளாக விற்கப்படு கின்றனர். ஆண்கள் வேட்டையாடிப் பொழுது போக்கு கின்றனர்; இரண்டு மூன்று பெண்களை மனைவியராக்கி பயிர்த் தொழிலில் ஈடுபடச் செய்து அதிக குழந்தைகளையும் பெற்றெடுக்கச் செய்கின்றனர்.

முதலாளித்துவத்தில் யந்திர உற்பத்தி சமூக உற்பத்தியை எளிமை யாக்கியதால் பேரலும் ஆண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்டு பெண்களை கடுமையான குடும்ப உற்பத்திக்கு ஒதுக்கிவிட்டனர். மதமும் மதம் சார்ந்த அரசும் இதற்குத்துணை நின்றன. ஐரோப்பாவில் தாதி, மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களை பேய்கள், சூனியக்காரர் எனக் கூறி கத்தோலிக்க மதம் ஒழித்துக் கட்டியது. 'ஜோன் ஒப் ஆர்க்' என்ற பிரெஞ்சுப் பெண் சூனியக்காரி என எரிக்கப்பட்டதை வரலாறு அறியும்.

# 26. குடும்பத்தின் தோற்றம். வளர்ச்சி, எதிர்காலம்

மார்க்ஸ் விட்டுச் சென்ற ஒரு பணியை முடிக்கும் வகையிலேயே ஏங்கெல்ஸ் 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலை எழுதினார். மார்க்சும் ஏங்கெல்சும் மார்க்கன் என்ற அமெரிக்கரின் ஆராய்ச்சியின் முடிவுகளை பொருள்முதல் வாத அடிப் படையில் எழுதப்படவேண்டும் என எண்ணியிருந்தனர்.

www.padippakam.com



மார்க்சின் மறைவின் பின்னர் 1884ல் ஏங்கெல்ஸ் இவ்வரிய நூலை எழுதி வெளியிட்டார். குடும்ப அமைப்புகள் வளர்ந்து வந்த வரலாறு பற்றி விவரமாக அறிய விரும்புபவர்கள் இந்நூலை ஆழ்ந்து படிக்கவேண்டும்.

மனித இனத்தின் வளர்ச்சி நிலையையும் குடும்ப அமைப்பையும் மூன்று நிலைகளாக மார்க்கன் கூறியபடி வகுத்துப் பார்க்கலாம்.

(அ) காட்டுமிராண்டி நிலை : இயற்கைப் பொருட்களைப் பெரும்பாலும் உபயோகித்து மனித இனம் வாழ்ந்த நிலை. பழங்கள், கொட்டைகள், கிழங்குகளுடன் ஆரம்பித்து மீன்பிடித்து, நெருப்பைப் பயன்படுத்தி கற்கோடரிகள் செய்து பின் வில்லும் அம்பும் கண்டுபிடித்து மிருகங்களை வேட்டையாடி உண்ணத்தொடங்கிய நீண்ட வரலாற்றுக் காலம். வேட்டைக்காரனின் கருவிகளின் ஆதிக்கம் பற்றி முன் அத்தியாயத்தில் கண்டோம்.

இக்கால கட்டத்தில் மனித இனம் இரத்த உறவுக் குடும்பமாக வாழ்ந்து வந்தது. பாலுறவில் எவ்வித கட்டுப் பாடுமில்லை. கூட்டாக உற்பத்தியில் ஈடுபட்டு கூட்டாக வாழ்ந்தனர், பொறாமை என்பதே தோன்றாத சமூக நிலை. தந்தையென எக்குழந்தைக்கும் எவரும் உரிமை கோர முடியாது. தாய் வழிச் சமூகமாக பெண் உயர்வு பெற்றிருந்தாள்.

(ஆ) நாகரிக நிலை : மட்பாண்டங்கள் செய்வதிலி ருந்து ஆரம்பித்து மிருகங்களைப் பழக்கி வளர்ப்பதோடு உணவுக்கு வேண்டிய பயிர்களையும் மனிதன் பயிரிடுகிறான். குடிசைகள் கட்டி நிலை பெற்று வாழத் தொடங்குகிறான். இறுதியில் செம்புக் கருவிகளின் பின் இரும்பு உலோகத்தைக் கண்டுபிடித்து கலப்பைகள் இரும்புக் கோடரிகள் செய்கிறான் மாடுகளை ஏரில் பூட்டி உழுது உற்பத்தியைப் பெருக்கு கிறான். இம் மாறுபட்ட வளர்ச்சி நிலை புதிய சமூக உறவு களை ஏற்படுத்துகிறது.

இணைக் குடும்ப முறையான சமூகம் ஏற்படுகிறது. இங்கு பாலுறவில் கட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன. இரத்த உறவான சகோதர சகோதரியர், பெற்றார் பிள்ளைகளிடை பாலுறவு தவிர்க்கப்படுகிறது. ஒரே பரம்பரைக்குள்ளேயே பாலுறவு என்பது போன்ற இரத்த உறவுகளுக்கும் விலக்குகள் ஏற்படுகின்றன. இணைக் குடும்பம் (ஆண் பெண் சோடி) திடீரெனத் தோன்றி விடவில்லை. ஆண் பலரோடு பாலுறவு கொண்ட போதும் அவனுக்குப் பிடித்தவளாக ஒருத்தி இருந்தாள். அதே போல பெண்ணுக்குரிய பல கணவரில் ஒருவன் பிரதானமாக அவளுக்குப் பிடித்திருந்தான். இந்நிலை காலப் போக்கில் ஆணுக்குப் பிடித்த ஒரு மனைவியாகிறாள். ஆயினும் பலதார மணமுறை ஆணுக்கு மட்டும் உரிமையாகிறது. ஆயினும் தன் குழந்தைகளோடு குடும்பத்தை விட்டு வெளியேற பெண் அங்கு உரிமை பெற்றிருந்தாள். ஏனெனில் தனிச் சொத்துரிமை இன்னும் தோன்றவில்லை.

வேலைப் பிரிவினையில் ஆண்கள் போருக்குச் சென்றனர்; உணவு தானியங்களை உற்பத்தி செய்து உற்பத்திக் கருவிகளைப் பேணினர். பெண்கள் வீட்டைப் பார்த்து, உணவு தயாரித்து, உடை தைத்தனர். அவரவர் அவ்வத் துறைகளில் திறமையாகச் செயலாற்றி தத்தம் கருவிகளையும் தாமே பேணினர். ஆயினும் ஆணின் பயிர் உற்பத்தி வளர்ச்சியடைய அவன் உணவு உற்பத்தியைப் பெருக்குகிறான். உற்பத்திக் கருவியில் அவன் முதன்மை பெற்றான். ஆயினும் குடும்ப வழக்கப்படி சொத்துகள் தாய் வழியாக, இன உறவின் வழியாகவே சென்றன. பெண்ணடிமை ஆரம்பிக்க மேலும் காலம் இருந்தது.

ஆயினும் முன் குறிப்பிட்ட வேலைப் பிரிவினையே பெண்ணடிமைக்கு வித்திட்டது. மனித இனத்தின் முதல் அடிமை நிலை பெண்ணடிமையுடனேயே தோன்றியது என்பதை நாம் மறந்துவிடப்படாது.

www.padippakam.com



**(இ) நாகரிக காலம் :** மேலும் உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைந்து உற்பத்தி பெருகும் காலம். இரும்பை உருக்கி பலமான உற்பத்திக் கருவிகளைச் செய்யும் அறிவு பெற்ற காலம். கலைகள் பற்றியும் அறிவு பெறப்பட்ட நிலை.

நிலம், கால் நடைகள் உற்பத்திக் கருவிகள் ஆணின் தனிச் சொத்தாகின. அவன் தன் செல்வத்தையும் சொத்து களையும் தன் பிள்ளைகளுக்கு வழங்க முனைந்தான். தாயுரிமையை தூக்கியெறிந்து ஒரு தாரக் குடும்பத்தை அமைத்தான். தனிப் பொருளாதாரக் கூறாக குடும்பம் அமைந்தது. ஆண் வீட்டின் ஆதிக்கத்தைப் பெற்றான். ''பெண்ணினம் கீழே தள்ளப்பட்டது. ஆணின் அடிமையான காமக் கிழத்தியாகவும் பிள்ளைகள் பெறும் கருவியாகவும் பெண் தள்ளப்பட்டாள்'' என, பெண்ணினம் வரலாற்று ரீதி யில் தாயுரிமை இழந்து தோல்வி பெற்றதைப் பற்றி ஏங்கெல்ஸ் கூறுகிறார்.

''குடும்பம் என்பது விலங்கு அடிமை நிலையை மட்டு மல்ல நிலவுடைமையின் அடிமைத் தனத்தையும் உள்ளடக் கியது. அத்தோடு சமூகத்திலும் அரசியலிலும் பின்னர் ஏற் படப் போகும் பகைமை அனைத்தையும் உள்ளடக்கிய சிறு வடிவம் குடும்பமே'' என மார்க்ஸ் விவரித்துள்ளார்.

''ஒரு தார மணமுறை என்பது ஆண்-பெண்களிடை ஏற் படும் சமரசமல்ல. ஆண் பாலார் பெண் பாலாரை அடக்கி ஒடுக்குவதற்கான பிரகடனம், பால் வேறு பாடான இம் முரண்பாடு ஏடறியா, வரலாற்றுக் காலத்திலிருந்து என்றும் எவராலும் அறியப்படாதது'' என ஏங்கெல்ஸ் கூறுகிறார்.

சமூகச் சொத்தாக இருந்த நிலை மாறி தனிச் சொத் துடைமைச் சமூக அமைப்பு மாறியதை யொட்டி, பின் வரும் சமூக மாற்றங்கள் ஏற்பட்டன: 1) குலக்குடிக்குழு முறையி லிருந்து தனிக் குடும்பத்தின் தோற்றம். கூட்டாக வாழ்ந்த

பெ—10

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் குடும்பங்களாகப் பிரியத் தொடங்கினர். நிலக்கிழாராகவும் குடி மக்களாகவும் குடும்பங்கள் அமையத் தொடங்கின. 2) தனித் தனிக் குடும்பமான அமைப்புகள். 3) பெண்ணின் சமூகத் தேவையான உழைப்பு தனிச் சேவையானது. 4) ஒரு தார மணமுறை மூலம் தனிச் சொத்து தனி மனிதரால் பரம்பரையாக கொண்டு செல்ல முடிந்தது. 5) சிலருக்கு சொத்துரிமை என்பது பலர் சொத்தற்றவராக நேரிட்டது.

'அரசு தோன்றியது நாகரிகம் தோன்றியது' என்பர், முதலாளித்துவ சமூக வியலாளர். அரசு தனிச் சொத்துரிமையையும் ஒரு தார மணமுறையையும் வலியுறுத்தியது. சொத்துரிமையை பரம்பரை பரம்பரையாக எடுத்துச் செல்வதற்கு ஒரு தார மணமுறை வாய்ப்பளித்தது. ஆகவே காதல் பிரச்சாரத்தை புலவர்கள் ஆரம்பித்தனர். நிலப் பிரபுத்துவமும் முதலாளித்துவமும் தனிச் சொத்துடைமையையும் ஒரு தார மணமுறையையும் வலியுறுத்தின. இதன் மூலம் பெண்ணடிமையையும் நிலை நாட்ட முயன்றன. இவை பற்றி முன்னைய அத்தியாயங்களிலும் கண்டோம்.

சமூக உற்பத்திலிருந்து ஒதுக்கப்பட்டமையும் தனி உற்பத்தி அல்லது குடும்ப உற்பத்திக்குத் தள்ளப்பட்டதுமே பெண்ணினத்தின் வீழ்ச்சிக்கும் தனிச் சொத்துடைமைக் குடும்பத்திற்கும் அதை ஒட்டி ஒரு தார மணமுறைக்கும் பெண் தள்ளப்பட்டாள் என்பதைக் கண்டோம்.

முதலாளித்துவத்தில் ஒரு பகுதிப் பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் கூலி பெறமுடியாத தனி உற்பத்தியான குடும்ப உற்பத்தியிலிருந்து அவள் விடுதலை பெற முடியாத அடிமை நிலையிலேயே உள்ளாள். கூலி பெற முடியாத உழைப்பையே நாம் அடிமை நிலை என்கிறோம். பெண்களையும் ஆடு, மாடு முதலிய விலங்குகள் போல இயற்கையோடு சேர்ந்ததாக எண்ணிக் கொள்வது.

www.padippakam.com



சோஷலிச சமுதாயம் ஒன்றே பெண்ணின் விடுதலைக்கு வழி காட்டுகிறது. அங்கு பெண்கள் அனைவரும் சமூக உற்பத்தியில் ஈடுபடுவர். தனிச் சொத்துடைமை அழிந்து விடும். ஆனால், இன்று சோஷலிச நாடுகள் என்று கூறப் படும் நாடுகளில் பெண் முழு விடுதலை பெற்றதாகக் கூறுவதற்கில்லை; பெண்கள் சரி சமனாக அரசியல் பொருளாதார சமூக ஆட்சியில் இருப்பதாகக் கூறுவதற் கில்லை. தனிக் குடும்ப அமைப்புகள் அங்கும் பேணப்படு கின்றன. காரணம் இன்றும் ஆணாதிக்கம் மேல்மட்ட அமைப்பாக, சிந்தனை பூர்வமாக அங்கு நிலை பெற்றிருப் பதேயாகும்.

பொருளாதாரம் என்ற அடிப்படை அமைப்பு மாறியதும் மேல் மட்ட அமைப்புகள் மாறிவிடும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இவை கருத்தியலானவை; சிந்தனை பூர்வமானவை, எளிதில் மாறக் கூடியவையல்ல.

இந்நிலையில் இன்றைய குடும்ப அமைப்பின் எதிர் காலம் என்ன?

குடும்ப அமைப்பு பரிசுத்தமான சமூக வடிவம், நாகரிக மான அமைப்பு என, பெண் இங்கே அடிமையாக இருப் பதை அறியாத, உணராத (ஆண்) அறிஞர்கள் கூறுவர்.

இன்றைய இந்நாகரிக் குடும்ப முறையை அமைத்தவர் எவர்? பெண்களா? அல்ல. ஆண்களே; ஆண் ஆதிக்கத்தை சமூக உற்பத்தி மூலம் ஆக்கிரமித்துக் கொண்டவர்களே.

பெண் சோஷலிசப் புரட்சி மூலம் ஆண்கள் போலவே சமூக உற்பத்தியில் முழுமையாக ஈடுபடும் வாய்ப்புப் பெறு கிறாள், அதற்கும் மேலாக மனித இன மறு உற்பத்தியில் ஈடுபடக் கூடியவள் பெண் மட்டுமே. [ஆண் கர்ப்பத்தை விரும்பினும் அவளால் கருச்சிதைவு செய்ய முடியும்]. இத் தனிச் சிறப்பால் அவளே ஆண்களிலும் பார்க்க உயர்ந்த நிலையில் உள்ளாள்.

www.padippakam.com



பெண்ணினம் முழு விடுதலை பெற்றதும் இன்று நிலவும் ஆணாதிக்க குடும்ப அமைப்பை நிட்சயமாக உடைத்தெறியவே செய்வாள்; ஆண் வர்க்க நலனுக்காக ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே இன்றைய குடும்பம் என்பதை அறியவே செய்வாள்.

பெண்ணினம் இன்றைய குடும்ப அமைப்பை உடைப்பதன் மூலம் ஒரு தார மணமுறையையும் உடைத்தெறியவே செய்வாள். ''வரலாற்றில் ஏற்பட்ட முதல் தரமான பகைமை ஒரு தார மண முறையில் ஆண் பெண்ணிடை ஏற்பட்ட பகைமையுடன் ஒன்றுகிறது. முதல் தரமான ஒடுக்கு முறையும் பெண்பாலர்மேல் ஆண் காட்டுவதே' என மார்க்ஸ் கூறியுள்ளார்.

பெண்ணினம் அமைக்கப்போகும் புதிய சமூக அமைப்பு பெண்ணாதிக்கம் கொண்டதாகவும் அமையலாம். மீண்டும் ஆண்—பெண் என்ற வர்க்கப் போராட்டம் அங்கு ஏற்படலாம். முரண்பாடுகளும் போராட்டங்களும் சமூகத்தில் நிரந்தரமானவை. ஆயினும் இங்கு ஆணினத்தின் எதிர்காலம் பெண்ணினத்தின் கருவிலேயே உள்ளது என்பதை நாம் மறந்துவிட முடியாது. விஞ்ஞான முறையில் அறிந்து ஆணினத்தை அவர்கள் கருச்சிதைவும் செய்து விடலாம்! பிராய்டின் உளவியற் கோட்பாடு ஒன்றுதான் ஆணினத்திற்கு நம்பிக்கையூட்டுவதாக எஞ்சி நிற்கிறது!

பெண்ணினம் அடிமைப்பட்ட காலத்தை ஏறக்குறைய 4000 ஆண்டுகள் என வர்க்க சமுதாயம், தனிச் சொத்துடைமையும் தோன்றியதுடன் இணைத்து மதிப்பிடலாம். மற்றொரு 200 அல்லது 300 ஆண்டுகளில் பெண்ணினம் உறுதியாக அடிமை நிலையிலிருந்து முற்றாக விடுதலை பெற்று விடும். மேலும் 1000 ஆண்டுகளின் பின் அமையப் போகும் சமூக அமைப்பைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

www.padippakam.com



மனித இன மறு உற்பத்தி விடுதலை பெற்ற பெண்ணினத்தின் ஆதிக்கத்திலேஉள்ளது; அவர்களது அறியாமையி லல்ல. சமூக உற்பத்தியைத் தீர்மானிக்கப் போகிறவர் களும் அவர்களே. சமூக உற்பத்தி, மனித இன மறு உற்பத் தியிலும் ஈடுபடக்கூடியவர் பெண்களே என்பதை ஆணினம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். விஞ்ஞான உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை எவரும் மறந்து விடப்படாது.

நிலப்பிரபுத்துவத்தையும் பெண்ணடிமையையும் முன் வைத்தே மல்தூசியன் உலகக்குடித்தொகைப் பெருக்கம், அதன் அழிவு பற்றி பிற்போக்காக எழுதினான். பெண்களின் விடுதலை, திட்டமிட்ட சமூக அமைப்பு, கர்ப்பத்தைக் கட்டுப்படுத்தும் விஞ்ஞான வளர்ச்சி பற்றி அவன் எண்ணிப் பார்க்கவில்லை. பெண்ணினத்தின் விடுதலையோடு உலக குடித்தொகையின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும் என்பது உறுதி. சென்ற ஒரு தலைமுறையில் மட்டும் உலகச் சராசரியாக குடும்பத்தின் அளவு 6ல் இருந்து 4 ஆகக் குறைந்துள்ளது என ஐ.நா.சபை அறிக்கை கூறுகிறது. உலகின் குடித்தொகை மிக்க சீனா, இந்தியா போன்ற நாடு களில் கருத்தடைச் சாதனங்கள், குடும்பக் கட்டுப்பாடுகள் வேகமாகப் பரவி வருவதை உலகு அறியும். பல நாடுகளில் குடித்தொகை வளராது வீழ்ச்சியடைந்து வருகிறது.

# 27. பெண்ணடிமை தீர

பெண் உடலாலும் மனத்தாலும் ஆணுக்கு இளைத்தவள் என்ற கருத்து முற்றிலும் தவறானது.

பெண்ணினத்தால் மட்டுமே மனித இன மறு உற்பத்தி யிலும் சமூக உற்பத்தியிலும் ஈடுபட முடியும் இதனால் பெண் ஆணினத்திலும் உயர்ந்தவள்.

www.padippakam.com



மாதந்தோறும் ஏற்படும் மாத விலக்கு, குழந்தையை, அடிமை வேலைகளுடன் தன் சதையும் இரத்தமும் கொண்டு வயிற்றில் சுமந்து வளர்த்து பெற்றுப் பாலூட்டி வளர்ப்பவள்; பெண் கர்ப்பம் சுமந்து குழந்தை பெற்று வளர்க்கும் பொறுப்பை விஞ்ஞான வளர்ச்சி மூலமும் சட்ட மூலமும் ஆண்கள் வயிற்றில் திணிப்பின் ஆண்களிற் பெரும்பாலானோர் தற்கொலை செய்தும் விடலாம்! வெளியே ஆண்களோடு உழைப்பது தவிர வீட்டிலும் சமையல், வீட்டைப் பார்த்தல், குழந்தை வளர்த்தல், தண்ணீர் எடுத்தல், துணி துவைத்தல், துணி தைத்தல், முதியவர்களைக் கவனித்தல், கணவனுக்குப் பணி விடை செய்தல் போன்ற விரக்தி தரும் தரம் குறைந்த வேலைகளை 365 நாட்களும், வாழ்நாள் பூராவும் பெண்கள் செய்ய வேண்டியுள்ளது. இவ்வேலைகளுக்கு சனி ஞாயிறு என ஓய்வே கிடையாது. இதே நாட்களில் வேலைகள் அதிகரிக்கலாம். ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவில் கூட பெண்கள் சராசரியாக நாள்தோறும் 16 மணி நேரம் உழைக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆகவே பெண்களே ஆண்களிலும் பார்க்க அதிகமாக உழைக்கின்றனர். அதிகம் உழைப்பவர்களே அதிகமாகச் சுரண்டப்படும் சமூக அமைப்பு இன்று நிலவுகிறது.

ஆண்கள் மட்டுமே கடுமையான வேலைகளைச் செய்யக் கூடியவர்கள் என்பதும் தவறு. பெரும்பாலான ஆண்கள் செய்யும் வேலைகளை பெண்களாலும் செய்ய முடியும் ஆண்களின் சமூகத்தில் ஒரு பகுதியினர் மட்டுமே கடின வேலை செய்யத் தக்கவராக உள்ளனர். பெண்களிலும் அதே சத விகிதத்தினருக் கதிகமாகவே அத்தகைய கடின உழைப்பில் ஈடுபட முடியும்; இன்றும் ஈடுபட்டுள்ளனர்.

இது தவிர கடின வேலைகளை, யந்திரங்களின் உதவியுடன் செய்யக்கூடிய காலத்திற்கும் நாம் வந்து விட்டோம். பெண்கள் தக்க உணவின்றி வளர்வதாலும் ஆண்கள்

www.padippakam.com



போல் தக்க புஜ வலிமையின்றி வளரவும் நேரிடுகிறது. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு என 'சிலிம்' பண்ணி அழகைப் பேணுவதற்காகவும் உடல் வலிமை குன்றி வளர நேரிடுகிறது.

இவ்வாய்வில் சராசரியாக அடிமை நிலையில் உழைக்கும் பெண்களை மட்டுமே எடுத்துக் கொண்டேன். அவர்களே சமூகத்தின் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பெண்கள். கூலி பெறாத தனி உழைப்பு, குடும்ப உழைப்பே அடிமை நிலையைக் கொண்டு வந்தது என்பதை நாம் மறந்து விடப்படாது.

வாய்ப்பாக வாழும் மிகச் சிறுபான்மையினரான இருவகைப் பெண்கள் இவ் ஆய்வில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. இவர்களும் தம் அடிமை நிலையை உணர்வதில்லை. அது தவிர பெண்ணினத்தின் கருங்காலிகளாகவும் உள்ளவர் இவரே.

வாய்ப்பான சம்பளம் பெற்று உயர் பதவிகளில் இருந்து, கார் பங்களாவுடன் வாழ்ந்து, தொழிலாளர் இயக்கங்களுக்கு எதிராகச் செயலாற்றும் கருங்காலிகள் சமூகத்திலில்லையா? இவர்களும் தாம் கூலி அடிமைகள் என்பதை மறந்து விடுகின்றனர்

உயர்கல்வி கற்று, உயர் பதவிகளில் நுழைந்து அரசு யந்திரத்தோடு இணைந்து வாய்ப்பாக வாழும் மிகச் சிறு பான்மையான பெண்கள் கருங்காலிகளில் ஒருவகை. பணக்காரக் குடும்பங்களில் வீட்டு வேலைகளைக் கூலி வேலையாட்கள் கவனிக்க, தம்மை அலங்கரித்து கார்களில் சுற்றி, ஒட்டல்களிலும் கிளப்புகளிலும் தம் பொழுதைக் கழிக்கும் பெண்கள் இரண்டாவது வகை.

இவர்கள் பற்றி முன்னரும் கூறியுள்ளேன். இவர்களை ஒதுக்கிவிட்டே அடிமைப்பட்டிருக்கும் பெண்ணினத்தைப் பார்க்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



எழுதப்படிக்கத் தெரியாத பெண்கள் இன்றும் உலகில் 60 சதவீதம் உள்ளனர் (ஆண்களில் 40 சதவீதம்) என ஐ.நா.சபையின் 1985-ம் ஆண்டு அறிக்கை கூறுகிறது. வாய்ப்புப் பெற்ற சிறுபான்மைப் பெண்கள் தாமும் அடிமை நிலையில் உள்ளோம் என்பதை அறியாதிருப்பதே வேதனைக்குரியதாகும். இன்று நலிந்த நிலையிலுள்ள பாட்டாளிப் பெண்களே இவர்களுக்கும் ஒரு காலத்தில் விடுதலை தேடித்தரப் போகின்றனர் என்பதையும் இவர்கள் அறியார்.

பெண்கள் கொடி போன்றவர். மான் போன்ற வெருட்சியுடைவர்; மெல்லியலார், அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு என்ற நாற்படையுமே அவர்கள் சிறப்பு எனக் கூறி இயற்கை உடலமைப்பிலும் உணர்விலும் வேற்றுமை காட்டி, அவர்களது உணர்வுகளையும் ஆண்கள் அபகரிக்கின்றனர்.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆண் புலவர்களால் பெண்களை அடிமையாக்குவதற்காக வகுக்கப்பட்ட இலக்கணங்களே மேற்கூறிய நாற்படை. பாரதி பாடினான்:

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்."

வீரம், வலிமை, போர்க்குணம், உண்மைப்பற்று, அநீதியை எதிர்த்தல் ஆண்மைப் பண்பு எனவும் அன்பு, பாசம், ஈவு, இரக்கம், மன்னித்தல் பெண்மைப் பண்பு எனவும்கூறி நிலப்பிரபுத்துவ கருத்துகளைச் சிலர் நிலை நாட்டப் பார்க்கின்றனர். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ ஆண், பெண்களிடமும் இப்பண்புகள் உள்ளனவா? இரு துறைப்பண்புகளும் உழைக்கும் வர்க்கம் சார்ந்த பெண்களிடமும் ஆண்களிடமும் உள்ளன. நிலப்பிரபுத்துவத்தில் பிரபுக்களும் முதலாளித்துவத்தில் முதலாளிகளுமே இப்பண்புகளைக் கொண்டவர் எனக் கூறுவர். வர்க்கச் சமுதாயம் நிலவும் வரை இவ்வாறு ஆண் பெண் பண்பு

படிப்பகம்

www.padippakam.com



எனக் கூறுவது கற்பனாவாதம். சோஷலிச, கம்யூனிச சமுதாயங்களில் இருபாலரும் இப்பண்புகள் அனைத்தையும் பெறுவர்.

நாலாயிரம் ஆண்டுகளாக வர்க்க சமுதாயத்தில் அகப் பட்ட பெண்ணினம் இன்றும் விடுதலை பெற முடியா நிலை யில், ஆணாதிக்க சமூக அமைப்பை உடைத்தெறிய முடியா நிலையில் உள்ளது. முதலாளித்துவத்தாலும் பெண்ணினது. அடிமைத்தளையை அறுக்க முடியவில்லை. ஆயினும் பெண் விரைவில் விலங்குகளை உடைக்கவே போகிறாள். பாரதி கூறினான்.

''நிமிர்ந்த நன் நடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யாவர்க்கும் அஞ்சா நெறிகளும்
விலகி வீட்டிலோர் பொந்தில் வாழ்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்''

அரசியலில் பெண்கள் நுழைய வாய்ப்புகளின்றி வீடுகளுக்குள் வாழநேரிடுகிறது. இந்நிலை நீடிக்கப் போவ தில்லை.

பெண்கள் வீடுகளில் உழைப்பதற்குக் கூலி தரப்படு வதில்லை; (இதனால் பெண்களின் உழைப்புச் சக்தியின் உணர்வு நிலையில் வளர்ச்சி இல்லாது போகிறது) அதே வேலைகளை ஆண்கள் வெளியே செய்யின் கூலி கிடைக் கிறது என்பதை முன்னரும் கண்டோம். பெண் வீட்டில் உழைப்பதற்குரிய கூலி கணவனது கூலியோடு முதலாளி வர்க்கத்தால் தரப்பட வேண்டியது. ஆனால் முதலாளிகள் பெண்களின் உழைப்புக்கு தர வேண்டிய கூலியை அத்து மீறிய உபரிச்சுரண்டலாக அபகரித்துக் கொள்கின்றனர். இதனாலேயே முதலாளிகளால் அமைக்கப்பட்ட அரசு யந்திரமும் இன்று நிலவும் குடும்பம் என்ற அமைப்பை வலியுறுத்துகிறது.

ஆகவே, கணவனுடன் மட்டும் போராடி பெண்ணுக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை. இப்போராட்டம்

www.padippakam.com



மறைமுகமாக எல்லாக் குடும்பங்களிலும் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது என்பதை முன்னர் விரிவாகக் கூறியுள்ளேன்.

பெண் கணவனுடன் இணைந்து, அவனையும் ஊக்கி இன்றைய சமூக அமைப்பை முதலில் உடைத்தெறியப் போராடவேண்டும். பாட்டாளிகளால் மட்டுமே இப்போராட்டத்தை நடத்தி வெற்றி பெறச் செய்ய முடியும்.

இப்போராட்டம் வெற்றி பெற்ற பின்னர் ஏற்படும் சோஷலிச சமூகத்திலும் ஆணின் சிந்தனையில் படிந்திருந்த ஆணாதிக்க கருத்தியல் பெண்ணை அடிமைப்படுத்த முயலும்.

ஆயினும் இப்புதிய சமூக அமைப்பில் பெண்களுக்கு அரசியல், பொருளாதார, சமூக சுதந்திரம் அனைத்தும் கிடைக்கும். சமூக உற்பத்தியில் முழுமையாக அவர்களால் ஈடுபட முடியும். குடும்பம் என்ற அமைப்புள் நுழையும் போதே ஆண் தன் ஆதிக்கத்தைக் காட்ட முடியும். இத்தகைய நிலையில் பெண் தான் விரும்பிய வேளை வெளியேறி சோஷலிச சமூகத்தில் தனியாக வாழ இயலும். சீனாவில் விவாகரத்துகள் எளிமையாக வழங்கப்படுகின்றன.

சீனா போன்ற சோஷலிச சமூக அமைப்பில், கம்யூன்களில், பெண்களுடைய வேலைப்பளு பெரும்பாலும் குறைந்துவிட்டது. கம்யூன்களில் விரும்பிய உணவு மலிவு விலையில் கிடைக்கும். ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு மூட்டி எரிப்பது வேலைப்பளு மட்டுமல்ல, சிக்கனமானதுமல்ல. துணி துவைப்பதைக் கூட கம்யூன் யந்திரலாண்டரி கவனிக்கும். தனி வீடாயின் வீட்டைப் பார்க்கும் பொறுப்பு ஆணுக்கும் இருக்கும். பிற வேலைப் பளு குறைந்ததால் பெண்களுக்கும் ஓய்வு அதிகம் கிடைக்கும். இதுவே குடும்ப

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்தியை சமூக உற்பத்தியாக்கி பெண்களின் அடிமை நிலையைக் களையும் முறையாகும்.

அடுத்து முக்கியமானது மனித இன மறு உற்பத்தி. குழந்தைப் பிரச்சனை

விஞ்ஞான வளர்ச்சியில் பாலுறவிற்கும் குழந்தைக்கும் தொடர்பில்லாத சமூக வளர்ச்சிக்கு நாம் வந்து விட்டோம். ஒரு குழந்தை போதும், இரண்டு போதும் என அரசே பிரச்சாரம் செய்து நடை முறைகளையும் வகுத்துத்தருகிறது. நாட்டின் பொருளாதார திட்டங்களுடன் குடும்பத் திட்டத்தையும் இணைக்கிறது. குழந்தையைத் தவிர்க்கத் தக்க பல வழிகள் உள்ளன. எதிர்பாராது கர்ப்பம் ஏற்படின் அழிக்கக்கூடிய வாய்ப்புகளும் நிரம்ப உள்ளன. விடுதலை பெறும் பெண்ணின் ஆதிக்கத்தில் மனித இன உற்பத்தி வருகிறது.

மேல் நாடுகளில் முதற் கர்ப்பத்தையே பெண் அழிக்கும் உரிமை பெற்றுள்ளாள். அங்கு குழந்தையைப் பொருள் முதல்வாத அடிப்படையில் பார்த்து நுகர் பண்டங்கள் தரும் வசதியையும் உணர்வையுமே முதன்மையாகக் கணித்து குழந்தையைச் சுமந்து, பெற்று, வளர்க்கும் தொல்லையி லிருந்து விடுதலை பெற பெண் விரும்புகிறாள். அரசு 'குழந்தைகளைப் பெறுங்கள்' என ஆர்வமூட்டுகிறது. ஆயினும் அரசோ, முதலாளிகளோ நுகர் பண்ட வாழ்க்கைத் தாம் குறையாத நிலையில் பெண் வாழ்ந்து குழந்தையைப் பெற்று வளர்க்கும் பணிக்கு அளவான மானியமோ, கூலியோ வழங்கத் தயாரில்லை.

முதலாளித்துவ யந்திரங்கள் தொடர்ந்து இயங்க மனித உழைப்பு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே.

இதனால் முதலாளிகளின் அரசு 'குழந்தைகளைப் பெறுங்கள்' எனக் கூக்குரலிடுகிறது. அது பலனளிக்காது போக மேலும் மேலும் யந்திரங்களைக் கூர்மைப்படுத்தியும்

www.padippakam.com



ரோபொக் (Robot)களை ஆக்கியும், மூன்றாம் உலக நாடுகளிலிருந்து நேரடியாகவும் திருட்டாகவும் உழைம்பாளர்களை வரவழைக்கிறது. அதுவும் போதாத வேளை மூன்றாம் உலக நாடுகளிலேயே யந்திரங்களை நிறுவி மலிந்த மனித உழைப்பைப் பண்டமாக்கி தங்கள் நாடுகளுக்கு இறக்குமதி செய்கிறது.

முதலாளித்துவமே சோஷலிசத்திற்கு வழி காட்டியது என்று மார்க்ஸ் கூறியுள்ளார். சமூக உற்பத்தியை ஏற்படுத்தியது முதலாளித்துவமே. ஆனால் உற்பத்திச் சாதனங்களின் தனி உடைமையை அது பேணிக் கொண்டது. பாட்டாளிகள் என்றோ ஒரு நாள் உற்பத்தி சாதனங்களையும் சமூக உடைமையாக்கி திட்டமிட்ட சமூக உற்பத்தியில் ஈடுபடவே செய்வர்.

சமூக அமைப்பிலும் முதலாளித்துவம் பல முன்னேற்றங்களைச் செய்யத் தூண்டப்பட்டது. மனித உழைப்பின் உபரி மதிப்பிலேயே முதலாளித்துவம் கட்டப்பட்டது. பெரும்பாலான சமூகத்தவரை உற்பத்தியில் ஈடுபடுத்த முயல்வது முதலாளித்துவம். முதலாளித்துவத்தின் கெடுபிடி யுத்தங்கள் உற்பத்தியைத் துரிதப்படுத்தின.

வீடுகளில் அடிமை நிலையில் அடக்கப்பட்டு வாழ்ந்த பெண்களையெல்லாம் சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தியது. ஆயினும் தொழில் நுட்பம் வாய்ந்த வேலைகளில் என்றும் அமர்த்தவில்லை. பெண்களின் உழைப்பு அவர்கட்கு ஓரளவு பொருளாதார சுதந்திரமளித்தது. முதலாளித்துவம் கூட்டுக் குடும்பங்களை, குடும்ப உறவுகளை உடைத்து மனிதரைத் தனிமைப்படுத்தும் அமைப்பு.

தனிமைப்பட்டதோடு பெண்களில் ஒரு பகுதியினர் பொருளாதார சுதந்திரமும் பெற்றனர். குடும்பம் நடத்த விரும்பியபோது இப்பெண்ணே தன் கணவனைத் தெரிந்து கொண்டாள். குடும்ப வாழ்வு வாய்ப்பாக இல்லை என்பதைக் கண்டதும் திருமண ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்

www.padippakam.com



உரிமையும் துணிவும் பெற்றுள்ளான். அதிக விவாகரத்தும் அதிக கருச்சிதைவும் நடைமுறையிலுள்ள நாடு அமெரிக்கா வாகும்.

முதலாளித்துவ அமைப்பில் ஆண்களைப் போன்று பெண்களும் பாலுறவில் சுதந்திரம் பெற்றுள்ளனர். திருமணத்தின் முன்பும் விவாகரத்தின் பின்னரும் பெண் களும் தாமாக விரும்பிய காதலரைத் தேட முடிகிறது. அது குடும்ப உறவில் முடிய வேண்டுமென்ற நியதியில்லை. முதலாளித்துவத்தில் குடும்பமாக வாழும்போது பெண் ஆணின் பாலுறவுக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறாள். கணவன் தவறின் அவள் குடும்பத்தைவிட்டுச் சுதந்திரமாக வெளியேறி விடுகிறாள். அல்லது அவளும் பாலுறவுக் கட்டுப் பாட்டைக் கணவன் அறியவே மீறுகிறாள்.

இத்தனை சுதந்திரமிருந்தும் குடும்பங்கள் எல்லாம் அங்கு உடைந்து விடவில்லை. காரணம் அரசு குடும்ப அமைப்பை வலியுறுத்துகிறது; சமூக அந்தஸ்து வழங்கு கிறது. வரிச்சலுகைகள் அளிக்கிறது. மத ஆதிக்கம் அது திருமணம், குடும்பம், குழந்தைகளை வற்புறுத்துகிறது, கத்தோலிக்க மதம் குடும்பக் கட்டுப்பாட்டை, கர்ப்பத் தடையை எதிர்க்கிறது. மற்றும் முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள், கலை இலக்கியங்கள் அனைத்தும் குடும்ப வாழ்க்கையை வலியுறுத்துகின்றன. இத்தனையும் கடந்து விவாகரத்துகளும் குடும்ப உடைவுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்கள் விடுதலை இயக்கமும் பலம் பெற்ற நாடு அமெரிக்காவே.

பாலுறவுக்கும் குழந்தைக்கும் தொடர்பில்லை என்பதை முன்னரும் கூறினேன். கர்ப்பத்தடை முறைகளின் வளர்ச் சியை முன் வைத்தே குறிப்பிட்டேன் அல்லாது ஆணுட னான பாலுறவை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்று ஆணுடனான பாலுறவின்றியே குழந்தை பெறத் தக்க வாய்ப்பு பெண்களுக்கு உள்ளது. பரிசோதனைக் குழாய்

www.padippakam.com



குழந்தையையே (Test Tube Baby) குறிப்பிடுகிறேன். இது விஞ்ஞான வளர்ச்சியின் மற்றொரு உயர்கட்டமே. சினைப் படுவதில் பிரச்சனை உள்ள பெண்களும் குழந்தை பெற முடிகிறது.

தாய் வழிச் சமுதாயத்திற்கு இது வழிகாட்டக் கூடியது. ஏனெனில் எந்த ஆணும் 'இது என் குழந்தை' என்று உரிமை கோர முடியாது.

குழந்தை பெறுவதில் ஆணின் பங்கு மிகக்குறைவு என்பதைப் பலர் உணர்வதில்லை. பெண்ணின் இரத்தமும் சதையும் சுமையும் பிரசவ வேதனையும் இரத்தம் சிந்தலுமே குழந்தை என்பதை ஆண் ஆதிக்க சமூகம் உணர்வதில்லை.

பெண் தன் கர்ப்பத்தில் வளர்த்தெடுக்கும் இக்குழந்தை சில வகையில் சிறப்புற்று விளங்கும். பரம்பரை நோய் களற்ற, உடல் வளமும் மன வளமும் கொண்ட இளைஞனது கருவுயிர் சினைப்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளலாம். எதிர் கால மனித இனத்தைச் சிறப்புற, சீராக வளர்த் தெடுக்க இவ்வழிகள் பயன்படவே போகிறது.

எத்தனை விஞ்ஞான முன்னேற்றம், பெண் விடுதலைக் குரல்கள் எழுந்த போதும் முதலாளித்துவ நாடுகளில் பெண் கள் முழுவிடுதலை பெற முடியாது. ஏனெனில் அரசியல், பொருளாதாரம், சமூகத்தில் இன்றும் ஆண் ஆதிக்கமே நிலவுகிறது; பெண் சமூக உற்பத்தியில் முழுமையாக ஈடுபட முடியவில்லை; குடும்ப உற்பத்தி சமூக உற்பத்தியாகி விடவில்லை.

மூன்றாம் உலகநாட்டுச் சுரண்டல்களில் முதலாளித்துவ நாட்டுப் பெண்களும் பங்கு பெறுகின்றனர். அதனால் முதலாளித்துவ நாட்டுப் பெண்களின் பொருளாதார நிலை ஓரளவு உயர்வாக உள்ளது. ஆயினும் அங்கு ஆண்களின் உழைப்புச் சுரண்டப்படுவது போலவே பெண்ணின் உழைப்பும் குடும்ப அமைப்பு மூலம் சுரண்டப்படுகிறது.

www.padippakam.com



பெண்ணின் குடும்ப உழைப்பிற்குக் கூலி கிடைப்பதில்லை. அவள் நாள் தோறும் 15 மணி நேரத்துக்குக் குறையாது உழைக்க நேரிடுகிறது. கணவனும் முதலாளிகளும் பெண்ணைக் குடும்ப அமைப்பு மூலம் அடக்கி ஒடுக்குகின்றனர்.

இத்தகைய ஆணாதிக்க, வர்க்க சமுதாய உலக அரங்கிலிருந்து பெண்ணுக்கு என்று விடுதலை கிடைக்கும்?

குடும்ப அமைப்பிலிருந்து அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்துடன் பெண் வெளியேறும்வரை பெண்ணினத்திற்கு விடுதலை கிடையாது.

குடும்ப அமைப்பு உடைவதால் சமூக அமைப்பு உடைந்து விடப்போவதில்லை. குடும்பம் என்பது சமூக அமைப்பை சிறுசிறு கூறாகப் பிரிப்பதே. இச்சிறு கூறுகளில் ஆண் பெண் சமத்துவமும் சம உரிமையும் சுதந்திரமும் அமைய முடியாவிடின் அது உடைந்து சமநிலை ஏற்படுவதில் ஒரு வித தவறுமில்லை.

இதனால் ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் வாழவேண்டுமென்றில்லை. இன்றும் ஒரே வீட்டில், ஒரே மாடியில், ஒரே விடுதியில், ஒரே ஓட்டலில் ஆண்களும் பெண்களும் வாழவில்லையா? ஒரு பெண்ணை தன் மனைவியாக, அடிமையாக ஆண் வைத்திருக்கும் சமூக அமைப்பே உடைந்துவிடும்.

சோஷலிச அமைப்பில் தேசிய இனங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கப்படுவதில்லையா? அதேபோல சுதந்திர அடிப்படையில் குடும்பங்கள் அமைவதில் தவறில்லை. ஆயினும் ஒரு பகுதியினர் என்றும் குடும்பங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பர் எனவே எண்ணுகிறேன். புதிய சமூகத்தில், சமுதாயத்தின் தேவையை ஒட்டி பெண்கள் குழந்தைகளைப் பெறுவர். அது அவர்களது அரசியலுணர்வு, சமுதாய உணர்வை ஒட்டியது. அக்குழந்தை

www.padippakam.com



கர்ப்பத்தில் வளர்வது தொடக்கம் பிறந்த பின்னர் வளர்ப்பது, கற்பிப்பது அனைத்தையும் சமூகம் பொறுப்பேற்கும்.

வர்க்க சமுதாயத்துடனேயே தனிச் சொத்தும் குடும்ப அமைப்பும் ஏற்பட்டது, பெண்ணினம் சமூக உற்பத்தியிலிருந்து ஒதுக்கப்பட்டு அடிமைப் படவும் நேர்ந்தது.

வர்க்கச் சமுதாயம் ஒழிக்கப்படுவதைத் தொடர்ந்து குடும்பம் உடைவதில் வியப்பு எதுவுமில்லை. அங்கு பெண் விடுதலை பெறுவாள். ஆண்களுக்கும் வீட்டில் அடிமைகளை அடக்கி ஒடுக்கும் பணியும் இருக்காது.

சீனத் தலைவர் மாவோ கம்யூன் முறையான சமூக அமைப்பைக் கொண்டுவந்தார். இங்கு பெண்களின் வேலைப் பளு குறைவதைக் கண்டோம். தனிச் சொத்தற்ற இவ் வடிவம் பெண்களின் விடுதலைக்கு முன்னோடியாக அமைந்தது. வர்க்க சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு பரம்பரையாக, 3500 வருடங்களுக்கு மேலாக, அடிமைப்பட்டிருந்த பெண்ணினத்தின் விடுதலைக்கு முதன் முதலில் இப்புரட்சியே அங்கு வழிகாட்டியது. பெண்ணினத்தின் கால்களைக் கட்டி, அடிமைகளாக்கி, அழகு பார்த்த ஆணாதிக்கத்திற்கு அங்கு முடிவு கட்டப்பட்டது.

ஆயினும். அங்கும் குடும்ப அமைப்பு நிலவுகிறது; நிலப் பிரபுத்துவத்தின் சிந்தனை, கருத்தியல்களின் மிச்ச சொச்சங்கள் இங்கும் நிலவவே செய்கின்றன. ஆண் தன் இரத்தத்தில் ஊறிட ஆதிக்கத்தை, அரசியல் சமூக உணர்வுகள் குன்றிய வேளை காட்டவே செய்வான். இன்று இக் கம்யூன் அமைப்புகளை ஒழிக்கவும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது பெண்ணினத்தின் வளர்ச்சியை, விடுதலையைத் தேக்கும் முயற்சியே.

சோவியத் நாட்டில் பெண்ணினத்தின் விடுதலை பற்றி லெனின் கண்ட கனவுகள் நிறைவேறவில்லை. அரச முதலாளித்துவத்தின் உயர் வளர்ச்சியே அங்கும் குடும்பத்

www.padippakam.com



தோடு பெண்ணினத்தையும் பிணைத்து, பெண் விடுதலை தேங்கியிருப்பதைக் காண்கிறோம்.

சீனாவிலும் அமெரிக்காவிலுமே அதிக விவாகரத்துகள் வழங்கப்படுகின்றன. சீனாவில் இவ்வுரிமைகள் எளிதாக்கப்பட்டுள்ளன, தனிச் சொத்துடைமையற்ற நிலையும் பிள்ளைகள், குடும்பப் பொறுப்புகள் குறைந்த வாய்ப்பும் அரசியல் பொருளாதாரச் சுதந்திரமும் இலகுவான விவாகரத்திற்கு வழி காட்டுகின்றன.

உலகின் மிகப்பெரிய தனிச் சொத்தற்ற, உழைத்துச் சுரண்டப்படும் பாட்டாளிகள் பெண்ணினமே. இவர்களது விடுதலையுடனேயே தனிச் சொத்துடைமையற்ற, சமத்துவ உலகைக் காண முடியும் என்பதை மார்க்சிய அறிஞர் அனைவரும் ஒப்புக்கொள்வர். அடிமைகளிலும் பார்க்கச் சமுதாய உணர்வு மிக்க சுதந்திரமான ஆண், பெண், இனத்தவராலேயே உற்பத்தியைப் பெருக்கி கம்யூனிச சமுதாயத்தை அமைக்க முடியும். உற்பத்தியை மக்கள் தேவைகளுக்கேற்ப வளர்க்க முடியாததினாலேயே அடிமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூக அமைப்புகள் வீழ்ச்சியடைந்தன என்பதே மார்க்சிய விஞ்ஞானம். பெண்ணடிமைச் சமூகமும் வீழ்ச்சியடைவது உறுதி.

புராதனச் சமுதாயம் குடும்ப முறையில் அமைக்கப்படவில்லை. அன்று பெண் சுதந்திரமாக வாழ்ந்தாள். இடையில் அடிமைப்பட்ட பெண் இன்று சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறாள். அவளது வரலாறு அடிமைத் தளையுடன் முடியப் போவதுமில்லை. அவள் விடுதலை பெறும்போது குடும்ப அமைப்பு நிலைபெறப் போவதுமில்லை. இன்றைய குடும்ப அமைப்பை ஆணாதிக்கமே ஏற்படுத்தியது. எதிர்கால சமூக அமைப்பை பெண்ணினமே தீர்மானிக்கும். மனித இன மறு உற்பத்தியிலும் சமூக உற்பத்தியிலும் ஈடுபடக்கூடிய வாய்ப்பு



படிப்பகம்

www.padippakam.com



பெண்ணினத்திடம் மட்டுமே உள்ளது என்பதை ஆணினம் முற்றும் மறந்துவிடப்படாது.

பெண்ணின் விடுதலையுடனே ஆணும் விடுதலை பெறுவான்; உலகத்தொடு பிணைக்கப்பட்ட அடிமைத் தளையும் அப்பொழுதே அறுந்து விடும். 'பெண்ணடிமை தீரு மட்டும் மண்ணடிமை தீராது' என்று பாரதிதாசன் கூறியது தேசிய விடுதலையின் குரலே.

பெண்ணடிமை தீரும் வரை உலகத்தின் அடிமைத்தனம் தீரப் போவதில்லை. இதுவே சர்வ தேசியக் குரலாகும்.

★

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

ஒரு மண்ணின் கதை
மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!
பொய்மையின் நிழலில்...
அபலைகள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

**பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை-108.

www.padippakam.com

## குறிப்புகளுக்காக :

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணடிமை தீர

பெண்ணடிமை நிலை மிகவும் பயங்கரமானது; கொடுமையானது; பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையிலும் பார்க்க மிகச் சிக்கலானது.

மனித இன வரலாற்றில் முதலாவது வேலைப் பிரிவினையுடன் தாய் வழிச் சமுதாயம் வீழ்ச்சியுற்றது. அத்தோடு உலகின் முதலாவது அடிமைத்தனமும் தோன்றியது. இதன் பின்னர் இன்றுவரை தோன்றிய சமூக அமைப்புகள், அரசுகள் அனைத்திலும் நிலவும் பகைமை உறவுகள் அனைத்திற்கும் பெண்ணடிமை நிலையே அடிப்படையாக அமைந்துள்ளது.

'உலகக் குடித்தொகையில் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களிலும் பார்க்க இரு பங்கு நேரம் உழைக்கின்றனர். நாள்தோறும் சராசரி 15 மணி நேரத்திற்குக் குறையாது, உலகின் மூன்றில் இரண்டு பங்கு வேலைகளில் உழைத்து, பத்திலொரு பங்கு வருமானமும் நூற்றிலொரு பங்கிற்கும் குறைவான சொத்துரிமையும் கொண்டுள்ளனர்' என உலகப் பெண்களின் நிலை பற்றிய ஐ.நா. சபையின் 1985-ம் ஆண்டறிக்கை கூறுகிறது. இத்தகைய சமத்துவமற்ற, அநீதியான, சுரண்டலான சமூகம் நீடிக்கும் வேளை ஆணாதிக்க உலகம் ஜனநாயகம், சுதந்திரம், நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் எனப் பேசுவது எத்தனை ஏமாற்று.

பெண் எவ்வாறு அடிமைப்பட்டாள்? இன்றும் எவ்வாறெல்லாம் அடக்கி ஒடுக்கப்படுகிறாள்? அவளது உழைப்பு எவ்வாறெல்லாம் அபகரிக்கப்படுகிறது? அவளது விடுதலைக்கு வழியென்ன? வரலாற்றில் அவளது எதிர்காலமென்ன? இந்நூல் விஞ்ஞான பூர்வமாக விடை கூறும்.

ஆண்கள் தம் எஜமான் நிலையை உணர்ந்து வெட்கப்படவும் பெண்கள் தம் அடிமைநிலையை மட்டுமல்ல உயர்ந்த நிலையையும் எதிர்காலத்தையும் எண்ணிப் புத்துணர்வு பெறவும் இந்நூல் துணைபுரியும். அத்தோடு ஆணாதிக்க சமூகத்திற்கும் அவர்கள் தம் நலனுக்காக ஆக்கிய குடும்ப அமைப்புக்கும் இச்சிறு நூல் வெடிகுண்டு வைக்கிறது.

---

Wrapper Printed at AR prints
375-8 Arcot Road MADRAS-600 024 INDIA

படிப்பகம்